# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாய் நடைபெறும்

## ஓர்மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

| | | |
|---|---|---|
| புஸ்தகம் I. Vol I. | சௌம்ய௵ தைமாதம் January 1910 | சஞ்சிகை 5 No. 5 |


## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினானே."

**பிரிட்டிஷ் பார்லிமேண்டு.**

பிரிட்டிஷ் துரைத்தனத்தை நடத்திவரும் மந்திரிமார்கள் பார்லிமெண்டிலுள்ள கக்ஷிகளிரண்டில் ஏதோ ஒன்றுக்கு 'நாயகர்கள்' என்பது நம்மவர்களுக்குத் தெரியும். சென்ற நான்கு வருஷங்களாக லிபரல் கக்ஷியார் துரைத்தனத்தை நடத்திவந்ததில் காரியங்கள் சீராகத்தான் நடந்து வந்திருக்கின்றன. என்றாலும், நாளது வருஷத்திய "பட்ஜெட்டு" (என்றால், வரவுசெலவுக் கணக்கு) விஷயத்தில் சென்ற பலமாதங்களாய்த் துரைத்தனக் கக்ஷிக்கும் எதிர்க்கக்ஷிக்கும் வழக்கு அதிகரித்து, இது விஷயத்தில் மகா ஜனங்களுடைய அபிப்பிராயந் தெரியவேண்டி, பார்லிமெண்டு மெம்பர்களை மறுபடி நியமனம் செய்வதற்காகப் பிரயத்தனம் நடந்துவருகிறது. இதில் நமக்கு என்ன ஆகவேண்டுமென்று இருப்பதற்கில்லை. லிபரல் கக்ஷியாரே மறுபடி அதிகாரத்தை வகித்தால்தான் நமக்கு க்ஷேமம். ஏனெனில், இந்தியா கவர்ன்மெண்டில் இப்போது நடந்துவரும் திருத்தங்களுக்கெல்லாம் காரணராகிய விகௌண்டு மார்லியும், அவருக்கு உதவியாய் உழைத்து வந்திருக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களும் இந்தக் கக்ஷியையே சேர்ந்தவர்களாம். இவர்கள் ஆரம்பித்த காரியம் முடிவு பெறுவதற்கு முன் எதிர்க்கக்ஷி பலத்தால், அதனால் நமக்கு நன்மை யதிகரிப்பதற்கில்லை.

இவ்விரு திறத்தாருக்கும் வரவு சேலவு விஷயமாய் வழக்கு எப்படி ஏற்படலாமென்று நம்மிலனேகருக்குச் சந்தேக முண்டாகலாம். ஒரே ஒரு விஷயத்தில்தான் தகரார் பலத்துவிட்டது. துரைத்தனத்திற்குக் கப்பற்படை வகையிலும், இல்லாதவர்களைக் காப்பாற்றும் வகையிலும், இன்னுஞ்சில சில்லரை வகைகளிலும் செலவு அதிகரித்துவிட்டது. இதற்கு வரவு வேண்டுமென்று தேடிப்பார்த்ததில், இந்தியாவிலிருப்பது போலவே நிலவரிவசூல் செய்வது நியாயமென்றும், அவசியமென்றும், பிரதான மந்திரிகளுக்குக் கண்டதால், அ

யும் வரவிற்சேர்த்து பார்லிமெண்டாரைக் கணக்கு ஒப்புக்கொள்ளும்படி கேட்டார்கள். ஆங்கிலேய ராஜ்ஜியத்தில் சாகுபடி பூமிகள் அனேகமாய்ப் பிரபுக்கள் கையிலிருப்பதால், இக்கந்தாயத்தை அவர்கள்தான் செலுத்த வேண்டிவருகிறது. கந்தாயம் கொடுப்பதென்ருல் யாருக்கும் மனம் வருகிறதில்லை. அதைத் தப்பித்துக்கொள்ள வேண்டியே இந்தக்கலகம் ஆரம்பமாகி இருக்கிறது. வாஸ்தவமிப்படியிருக்க, இருதிறத்தாரும் தத்தம் கக்ஷி ஜெயமடையவேண்டித் தற்காலம் பேசுவதையும் எழுதுவதையும் பார்த்தால், சிரிப்பு, துக்கம் இரண்டிற்கும் இடமுண்டாகிறது. தடித்த பொய்களை இருதிறத்தாரும் கூசாமல் பேசிவருகிருர்கள். முடிவு எப்படியாகுமோ தெரியவில்லை.

ராஜப் பிரதிநிதி யவர்களுடைய விஜயம்.

சென்றமாதம் ராஜப்பிரதிநிதியாகிய மின்டோ பட்டவர்த்தனர் மதிராஸுக்கு விஜயம்செய்ததில், நம்மவர்கள் அவருக்கு முகமன் கூறித்தங்கள் குறைகளையுஞ் சொல்லிக்கொண்டார்கள். அதற்கெல்லாம் அவர் சரியான பதில் சொல்லி வந்ததில், துரைத்தன விமர்சனவிஷயமாய் மொழிந்தது நாமனைவரும் சம்மதிக்க வேண்டியதே. அவர் கூறியது இது. விமர்சனச் சட்டத்தை யனுசரித்துத் தற்காலம் நடந்துவரும் நடவடிக்கைகளில் அனேகங்குறைகள் இருப்பது சகஜம். என்ருலும், இப்படிக்குறைவுகள் காணுவது அதிசயமல்ல. இப்பெரிய ராஜ்ஜியத்தில் உள்ள சகல ஜனங்களுக்கும் சம்மதமாக நடப்பது யாருக்கும் சுலபமன்று. ஆனல், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஏதேனுமோர் விஷயம் குறைவென்று நிஷ்கரிஷையாய்த் தெரிந்துவிட்டால், அதை அவர்கள் உடனே பரிகரிக்கத் தயாரா யிருப்பதுகொண்டு, ஜனங்களில் விவேகிகளெல்லோரும் கவர்ன்மெண்டாருக்கு அனுகூலமாக நடந்து எடுத்தகாரியம் கைகூடும்படி செய்யவேண்டுமென்பதே. இதற்கு யாரும் ஆக்ஷேபணை சொல்வதற்கில்லை. நாம் கேட்டுக் கொள்வதெல்லாம் ராஜாங்கவிஷயத்தில் விவேகிகளாகிய நம்மவர் ஒருமனப்பட்டுச் சொல்வதற்குக் கவர்ன்மெண்டாரும் கொஞ்சம் மரியாதை வைக்கவேண்டு மென்பதேயாம். சென்ற பத்துவருஷங்களாக நடந்த பெரிய நடவடிக்கைகளில் காணும் பலதோஷங்களும், அதனல் நம்மவர்களுக்குண்டான அதிருப்தியும், இந்தச் சில்லரை விஷயத்தைச் சர்க்கார் கவனியாததனல் வந்தன வென்றே நம்மில் அனேகர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

மதிராஸ் சட்ட நிருபண சபை.

இச்சபைக்கு மெம்பர்களாகவேண்டிச் சர்க்கார்நியமனங்களும், மகா ஜனங்களுடைய நியமனங்களும், நமது ராஜதானி யெங்கும் துருசாய் நடந்துவருகின்றன. நாளது வரையில் நியமனமானவர்களைக் கவனிக்குமிடத்து மொத்தத்தில் அதிருப்திபடுவதற்கு நியாயம் காணவில்லை. அனேகமாய் ஏற்பட்ட பெயர்களெல்லாம், முந்தியே பொது நன்மைக்காக உழைத்து ஜனங்களாலும் சர்க்காராலும் நன்குமதிக்கப் பெற்றவர்களேயாம். முக்கியமாக வயது, ஞானம், சீலம் ஆகிய மூன்று விஷயங்களிலும் நிகரற்றவராகி விளங்கும் திவான் பஹதூர் ஸ்ரீமான்-ரகுநாதராயரவர்கள் இச்சபைக்கு மெம்பராக ஏற்பட்டிருப்பது நாம் எல்லோரும் கொண்டாடத்தக்கதே.

சபைக்கு மெம்பராகவேண்டி சிரமப்பட்டவர்களெல்லாம் மனதிற் பதியவைத்துக்கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. இப்புதுச் சபை பழைய சபையைப்போன்றதன்று. தேசக்ஷேம விஷயமாய் நிர்வகிக்கவேண்டிய பாரம் வெகுவாயதிகரித்துவிட்டதால், அவரவர் தத்தம் சக்தியையும், அனுபவத்தையுங்கொண்டு ஏற்ற உதவிசெய்து, சர்க்காருக்கும், மகா ஜனங்களுக்கும் நாணயமாக நடந்துகொள்வார்களென்று நாம் மனப்பூர்வமாக நம்புகிருேம்.



திவான் பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரவர்கள்

முதல் ஐந்து வருஷங்களுக்குள் நம்மவர்கள் நடந்து கொள்வதை யனுசரித்துத்தான் நமக்குமேலு மேலும் நன்மையோ தீமையோ விளையுமாதலால், அதைக் கவனித்து மெம்பர்கள் நடப்பாராக.

**ஓட்டுவேண்டும் அங்கிலேயஸ்திரீகள்.**

இவர்கள் தங்களுடைய மனோரதம் நிறைவேறுவதற்காகக் கொஞ்சகாலமாய்ச் செய்துவரும் விசித்திர காரியங்களில் இரண்டொன்றை முந்தி நாம் குறிப்பிட்டிருக்கிறோம். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்குமென்பது இவர்கள் மதம். ஆகவே, பிரதான மந்திரிகள் பிரசங்கம் செய்யுமிடத்திலும், பார்லிமெண்டிலும், வேறிடங்களிலும், சமயம் வாய்த்த பொழுதெல்லாம் இவர்கள் கல்லெறிந்தும், உரக்கக் கூவியும், வேறுவிதமாய் இடையூறுகள் விளைவித்தும் வருகிறார்கள். அவற்றையெல்லாம் சகஜமென்று வைத்துக்கொண்டாலும், இம்மாதிரிக்குற்றத்திற்காகத் தண்டனையடைந்து ஜெயிலில் அடைப்பட்டபிறகு, இவர்களில் சிலர் செய்த காரியம் இதுவரையில் நாம் கேட்டேயிராத விநோதம் விளைவிப்பதாம். ஏனெனில், இந்த ஸ்திரீகளுடைய மற்றைய உபாயங்களெல்லாம் சரிவராமற்போய் இவர்கள் கைதிகளானதும், ஜெயிலிலிருந்து விடுதலை பெறுவதற்காக யுக்தி செய்து, சாப்பிடுவதில்லையென்று தீர்மானித்துக்கொண்டார்கள். பட்டினியிருந்து பிராணனை விட்டால் அது ஜெயிலதிகாரிகளை உபத்திரவிக்குமாதலால், அவர்கள் வைத்தியர்களுதவியைக்கொண்டு, இந்தப் பிடிவாதக் காரிகளில் சிலரைக் கைகால்களைப் பிடித்துக் கிடத்தி ரப்பர்க் குழாய்கள் மூலமாய், வாய் வழியாகவும், மூக்கின் வழியாகவும், பால் போன்ற ஆகாரத்தையுட் செலுத்தி வந்ததாகவும், அதற்காக அவர்கள் பிராது செய்ததில், ஜெயிலதிகாரிகள் அக்கிரமஞ் செய்ததாகத் தீர்மானங்கிடைத்ததாகவும், அதனால் இந்த ஸ்திரீகள் விடுதலைபெற்றுப் பழையபடி கலகம் ஆரம்பித்திருப்பதாகவும் வதந்தி.

**தென்னிந்தியா உபாத்தியாயச் சங்கம்.**

'அழுத பிள்ளைக்குப்பால்,' என்பது பழையஅனுபவ மாதலால், மற்றவர்களைப் போலவே, நமது நாட்டு உபாத்தியாயர்களும் தமது குறைகளைத் தீர்த்துக் கொள்ளச் சங்கமொன்று சென்றவருஷம் ஏற்படுத்தியதில், டிசம்பர்மீ 21—22 தேதிகளில், திருச்சிராப்பள்ளியில் இரண்டாமுறை ஒரு மகாநாடு கூடினார்கள். ராஜதானியில் எல்லாவிடங்களிலுமிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பண்டித ஸ்ரீமான்-எம்.ரங்காசாரியாரவர்கள் பிரஸிடெண்டாயிருந்து காரியத்தைச் சீராகநடத்தினார்கள். இரண்டு விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்பெற்றன. முதலாவது, சர்க்கார்உத்தியோகஸ்தர்களுக்குப் பென்ஷன் இருப்பதுபோல், பள்ளிக்கூடங்களில் உழைத்துவரும் உபாத்திமார்களுக்கும், 'ஆபத்துதனம்' ஏற்படவேண்டுமென்றும், அதற்குச் சர்க்கார் செய்துவரும் பிரயத்தனம் சீக்கிரம் நிறைவேற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இரண்டாவது, மெட்ரிகியுலேஷன் பரீக்ஷையில் தேறமாட்டாதவர்களை விசேஷமாய் உத்தேசித்து, அவர்களுக்கு அனுகூலமாக 'ஸ்கூல் பைனல்' என்ற பெயருடன் வித்தியாப்பியாசத்தைச் சீர்திருத்த ஏற்பட்டிருக்கும் உபாயத்தைப்பற்றியது. இவ்விரண்டையுங்குறித்து இச்சங்கத்தார் ஒப்புக்கொண்ட தீர்மானங்கள் சர்க்காருக்கும் சம்மதமாகுமென்று நம்புகிறோம்.

**லாஹோர் காங்கிரஸ்**

சென்ற வருஷம் மதிராஸில் ஆகிய தீர்மானத்தை யனுசரித்து நாளது வருஷம் லாஹோரில் இம்மகாசபை கூடிக் காரியங்கள் கிரமமாய் நடந்ததற்காகச் சந்தோஷப்படுகிறோம். இரண்டு மூன்று வருஷங்களாக இம்மகாசபையில் முன்னிருந்த ஐகமத்தியம் குறைந்து வருவதாகவும், அதனால் நமது முக்கிய நாயகர்க

ளிற் சிலர் பழையபடி சிரத்தையுடன் உழைப்பதற்கு இஷ்டமில்லாமல் விலகி யிருப்பதாகவும், நம்மில் அனேகருக்குக் காணுகிறது. லாஹோர் காங்கிரஸுக்கு ஸ்ரீமான்-ஸர் பேரோஸ்ஷா மேடா அவர்களை அக்கிராசனாதிபதியாக இருக்கும்படி மகா ஜனங்களெல்லோரும் ஒரே மனதாய்க் கேட்டு அவரும் ஒப்புக்கொண்டு, பிறகு திடீரென்று கடிதமெழுதித் தன்னாலாகாதென்று சொல்லி விட்டதைப் பார்க்குமிடத்து நாம் மேற்சொல்லியதற்கு இதுவும் ஒரு சாக்ஷியமாகக் காணுகிறது. லாஹோர் நண்பர்கள் இத்தருணத்தில் சஞ்சலப்படாமல், உடனே ஸ்ரீமான்-மதனமோஹன மாளவீயரை மேடாவுக்குப் பிரதியாக நியமனஞ் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, காங்கிரஸ் காரியத்தை நிறைவேற்றியதற்காக நாம் அவர்களுக்கு நன்றி யறிவுள்ளவர்களாயிருக்கிறோம். ஸ்ரீமான்-மாளவீயரும் தனக்குப் பல அவசரகாரியங்களிருந்தும் அதைப் பாராட்டாமல் இஷ்டர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து, ஒருவாரத்திற்குள் தாம் சொல்ல வேண்டிய விஷயங்களை ஜோடித்து எல்லோரும் மெச்சும்படி பேசி மற்றபடி நடக்க வேண்டிய அமுல்களையும் கிரமமாய் நடத்தியதற்காக அவருக்கும் நாம் மனப்பூர்வமாக வந்தனஞ் செய்கிறோம்.

**மகம்மதியர்களுடைய சிரத்தை.** வித்யாவிஹாரிணி விஷயத்தில் சில மகம்மதிய நண்பர்களுக்கும் அபிமானம் இருப்பதாகத் தெரிந்து மெத்தவும் சந்தோஷப்படுகிறோம். மஹம்மது நபீ விஷயத்திலும், அவருடைய மதவிஷயத்திலும் நம்மவர்களுக்கு ஒன்றுந் தெரியாதென்றே சொல்லிவிடலாம். இதனாலேயே பரஸ்பர சினேகமதிகரிப்பதற்கு இடமில்லாமலிருக்கிறது. அப்படியே இந்துக்களுடைய மதம் ஆசாரம் முதலியவைகளை மகம்மதியர்களும், அறியவேண்டியது அவசியம். ஆதலால் இனி மாதந் தவறாமல் மகம்மதீய மதம், ஆசாரம், சரித்திரம் இவற்றைக் குறித்து நன்றாய்த் தெரிந்தவர்களைக்கொண்டு வியாசங்கள் எழுதிவருவதாக உத்தேசித்திருக்கிறோம். மார்கழிமீ விஹாரிணியிலும் இந்த நம்பரிலும் ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகள் இந்து மகம்மதீயர் இருவருக்கும் சம்மதமாகும்படி செய்த உபதேசங்களிற் சிலவற்றை விளக்கி யிருக்கிறோமல்லவா? அதேமார்க்கத்தை யனுசரித்து ஒருவருக்கும் விரோதமின்றி, எல்லோருக்கும் சமரசமாய் எழுதிவரவேண்டுமென்பது நமது கோரிக்கை. மகம்மதீய இஷ்டர்களும் இந்துஸ்தானி தெரியாத தங்கள் மதஸ்தர்களுக்கு உபயோகமாகும்படி தங்கள் மத சரித்திரத்தையும் ஆசாரங்களையும் விளக்கி எழுதி நம்மைக் கௌரவப்படுத்துவார்களென்று கோரியிருக்கிறோம்.

**சொந்தவிஷயம்.** நான்கு மாதங்களாக "விஹாரிணி"யைப் பிரசுரஞ்செய்து பெரியோர்களுடைய அபிப்பிராயந் தெரியவேண்டிப் பல திக்குகளிலும் அனுப்பி வந்ததில், அனேகர் உற்சாகமூட்டியும், சிலர் அதிற் காணுங் குறைவுகளைச் சுட்டிக் காட்டியும் வந்திருப்பதால், குறைவுகளைப் பரிகரிக்க முயன்று இந்த நம்பர் முதல் இரண்டொரு மாறுதல்களைச் செய்திருக்கிறோம்:—முதலாவது, பொருளடக்கத்திற்கானும் மாறுதலாம். "விஹாரிணி"யின் விஷயங்களை நான்கு காண்டங்களாகப் பிரித்து அதை யனுசரித்து விஷயங்களை ஜோடித்து வருவது படிப்பவர்களுக்கு அனுகூலமாயிருக்குமென்று நாம் எண்ணியதில், இஷ்டர்களிலனேகர் அது சுகமில்லையென்றும், எல்லா வகைகளிலும் காணும் விஷயங்களை விரவியமைப்பது நலமென்றும், சொல்லியதால், எமதபிப்பிராய மெப்படியிருந்த போதிலும் இஷ்டர்கள் சொல்லியதை அசட்டை செய்யாமல், இந்த நம்பர் முதல் "பொருள்களை" அவர்களிஷ்டம்போல் அடுக்கி வைத்திருக்கிறோம்.




ஸ்ரீமான் பண்டிதர் மதன மோஹன் மாளவீயா

இரண்டாவது, நாம் வடமொழிப் பதங்களை அபரிமிதமாக உபயோகப்படுத்தி, அதனால் படிப்பவர்களுக்கு அனாவசியமாய்க் கஷ்டம் உண்டாக்குவதாக நமது இஷ்டராகிய சுதேசமித்திரனும் வேறு இரண்டொரு நண்பர்களும் அபிப்பிராயப் படுகிறார்கள். நமக்கோ வடமொழிப்பதங்களை உபயோகித்தே தான் தீருவதென்கிற பிடிவாதமில்லை. வடமொழியானாலும், தென்மொழியானாலும், சுதேசியானாலும், விதேசியானாலும், இவ்விஷயங்களில் நமக்குள்ள நோக்கமெல்லாம் ஒன்றேதான். அதாவது, சொல்லவந்ததை நடைபெறும் வாசகங்களைக் கொண்டு நன்கு விளக்கிப் படிப்பவர்களுக்குச் சுகத்தையும் அறிவையும் புகட்டவேண்டுவதேயாம்.

ஆனால், தமிழிலும், தமிழரிலும், நாமிக்காலத்திலறியவேண்டிய கலைகள் புதிதாகவந்து அண்டுபவைகளாதலால் அவற்றையனுசரித்துப்பதங்களும் ஆங்காங்கு பலதிக்குகளிலிருந்து வந்து தான் தீரவேண்டும். இதற்குச் சுதேசமித்திரனே முதற் சாக்ஷி. இப்படியிருக்க, நாம் "படாடோபத்திற்காகப்" பதங்களைப் பிரயோகிப்பதாக நம்மைக் கடிந்து கொள்வதை யோசிக்குமிடத்தும், நான்கு மாதத்திற்குள் நமதுவசன நடை "மித்திர" னிஷ்டம்போல் ஆகாததற்காக நம்மிடத்தில் ஆயாசப்படுவதைக் கவனிக்குமிடத்தும், நமக்குச் சற்றுவிசாரமுண்டாகிறது. 'மித்திரன்' பழம்புண்ணாளியாதலால், புதியதாகக் கைபழகுபவர்களுடைய கஷ்டநிஷ்டூரங்களை நன்றாய்த் தெரிந்தவர். ஆதலால், அவரைப்பரியாரியாக நாம் கொண்டிருப்பதில், இனியவர் ஒரு கையாலடித்தாலும், மற்றொருகையால் ஆதரிப்பாரென்று நம்புகிறோம். மொத்தத்தில் பேசுமிடத்து, இதுவரையில் நம்மைக் கடிந்துகொண்டவர்களெல்லோரும் "பதங்கள்" விஷயமாய்க் குறைகூறுவதன்றி 'வாசக' விஷயமாய் நமக்குத்தெளிவிப்பதொன்றுங் காணவில்லை. தமிழிலும், மற்றதேசீய பாஷைகளிலும் நமக்குக் காணுங் குறைவோ வாசகத்தைப் பொறுத்ததேயன்றிப் பதங்களைப்பொறுத்ததல்ல. இங்கிலீஷ் முதலிய பாஷைகளில் வசனநடை படிப்பவருக்கு எவ்வெவ்விதங்களில் ருசியும் சுகமும் கிடைக்கின்றனவோ, அதில் நூற்றிலொருபங்குகூடத் தற்காலம் நடைபெறும் தேசீயபத்திரிகை வகைகளில் உண்டாவதில்லையென்பது பிரத்தியக்ஷம். ஆதலால், அம்மாதிரி வசனநடை உண்டாகவேண்டி "விஹாரிணி" பிறந்திருப்பதினிமித்தம், அந்த உத்தேசம் நிறைவேறவேண்டி, அபிமானிகளெல்லோரும் ஏற்ற உதவி செய்வார்களென்று நம்புகிறோம். அதுவோ வெகு பெரிய காரியம். ஆதலால் காலக்கிரமத்திற்றானாகவேண்டும். ஆயிரக்கணக்காகப் புத்திமான்கள் உழைக்கவும் வேண்டும். இப்படியிருப்பதுகொண்டு "விஷயதானஞ்" செய்பவர்களும், யுக்தி சொல்லுபவர்களும், அவரவர் மனோதர்மத்தையும் ருசிபேதத்தையும் அனுசரித்து எழுதிவந்து "விஹாரிணி" மேற்கொண்டிருக்கும் காரியத்தை முடிவுபெறச் செய்வாரென்று எதிர்பார்த்திருக்கிறோம். அதற்கு இதுவரை நடந்துவருவதுபோல் "பதங்கள்" விஷயமாய்க் கலகஞ் செய்வதுமட்டும் போதாது. நடைபெறுந்தமிழில், மணற் சோறாக்குவதைவிட்டுக் காரசாரமாய் எழுதுவதற்குப் பிரயத்தனப்படுவதே நன்னெறியென விவேகிகள் ஒப்பியிருப்பதை இஷ்டர்களறிதல் வேண்டும்.

---

## கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றிய வரலாற்றின் ஆராய்ச்சி

ஸ்ரீமான்-ஸி. கே. நாராயணசாமி முதலியார்

இது விஷயமாக ஓர் வியாச மெழுதிப் பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்த வேண்டுமெனப் பலகால் முயற்சித்தும் பயன் பெறுமல் இது சமயம் அவகாசந்தந்த திருவருட் செயலுக்கு வந்தித்து இவ்வியாசத்தைத் தொடங்குகிறேன்.

"கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது' என்னும் விஷயமானது சென்னைத் துரைத்தனக் கல்விச் சாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்த அஷ்டாவதானம் ஸ்ரீமான்-வீராசாமி செட்டியாரென்பவரால் 1889ஹு பதிப்பித்த "விநோதரஸமஞ்சரி" என்னும் புத்தகத்திலும், சென்னை யூனிவர்ஸிடி டெக்ஸ்டு கமிட்டி மெம்பராகிய ஸ்ரீமான்-வை. மு. சடகோபராமானுஜ ஐயங்காரவர்களால் வெளியிட்டு வந்த "மேட்ரிகுலேஷன் தமிழ் நோட்ஸுகளிலும்," திருநெல்வேலி தண்டபாணி சுவாமிகளால் பாடப்பட்டு அச்சிட்டுள்ள "புலவர் புராணத்திலும்," யாழ்ப்பாணம் உதயதாரகைப் பத்திராதிபரால் தொகுக்கப்பட்டுள்ள "பாவலர் சரித்திர தீபகத்திலும்," காணப்படுகிறது. மேற்கூறிய நான்கு புத்தகங்களிலும் விவரிக்கப்படும் இராமாயணம் பாடியரங்கேற்றிய வரலாறு இரண்டொன்றில் மட்டும் சிறிது வேறுபட்டிருந்தாலும், பெரும்பாலும் தம்முள் ஒத்துவருவதைக் காணலாம். இங்ஙனம் காணப்படும் விஷயங்கள் இராமாயண காவியத்தின் கருத்துக்கு முற்றிலும் வேறுபட்டு, முன்னுக்குப் பின் முரணுப் அறிஞர்கள் அவாவுடன் ஏற்று மகிழ்தற் கிடமின்றி அருவெறுக்கத்தக்க விதமாய் அமைந்து கிடக்கிறதென்பது அதனைச் சற்றுஊன்றி விசாரித்தறிவார்க்குத் தெற்றெனவிளங்காமற் போகாது. இத்தகைய ஆபாசம் நிறைந்த பொய்க்கதைகளை உண்மையென நம்பி அறிஞர்கள், உயர்தரப் பாடசாலைகளில் மாணுக்கர்கட்கு எங்ஙனம் பாடமாக வைக்கின்றனரோ வென்பதை நாமறியக்கூடவில்லை. ஒருக்கால் அவற்றின் உண்மை நிலை இதுவெனக் கண்டறிய அவகாசம் கிடையாதொழிந்த காரணத்தால் அதனைக் கொள்ள நேர்ந்ததோ? அல்லது இவ்வரலாற்றை ஆதியில் வெளியிட முன் தோன்றிய பண்டிதர்கள் செவ்வனே ஆராய்ந்து வெளியிட்டிருக்கக்கூடும் என்ற நம்பிக்கையாலோ? மற்றெக் காரணமோ நாமறியோம். எங்ஙனமாயினுமாகுக. நாம் கம்பரிராமாயணம் பாடிய வரலாற்றின் உண்மையிதுவெனக்கண்டறியும் நோக்கங்கொண்டுள்ளதால் அவற்றின் விஷயத்தைமட்டும், ஈண்டாராய்தல் தொடங்குவாம்.

"விநோதரஸமஞ்சரி"யில், "கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது" என்னும் தலைப்பிற் காணப்படும் விஷயத்தை அதிலுள்ளபடி இங்கு விரித்துப் பின் அவற்றிற்காணும் குற்றங்களை ஒவ்வொன்ருய் விளக்கிக் காட்டுவோமாக.

கம்பர் இராமாயணம்பாடிய வரலாறு வருமாறு:—

திருவெண்ணை நல்லூர்ச் "சடையபிள்ளை" யென்பவர் கம்பரை நோக்கி வடமொழிக்கணுள்ள இராமாயணத்தைத் தமிழில்மொழிபெயர்க்குமாறு பலமுறை கூறியும், அதிலவருக்குறைப்பும் அக்கரையும் பிறவாது, அநேக நாளாய்க் காலஹரணம் பண்ணிக்கொண்டு வந்தாரென்றும், அதை அப்பிள்ளை "குலோத்துங்கசோழ"னுக்கறிவிக்க, அவரக்காரியத்தி லிருவரைவிடுக்கின் ஒருவருக்கொருவர் துரிதத்தில் முடிக்க வேண்டுமென்னு மெண்ணத்தால் விரைவிலது நிறைவேறு மென்னுங் கருத்தைக்கொண்டு "ஒட்டக்கூத்தரை"யுங், கம்பரையு மழைப்பித்து, இருவரையு மதனைத் தனித்தனி பாடவாக்யாபித்தன ரென்றும், இவருள் ஒட்டக்கூத்தர், அவ்விராமாயணத்திற்குரிய ஏழு

காண்டங்களுள் ஐந்து காண்டங்களைப் பாடி முடித்து, ஆறுவது காண்டத்தினைத் தொடங்கிக் "கடல்காண் படலம்" பாடும் வரையிற் கம்பர் காப்புச்செய்யுளும் பாடாதிருந்தன ரென்றும், இப்படி யவரிருப்பதை யுணர்ந்த சடையபிள்ளை அரசனுக்குணர்த்த, அரசனவரை யழைப்பித்துக் கேட்டபோது கடல்காண் படலத்துக் கப்பால் "சேதுபந்தனப் படலம்" வரையிற் பாடி யிருக்கின்றேனெனப் பொய் பேசி, அப்படலத்தை மாத்திரம் எழுபது செய்யுட்களாற் பாடி முடித்துக்கொண்டு வந்து பிரசங்கித்தனரென்றும், அவற்றுளோர் செய்யுளில் "துமி" என்னும் பதத்தைப்பற்றிக் கூத்தராக்ஷேபிக்க, அதற்குக் கம்பர் கலைமகளைத் தியானிக்க, அவரவர்பொருட்டு இடையர் சேரியில் இடைச்சியாக வந்து மோர்கடைய, அங்கு அரசனையுங் கூத்தரையும் அவரழைத்துப்போய்த் "துமி" என்னும் பதத்தைப்பற்றி யுண்டான ஆக்ஷேபணையை யொழித்தனரென்றும், அதன் பின்னேறக்குறைய ஆறுமாதத்தில் கூத்தர் மற்றிரண்டு காண்டங்களையும் பாடி முடித்துங் கலைவாணியருள் பெற்ற கம்பர் கவிக்குமுன் நமது கவி மகிமைப்படவில்லை யென்று வெறுப்புண்டாகித் தாம் பாடிய அக்காவியத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக வுருவிக் கிழித்துக்கொண்டிருந்தனரென்றும், அக்காலங்ஙனம் தற்செயலாகச் செல்லலுற்ற கம்பரதைக்கண்டு "ஏன்வருந்திப் பாடியதைக் கிழித்தெறிகின்றீர்?" எனக் கேட்டதற்கு, "வரகவியே கவி, மற்றைக்கவி என்னகவி?" என்று கூறிக் குறையுங் கிழித்தற்கெத்தனிக்க, அப்போதவர் கையிலிருந்த ஏட்டையவர் வாங்கிப்பார்த்து "உத்தரகாண்ட"மாயிருக்கக்கண்டு, நாம்ஆறுகாண்ட மாத்திரம் பாடி, ஏழாவதற்கிதனை வைத்துக்கொண்டால் வருத்தமின்றிப் போகுமென்னும் கருத்தையுன்னி அதனை மாத்திரந்தருமாறு கேட்டனரென்றும், அவரப்படியே செய்யுமென்று தர, ஓர் நல்லநாட்கொண்டு இராமாயணம் பாடத் தொடங்கிப் பதினைந்து பகலில் நித்தமெழுநூறாகப் பதினாயிரம் பாடலில்முடித்து, அதனை அரங்கேற்றுதற்குத், தகுந்தவிடம் "திருவரங்க"மே தக்கதெனக்கொண்டு அங்குசெல்லத் திருவரங்கத்து அந்தணர் சிலர், தில்லை மூவாயிரவரிடத்துச் சாற்றுக்கவி வாங்கிவந்தால், இங்கு அரங்கேற்றலாகுமென்றுகூற, கம்பர் திருவரங்கத்து அந்தணருத்திரவின்படியே தான்பாடிய அக்காவியத்திற்குக் கையொப்பம் வாங்குமாறு அம்மூவாயிரவரு மொருங்கு சேருந்தருணம் நோக்கியிருந்தன ரெனவும், அது விரைவிற் கிட்டாததால் அவர் வருந்தித் துயிலுறுங்கால், அவரது சொப்பனத்தில் தில்லை கோவிந்தராஜ ரெழுந்தருளி, அவர்க ளொருங்குசேருமற்றந்தெரிவித்தன ரெனவும், அஃதுணர்ந்தவர் செல்லுங்கால், மூவாயிரவரும் விடநாகந் தீண்டியிறந்த தம்மகவுக்காக ஒன்று சேர்ந்திருந்தார்க ளெனவும், அதுகண்ட கம்பர்தனது வரவின்காரணத்தை யவர்கட்குத் தெரிவித்துப் பின்னர் தானவர் வேண்டுகோளால் இறந்துள்ள மகவை,

"ஆளியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட." (1)

"மங்கை யொருபங்கன் மணிமார்பி லாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே--திங்களையுஞ்
சீறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே
யேறிய வாறே யிறங்கு"*

"பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—யீரமதிச்
செஞ்சடையான் பூணுந்திருவா பரணமே
நஞ்சுடையாய் தூர நட."

என இம்மூன்று வெண்பாக்கள்பாடி யுயிர்ப்பித்தாரெனவும், அதுகண்ட "தில்லை மூவாயிர

* 'மங்கையொருபாகர் மார்பிலணியாரமே எனவும்' யேறியபண்பே யிறங்கு. எனவும், பாடம் தமிழ் நாவலர் சரிதையில் முதல், இரண்டு பாடல்களே காணப்படுகிறது.

வர்'' கம்பரை யுள்ளபடி தம்மினுஞ் சிறந்த மகாத்துமாவென மதித்து, பயந்து, உடனேயவரை உபசரித்துத் தலையில் நெருப்பு விழப்பட்டவர்களைப்போலப் பரபரப்பாக வந்து அவரிடத்திருந்த காவியத்தை வாங்கிப் பார்வையிட்டு இவருக்கொப்பான வித்வானும், இவ்விராமாயணத்திற்கொப்பான காவியமு முண்டோவென ஸ்ரீ சிவபெருமானையுமவர் செய்தருளிய சிவாகமங்களையுமேயன்றி ஏனைய தேவர்களையும் ஆகமங்களையுஞ் சொப்பனத்திலுஞ் சிறிது மதியாதவர்களான தாமனைவரு மிகவியந்து மதித்துத் தங்களுக்குள்ளே பிரமானந்தமடைந்தவர்களாயினும், ''குணத்தை மாற்றக் குருவில்லை'' என்பதற் கேற்பத் தங்கள் குணம் போகாமல் ஏதேதோ சிலவவரைக் கேட்க, அதற்கெல்லாமவர் தக்கவிடையளித்தபின் சரியென்றொப்புக்கொண்டு கையொப்பஞ் செய்தனரெனவும், பின் கம்பர் இராமாயணம் அரங்கேற்றத் தொடங்கிமுடித்து அசனுநியோரால் தக்கபடி புகழ்ந்து சம்மானிக்கப்பட்டனரென்பதுமே.

இனி, இவற்றினின்றும் சில உண்மை விஷயங்களை ஆராய்வாம்.

மகாகவியாகிய கம்பரைத் திருவெண்ணைநல்லூர்ச் சடைய பிள்ளையாவது, சோழராசனுவது, இராமாயண காவியத்தைப் பாடும்படி கூறியதற்கு மேற்கோளாக விநோதரஸ மஞ்சரி முதலிய நூற்களில் ஒராதாரமேனுங் காணப்படவில்லை. அருட்கவியாகிய கம்பர் தமக்குள் முதிர்ந்த ஸ்ரீ ராமபக்தியின் காரண விசேஷத்தால் ஒருவருஞ் சொல்லாமல் தாமே பாடத்தொடங்கியதாக இதிகாசமாகிய இராமாயண காவியத்தில் சில மேற்கோள்களிருக்கின்றன. இங்ஙனமிருக்கச் சோழனும், சடையபிள்ளையும் இராமாயணம் பாடச்சொன்னதாகக் கதை கூறுவது யாங்ஙனம்? அன்றியும், இராமாயணச் செய்யுட்களொவ்வொன்றும் சுவை நிரம்பியதாய், அர்த்த புஷ்டியுடையதாய், கற்பனை நிறைந்ததாய் ஓசையின்பம் பயப்பதாய், விழுமியபொருள் தருவதாய்ப் படிப்பதற்கினிமை யுண்டாக்குவதாய் விளங்குகின்றனவே. அவைகளைப் பாடலாக நாளொன்றுக்கு எழுநூறு விழுக்காடு பாடி முடித்தனரென அத்தனை லேசாகக் கூறுவது சுத்த அசம்பாவிதமேயாம். இது ''பிள்ளைபெற்றலின் அருமையறியாத மலடியின் கூற்றையொக்கும்.'' இராமாயண காவியத்தில் ஊடாடிப் பழகிய நல்லறிஞர்கள் ஒருக்காலும் இவ்வழியில் பிரவேசிக்க முயலார்களென்பது திண்ணம். இராமாயணத்தின் பாயிரத்தாலேயே கம்பர், ஒருவர் வேண்டப்படாமலே தாமே பாடத்தொடங்கியதாக வெள்ளிடைமலைபோல் விளங்கிக் கிடக்க, அதனை ஓர்ந்தறியாது விளக்கைப் பிடித்துக் கிணற்றில் வீழ்வார்போல் வீழ்ந்து அபசாரப்பட்டனர். இதனையெல்லாங் கூர்ந்து யோசிக்குமளவில், வேணுமென்றே ஒருவர் கம்பரைத் தூஷிக்கத் தலைப்பட்டதாகக் கருதவேண்டியதாகின்றது. இனியேனும் அத்தகையர் இதுபோன்ற பாரகாவியங்களில் ''கலப்பாலில் துளி விஷங்கலந்ததுபோல்'' பொய்க் கதைகளையும், கற்பனைகளையும் புகுத்தாது நன்னெறிகளிலொழுகி நலம் பெறுவாராகவும். இதனைக் கண்ணுறும் அறிஞர்களும், இனி இத்தகைய ஆபாச வரலாறுகளில் கவனஞ்செலுத்தாமலும், தமது பிள்ளைகட்கும் அதனைப் போதிக்க முற்படாமலுமிருப்பார்களென்றே நம்புகிறேன்.

(இன்னும் வரும்.)

---

## ஸ்ரீ கபீர்தாஸ சுவாமிகள்

(138-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாமான்னியமாய் அப்போதப்போது பைராகிகளோடு சேர்ந்துகொண்டு ஆங்காங்கு போய்க் கொண்டிருப்பது இவர் வழக்கம். சுமார் முப்பது வயதிருக்கையில் ஒருமுறை கங்கைக்கடுத்த ஆசிரமமொன்றில் இவர் இவ்வாறு போய்ப்பார்க்கையில் அங்கே இருபது வயதுள்ள பெண்ணொருத்தியைக் கண்டு, அவள் வேண்டுகோளின்படி சென்று பாலைப் பிக்ஷையாக வாங்கிக்கொண்டார். பிறகு தன்னுடன் வந்த மற்றவர்களெல்லாம் அவரவர் பங்கைக் குடித்துவிடத் தான்மட்டும் சும்மா வைத்துக் கொண்டிருந்தார். அருகிலிருந்தவர் இதற்குக் காரணம் கேட்க, சுவாமிகள், "இதோ இன்னும் ஒரு சாது வந்துகொண்டிருக்கிறார். அவருக்காக வைத்துக்கொண்டிருக்கிறேன்," என்றார். அப்படியே சற்று நேரத்திற்கெல்லாம் அவர் வந்ததாகவும் அவருக்குக் கொடுத்து உபசரித்ததாகவும் கதை.

இந்த மகிமையைக் கண்டு அந்தப் பெண் இவரைச் சேவித்து, "ஓ சுவாமி என் தகப்பனார் இந்த ஆசிரமத்திலிருந்த வனகண்ட பைராகியொருவர். அவரை என் வரன்முறை யென்னவென்று கேட்டபோதெல்லாம், அவர், "எனக்குத் தெரியாது. கங்கையில் ஒருநாள் நான் ஸ்நானம் செய்யப்போகையில் ஒரு கூடையில் கம்பளி சுற்றி யொரு குழந்தை மிதந்து வந்தது. அதை யெடுத்துப் பார்க்கையில் குழந்தையுயிருடனிருந்ததால் கொண்டுவந்து வளர்த்தேன். அதுதான் நீ" என்று சொல்லிவந்தார். அவர் போகும்பொழுது, எனக்கென்ன கதியென்று கேட்டேன். "இங்கேயேயிருந்துகொண்டு, வரும் சாதுக்களுக்கு உபசாரஞ்செய்து கொண்டிரு. தக்க குரு வொருவர் வருவார். அவரை வழிபட்டு நற்கதியடையலாம்," என்றார். அன்றுமுதல் அப்படியே செய்து வருகிறேன். இன்றைக்குத் தங்களைக் கண்டதும் தகப்பனார் சொல்லிப்போன சாது தாங்களென்றே யெனக்குத்தோன்றுகிறது. ஆகையால் ஏழையை யடிமையாக்கிக்கொண்டு ரக்ஷித்தருளவேண்டும்," என்றாள். கபீரும் அப்படியே யென்று அவளை யழைத்து வந்து வீடு சேர்த்தார். நீமா இவர்களுக்குள் ளிருக்கும் நடவடிக்கையைச் சிறிது நாள் பார்த்துவிட்டு, "புருஷன் பெண்சாதியாயிருக்க இஷ்டமில்லாவிட்டால் இந்தக் கல்லியாணமென்னத்திற்கு?" என்று கடிந்துகொண்டதாக ஒரு வதந்தி. அவ்விருவரும் சாமான்னிய தம்பதிகளாகவே யிருந்து 'கமால்' 'கமாலி' யென்று பிள்ளையையும், பெண்ணையும் பெற்றதாக மற்றொரு புராணம். இவ்விரண்டு குழந்தைகளும், மரித்துப்போன குழந்தைகளென்றும், சுவாமிகள் தன் மகிமையாலவர்களுக்குயிர்கொடுத்து மனைவியிடமொப்புவித்து வளர்த்து வரும்படி சொன்னாரென்று மற்றுமொரு புராணம். கடைசியிற் சொல்லியது வாஸ்தவமாகில், கபீர், அவர் பத்தினி, அவர் பிள்ளைகள் அனைவரும் திக்கற்றவர்கள் என்றேற்படும். அது மிகவும் அதிசயந்தான்! சுவாமிகள், தன் மனைவியை முதலில் கண்டதும், அவள் உமது பெயரென்ன வென்றதற்கு, "கபீர்" என்றார். ஜாதியென்ன வென்றதற்கு 'கபீர்' என்றார். தொழிலென்ன வென்றதற்கும், "கபீர்" என்றாரென்று ஒரு கதையுண்டு. அதற்கு வெகு விசித்திரமாய் அர்த்தம் இப்பொழுது விளங்குகிற தல்லவா? அதாவது, நாமெல்லோரும் 'தேவதத்தர்கள்' என்றால், ஈசுவரப்பிரசாதங்கள், என்பதாம்.

கமாலி யென்னும் பெண் பதினாறு வயதாகியிருக்கையில், வீட்டுக்கு வெளியில் கொஞ்ச தூரத்திலிருந்த கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தாள். வழியில் போகும் ஹிந்துப் பண்டித ரொருவர் தாகத்திற்குத் தண்ணீர் வேண்ட இவளும் கொடுத்தாள். குடித்

தானபின் பண்டிதர் அவளை வரன்முறை விசாரித்தார். அவள் துலுக்கச்சியென்றும், சாலிச்சி யென்றும் அறிந்தவுடன், அவருக்கு வெகு கோபம்வந்து, "முந்தியேயேன் சொல்லவில்லை? அனியாயமாய் என் ஜாதியைக்கெடுத்துவிட்டாயே, இனிப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டுமே" யென்று அவளைக் கடிந்துகொண்டார். கபீருக்கு இது தெரிந்து உடனே வந்து, "ஓ பண்டிதரே, தண்ணீர் குடிக்குமுன், அசுத்த மின்னதென்று நிச்சயித்துக்கொள்ளும். தண்ணீரில் மீன் முதலிய பிராணிகளுடைய எலும்பு, தசை முதலான துர்வஸ்துக்களும், சருகு முதலிய ஓஷதிக்குப்பைகளு மிருக்கின்றன. தவிர இறந்துபோனமனுஷிய கோடிகளுடைய எலும்பு முதலியன மண்ணோடுமண்ணாகி யிருக்கின்றன. இந்த மண்ணை யெடுத்துத்தான் கலங்கள் செய்வது. சாப்பிடும்பொழுது நீர் அங்கி முதலியவைகளை யெடுத்து வைத்துவிட்டு 'மடியாகவும்,' சுசியாகவு மிருப்பதற்காகத் தோவத்தியை யுடுக்கிறீர். அது, எம்போலிய சாலியர்நெய்து கொடுத்தது. சாணிக்குவியலில் உட்காரும் ஈ உமது அன்னத்தின்பேரிலும் வந்துட்காருகிறது. இதையெல்லாம் தடுக்க உம்மால் முடியுமா? கூடாதாகையால், முட்டாள் தனத்தை விட்டு, வேதங்களைப் புத்தி பூர்வகமாய்ப் படித்து, ஸ்ரீராமனைத் தஞ்சமென்றடைந்து நற்கதி பெறுவீராக," என்றாராம். இந்த வாக்கியத்தைக் கேட்டதும் பண்டிதர் வெட்கிக் கபீரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அந்தப் பெண்ணையே கலியாணமுஞ் செய்துகொண்டு சுகமாயிருந்தார்.

கபீர் பேசுவதில் ஒளிமறை வொன்றுமில்லாமலும், பூசிமெழுகாமலும் பேசி, எதிரி மனதில் நன்றாயுரைக்கும்படி சொல்லிவந்ததால், அவர்மேல் ஹிந்து மகம்மதீய ரிருதிறத்தாரும் கக்ஷிகட்டலானார்கள். காலக்கிரமத்தில் இக்கக்ஷி வலுத்து வந்தது. என்றாலும் அவருக்குச் சிஷ்ய கோடிகளும் அதிகரித்து வந்ததால் இவ்விரோதத்தைக் கொண்டு அவருக்கு அபாயம் ஒன்றும் நேரிடவில்லை.

கடைசியாகச் சிக்கந்தர் லோதி யென்னும் அக்காலத்திய டில்லிப்பாதுஷா அவர்கள் தமது ராஜ்ஜியத்திலெங்கும் விஜயம் செய்து வருகையில் கபீர்சுவாமிகளிருந்த விடத்திற்கருகிலுள்ள ஜவன்பூர் என்னும் யவனபுரியில் முகாம் செய்தார். அவ்விடம் வந்ததும், சுவாமிகளுக்கு விரோதிகளான மகம்மதீயருக்கு நாயகராயிருந்த ஷேக்தக்கி என்னும் பெரியவர் சக்கரவர்த்தியைப் பேட்டிசெய்து, கபீர் மகம்மதீயராயிருந்தும் அம்மதசித்தாந்தத்திற்கு விரோதமாய்த் தெய்வத்தன்மையைத் தானே வகித்துப் பேசுகிறார், என்று பிராதுசெய்து, அதற்காக அவரை மரண தண்டனை செய்யவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டார்.

ஸிகந்தர் லோதி மதவிஷயத்தில் பிடிவாதம் அதிகம் கொண்டவர். இதற்கு முந்தியொரு முறை ஒரு ஹிந்துப் பண்டிதர் தெய்வ விஷயம் குரானில் மட்டுமேயல்லாமல் வேறு வேதங்களிலு மிருக்கலாமென்று சொன்னதற்காக, அவரை அவர் கொன்றுவிடும்படி யுத்தரவளித்தது கபீருக்குந் தெரியும். இப்பிராது வந்ததும் பாதுஷா கபீருக்கு வாரண்டு அனுப்பிப்பிடித்துவரச் சொன்னார். அவர் வந்து நின்றுகொண்டு, பாதுஷாவை வணங்காமலும் ஒன்றும் பேசாமலுமிருக்க, அவ்விடம் இவருக்குப் பிரதிவாதியாகி நின்ற ஷேக்குக்கும் இவருக்கும் தர்க்கம் நடந்து அதில் ஷேக் தோல்வியடைந்தார். பிராம்மணர்களும் இவரைத் தருமம் தப்பிநடப்பவரென்றும், ஜாதிகெட்ட ஜனங்களுடன் சேர்ந்து எல்லோரையும் திட்டுபவரென்றும் சொன்னார்கள். கபீர் இவர்களுக்கெல்லாம் பழையபடி காரசாரமாகப் பதில் சொல்ல, அதைச்சக்ரவர்த்தி கேட்டுக் கோபித்து இவருக்கு மரணதண்டனை விதித்தார்.

8-FEB 1910 MADRAS.

உடனே ஒரு படகு தயாராகிவிட்டது. அதில் கபீர் சுவாமியைக் கைகால்களுக்கு விலங்கிட்டு இறக்கிக் கற்களை நிறைத்து நதியில் தள்ளி விட்டார்கள். படகு முழுகிற்று. என்றாலும், ஒரு நிமிஷத்தில் சுவாமிகள் விலங்கை முறித்துக்கொண்டு பழையபடி வந்து நிற்க, மறுபடியும் சேவகர்கள் அவரைக்கட்டித் தீயிற்போட்டார்கள். அனல் குளிர்ந்திருந்தது. பிறகு மலைமேலிருந்து உருட்டிவிட்டார்கள். ஒரு காயமும் படாமல் அவர் பஞ்சுபோல வந்து கீழே நின்றார். இந்த மகிமைகளைக் காணவே சேவகர்கள் பயந்து பாதுஷாவுக்குச் சொல்ல, அவரும் வந்து சுவாமிகளை நமஸ்கரித்துத் தான் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டுமென்றார். சுவாமிகளோ "ராம பக்தர்களுக்குத் தாங்கள் நடக்கும் வழியில் யார் முள்ளையிறைக்கிறார்களோ, அவர்களுக்கும் அதற்குப் பிரதியாகப் பூவைப் பரப்புவதும் முதல் தருமம்," என்றாராம். பிறகு எல்லோரும் அவரவர் காரியங்களைப் பார்த்துக்கொண்டு அவரவரிடம் சென்றார்கள்.

இந்தக் கதையைப் படிப்பவருக்கு இரணியாக்ஷன் பிரகலாதனுக்குச் செய்த தண்டனைகளும், அதனுடைய முடிவும் நினைவிற்கு வரும். ஆதலாலிதுவும் பழங் கதைதான். மொத்தத்தில் நாம் தெரிந்துகொள்ளவேண்டியது, கபீர் சுவாமிகளுக்கு ஜனங்களில் விரோதிகளனேகரானார்களென்பதும், அவர்களுடைய சதியினால் சுவாமிகளைப் பாதுஷா விசாரணை செய்யவேண்டி வந்தாலும், அவருடைய குணத்தையும், பேச்சையுங் கேட்டு, அவர் மதத் துரோகியுமல்ல, ராஜத்துரோகியுமல்லவென்று கண்டு அவருக்குத் தீங்கொன்றும் விளைவிக்காமல் விட்டு விட்டாரென்பதுமே.

கடைசிவரையிற் கபீர்சுவாமிகள் உபதேசித்துவந்தது, இந்து மகம்மதியர் இரு திறத்தாரையும், தத்தமதாசாரங்களிற் காணும் அனுசாரங்களையும், தோஷங்களையும் பரிகரித்துவிட்டு, ராமனைத் தஞ்சமாக அடையவேண்டுமென்பதே. ஸ்ரீ காசியிலும், மாணிக்கபுரத்திலும், தக்காணத்தில் அனேக இடங்களிலும், இதே யுபதேசங்களைச் செய்துவந்தார். ஆணித்தரமாகவே பேசியும் வந்தார். இந்துக்களைப் பார்த்து, 'ஓ முட்டாள்களே, நட்டகல்லைச் சுற்றி வந்து, மொணமொணவென்கிறீர்களே, கோயிலிலா பகவானிருக்கிறார்? உங்கள் இருதயத்தில் இல்லையா?" என்பார். மகம்மதியரைப் பார்த்து, "ஓ பக்தர்களே, உங்கள் பக்தியெல்லாம் புதைப்பட்டவர் கோரியைப் பளபளவென்று வைத்துக்கொண்டிருப்பதிலேயே முடிந்து விடுகிறதே. ஜனனமரண மற்ற சருவேசுவரனை மறந்து விட்டீர்களே," என்பார்.

இவ்வாறு எல்லோருக்கும் நன்மையையே விளைவித்துவந்த சுவாமிகள் தீர்க்க ஜீவியாக வாழ்ந்து, கடைசியில் கோரக்புர ஜில்லாவில் மாகர் என்னும் ஊரில் இறந்ததாக எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது ஆயிரத்து ஐந்நூற்றுப்பதினெட்டாம் வருஷத்தில், என்றால், மொகலாயர் இந்தியாவுக்கு வருவதற்கு எட்டு வருஷத்திற்கு முன், நடந்தது. கைகால்களில் வலிகுறைந்து பழையபடி சுவாமிகளுக்கு வாத்தியமெடுத்து வாசித்துக்கொண்டு நாமசங்கீர்த்தனம் செய்ய முடியாமற் போன போதிலும், பக்திமட்டும் கடைசிவரை குறையவேயில்லை. இவ்வுலகத்தில் தனக்கு ஆப்தர்களாயிருந்த நல்லோர் ஒவ்வொருவராகப் போய்விட, அவ்வளவிற்குப் பக்திமட்டும் குறைவதற்கு மாறாக அதிகரித்தது ஆதலால் எங்கே பார்த்தாலும் ஸ்ரீராமனாக அவருக்குக்கண்டு களித்தாரென்பது இப்பாடல்களால் வெளியாகிறது:—"ஓ எனதரசே, நான் உமது பைராகி. எனக்கு மரணம் சமீபிககிறதே யென்று விசனம் சிறிதுமில்லை. உமது சமீபம் வந்து விடுவது நிச்சயமாதலால், நான் அவ்விஷயத்தில் வெகுதூரம் ஆனந்திக்

கிறேன். மனதும், பிராணவாயுவும், எனக்குக் கமண்டலமாகி விட்டன. பிடில் எப்போதும் சுருதி கலையாமலிருக்கிறது. தந்தியினி அறுபடாது. பிடில் தானே நாதஞ்செய்கிறது. ஓ, கலியாணப் பெண்ணே, நல்ல பாட்டாகப் பாடு என்பர்த்தாவாகிய ராமராஜாஎன் வீட்டிற்கு இதோ வந்திருக்கிறார்" என்று அவர் பாடினார். ஹிந்திபாஷையில் இதைப்பாடக் கேட்பவருக்கு இது எவ்வளவு இனிமையைக் கொடுக்கும்!

சுவாமிகளுடன் எவ்வளவுகாலம் பழகியும், அவர் மனோநருமத்தை பவர் சிஷியர்கள் முற்று மறியவே யில்லை. ஏனெனில், மரண காலததில் சிலர், அவர் ஸ்ரீ காசியிலேயே போய் மரிக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்வதால்தான் அவர் தேக வியோகமானவுடன் ஸ்ரீராமனுடைய சந்நிதி சேருவாரென்றும், அவ்விடத்தைவிட்டு, வியாஸகாசி முதலிய இடங்களில் ஜீவனை விடுபவர் கழுதையாகப் பிறக்கிறாரென்றும் ஒரு முட்டாள் ஐதீகமிருந்ததை நினைத்துக்கொண்டும், அவரை ஸ்ரீகாசிக்குக் கொண்டுபோகப் பிரயத்தனப்பட்டார்கள். சுவாமிகள் இதைக்கேட்டு அவர்களைக் கடிந்துகொண்டு "ஸ்ரீராமனுக்கென்ன, கைகுறுகிற்ற? காசியிலிருந்தால்மட்டும் அவருக்குக் கைபெட்டும், விலகினால் எட்டாதா? படுமுட்டாள்களாயிருக்கிறீர்களே. நிச்சயமாய் நம்புங்கள். எவ்விடத்தி லிறந்தாலும் ஸ்ரீராமனுக்குத் தமது பக்தரை வரவழைத்துக்கொள்ளுந் திராணியுண்டு," என்றாராம்.

சுவாமிகளுக்குத் 'தேகவியோகமானவுடன், மகம்மதியப்பநிவுபோல அவர் சரீரத்தைப் பெட்டியிலிட்டுப் பனுத்தப்போர்வை, புஷ்பம் முதலியவை சேகரித்துத் தூயினர்கள். அதுவரை தகராறு ஒன்றுமில்லை. அப்படியானபின், மகம்மதிய சிஷ்யர்கள் தங்கள் சம்பிரதாயப்படிப் புதைத்துத்தான் விடுவோமென்றும், இந்துக்கள் எரித்துத்தான் தீருவோமென்றும், கலகஞ் செய்தார்கள். கலகம் முற்றும்போல் கண்டதும், சுமாமிகள் அவர்களுக்குத் தோன்றி, பனுத்தைத் திறந்து பார்க்கும்படியேவ, அவர்கள் அப்படியே பார்த்ததில், பெட்டியில் சவத்திற்குப் பதிலாகப் புஷ்பமட்டு மிருந்ததாகவும், அதை இருகூறாக்கி, இருதிறத்தாரு மெடுத்துப்போய், அவரவரிஷ்டப்படி சம்ஸ்காரம் செய்தார்களென்றும் ஓர் கதை சாதாரணமாக வழங்குவது.

இதன் அந்தரங்கம் நமக்கு இவ்வளவு காலத்திற்கப்புறம் விளங்குவது சிரமம். ஆனால் இரண்டு விஷயம் பிரத்தியக்ஷம். மாகாரில் நாளது வரையிவருடைய கோரியிருக்கிறது. அது மகம்மதீயர் சுவாதீனம். ஆனால் இந்துக்களும் அங்குசென்று அவ்விடத்திய சம்பிரதாயப்படி வழிபடுவது சாதாரணம். தமிழ் நாட்டிலும் நாகூர் மீராவுக்கு இவ்விதமாக இருதிறத்தாரும் உபசாரம் செய்வதுபோல வென்றறிக.

இரண்டாவது, இந்தக் கலகம் வாஸ்தவமாக நடந்ததானால், கபீர் சுவாமிகளுடைய சிஷ்யர்களுக்குக் குரு உபதேசம் பூராவாகப் பலிக்கவில்லையென்பது. தனது ஜீவதசை முழுவதும், "சில்லரை விஷயங்களில் கலகம் செய்ய வேண்டாம். அவரவரிஷ்டம்போலச் செய்யுங்கள். எல்லோரும் குருடராயிருப்பதில், ஒருவர் பார்ப்பதாகச் சொல்லுவதை மற்றவர் இகழ்வது பிசகு. வாஸ்தவத்தில் ஸ்ரீராமன் ஜகத்துக்கெல்லாம் கர்த்தர். அவரே நமக்குச் சரணம் புகத்தக்கவர். அவரை நம்பி, அவர் நாமசங்கீர்த்தனம் செய்து, எல்லோரும் விரோதத்தைவிட்டுப் பரஸ்பரம் அனுகூலமாயிருந்து, இருவகையிலும் நன்மையடையுங்கள்," என்று சொல்லி வந்த குருவின் விஷயத்திலேயே யிப்படிப் பைத்திபக்காரவேஷம்போட்டார்களென்றால், மனிதருடைய விவேகத்தை நாம் என்னெ

ன்று வருணிப்பது? ஏதோ அந்த மட்டில் அடித்துக் கொள்ளாமல் நின்றதற்காக நாம் சந்தோஷப் படவேண்டும்.

சுவாமிகளுடைய சந்ததியில் பெண்ணைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். பிள்ளையாகிய 'கமால்' என்பவரைப் பற்றிப் பேசுவதற்கு மனம் கூசுகிறது. கபீர் சுவாமிகள் போன்ற புண்ணியாத்துமாவுக்கு ஒரு முரடன் குமாரனாகவந்தது ஜன்மாந்தர பாபமென்னல் தான் தகும். ஏனெனில் இவன், தன் தகப்பனார் இந்து மகம்மதிய ரிருதிறத்தாருடையவும் ஆசாரங்களைக் கைக்கொண்டதில், அவருடன் போராடிச் சாத்தியப்படாமல் போகவே, இவருக்கு ஜன்மவைரியாகிய ஷேக்தக்கியிடம் சென்று, தன் தகப்பனார் மகம்மதிய சம்பிரதாயத்தைக் கைவிட்டுத் துன்மார்க்கத்தைக் கைப்பற்றிய படியால், அவரைப் புறம்பாக்க வேண்டுமென்றும், அவருக்கும் தனக்கும் குரானில் சொல்லுகிறபடி, "யார் பெற்றோருடைய உத்தரவுமீறி நடக்காமலிருக்கிறார்களோ, அவர்கள்பேரில் பகவானுடைய ரஹமத்து இருக்கிறது," என்கிற பாந்தவ்வியம் நீங்கிவிட வேண்டுமென்றும், கேட்டதில், அவரும் அப்படியே செய்யென்று விட்டாராம். அதைக்கேட்டதும் சுவாமிகள் விசாரப்பட்டு, "கமால் பிறந்ததும், கபீர் வமிசம் அற்றுப்போய்விட்டது" என்று துக்கித்தாராம். ஆதலால் சுவாமிகள் வமிசமென்று சொல்லிக்கொள்ள இக்காலத்தில் ஒருவருமில்லை.

(இன்னும் வரும்.)

---

## ஹாலி தூமகேது

ஸ்ரீமான்-டி. எஸ். வேங்கிடரமணையர், பி.ஏ., எல்.டி.

(155-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஹாலி தூமகேது சூரியனைச் சுற்றி வருவதிற் சில விசேஷங்களுண்டு. அவை யென்ன வெனில்; முதலாவது, ஏறக்குறைய சக்கரம் போன்ற வட்டகதியில் சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் வருவதுபோல இது எப்போதும் ஒரே வேகத்துடன் போகிறதில்லை. பொதுவாய்த் தூமகேதுக்களெல்லாம் அவைகள் செல்லும் கதிகளில், சூரியனுக்குச் சமீபித்து வரவே, சூரியனுடைய ஆகர்ஷணத்தினால் வேகமதிகரித்துச் சூரியன் முகமாயோடியும் கடைசியாய்ச் சூரியனைச் சுற்றித் திரும்புங்கால் விநாடி ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அதிக வேகத்துடன் ஓடியும் போகின்றன. பிறகு சூரியனைவிட்டுப் பிரிந்துபோகையில், சூரிய ஆகர்ஷணத்தை யெதிர்த்துச் செல்லு நிமித்தம், நாளுக்குநாள் விசை குறைந்து வருகின்றன. கடைசியில், நாம் பூமியிலிருந்து ஆகாசத்தில் உயர எறியுமொரு கல்லானது பூமிக்கே திரும்பி வருவதுபோல, சூரியன் முகமாய் விழ ஆரம்பித்து, அவ்வாறு விழும்வேக மதிகரித்துக்கொண்டே போய்ச் சூரியனைச் சமீபித்து மறுபடியு மதைச்சுற்றி யோடி விடுகின்றன. ஆகையால், ஹாலி தூமகேதுவும் இவ்வாறே எழுபத்தாறு வருஷங்களுக்கொரு முறை சூரியனைச்சுற்றி யோடிக்கொண்டிருக்கின்றது.

இரண்டாவது, சூரியமண்டலத்தைச் சேர்ந்த கிரகங்களொவ்வொன்றும், எங்கீ, பீலா முதலிய சில தூமகேதுக்களும், சூரியனுக்கு மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ப் பிரதக்ஷிணமாக வந்துகொண்டிருக்க, ஹாலி தூமகேது மாத்திரம் சூரியனைச்சுற்றிக்கிழக்கிலிருந்துமேற்கு

முகமாய் அப்பிரதக்ஷிணமாய்ச் செல்லுகிறது. இது ஓர் ஆச்சரியந்தான்.

மூன்றாவது, இத்தூமகேது சூரியனுக்குச் சமீபமாய் அதிவேகத்துடன் செல்லுங்கால், சூரியனுக்குச் சற்றேறக்குறைய இரண்டு, மூன்று கோடி மைல் தூரத்திற்குள்ளாக வருவதாகவும், பிறகு சூரியனை விட்டுப் பிரிந்து முப்பத்தெட்டு வருஷங்கள் சென்றபின், தன் சலனத்வேகத்தை முற்று மிழந்து மறுபடி தன் பழைய கதியை யனுசரிக்குங்கால், அக்கதியாரம்பமாகு மிடமானது சூரியனிடத்திலிருந்து சுமார் 350 கோடி மைல் தூரத்திலென்றுந் தெரியவருகிறது.

சென்ற 1835-ம் ௵த்தில் இந்தத் தூமகேது விஜயஞ்செய்தபிறகு, நாளதுவரை செய்யலான யாத்திரையைச்சற்றுக் கவனிப்போம். 1835-ம் ௵த்தில் சூரியனைச் சுற்றிவந்து அதை விட்டுப் பிரிந்துபோக ஆரம்பித்தபின் ஒரே வருஷகாலத்தில் பிரகஸ்பதியின் கதியைத் தாண்டி, 1839-ம் ௵த்தில் சனியின் கதியைக் கடந்து, அவ்வாறே 1844-ம் ௵த்தில் உரேனஸின் கதியையும், 1856-ம் ௵த்திற்குள்ளாக நெப்தியூனின் கதியையுங் கடந்து, பிறகு பதினாறு வருஷகாலம் சூரியனைவிட்டுப் பிரிந்து கொண்டே போய்விட்டது. (இக்கதிகளை யெல்லாம் சென்ற மாசத்திய விஹாரிணியிலுள்ள படத்தைப்பார்த்து அறிக). மறுபடி 1873-ம் ௵த்தில் தன் வேகத்தை முற்றிலுமிழந்து ஆகாயத்திற்றங்கி, முன்போலவே சூரியன் முகமாய் விழ ஆரம்பித்திருக்க வேண்டும். 1889-ம் ௵த்தில் மறுபடியும் நெப்தியூனின் கதியையும், 1902-ம் ௵த்தில் சனியின் கதியையும், சென்ற எப்பிரல்மீ௴த்தில் பிரகஸ்பதியின் கதியையுங் கடந்து, இப்பொழுது வாயுவேகமாய்ச் சூரியனை யடுத்து வந்துகொண்டிருப்பதினால், நமக்கு இந்தத் தூமகேதுவின் தரிசனகாலஞ் சமீபித்து விட்டதென்றறிக.

தூமகேதுக்கனடிக்கடி ரூபம் மாறிக்கொண்டே வருகின்றனவென்று மேலே சொன்னோம். அதின் தாற்பரியத்தை விளக்குவதற்காக ஹாலி தூமகேதுவையே திருஷ்டாந்தமாக எடுத்துப் பேசுவோம். இது சூரியனுக்குச் சமீபித்து வருகையில், தூரதிருஷ்டிக் கண்ணாடிகொண்டு பார்க்கக்கூடிய தூரத்திலிருக்கும் பொழுது, இதற்குவால் ஒன்று மில்லாமல் ஒருவாறு உருண்டை வடிவமாகத்தான் தோன்றும். ஹம்போல்ட் என்னும் ஒரு ஜர்மனிக் கணியார், 1835௵த்தில் இந்தத் தூமகேதுவைப் பாரீஸ் நகரத்து "நக்ஷத்திரப் பங்களா"வில் பார்த்தபொழுது, அது நாளுக்குநாள் ரூபம் மாறி, அதிலிருந்து சூரியன் முகமாயும், அதற்கெதிர் முகமாயும், ஒருவிதமான காந்தி வீச ஆரம்பித்ததைத் தான் கண்டதாக எழுதுகிறார். மற்றொருவர் இந்தத் தூமகேதுவிலிருந்து சூரியன் முகமாய் விசிறியைப்போல ஒரு காந்தி பரவியதாகவும், பிறகு அது காற்றினாலடிபட்ட புகையைப்போலப் பரவி முன்னும் பின்னுமாக அசைந்து, தூமகேதுவுக்கு வலப்புறமும் இடப்புறமும் வெகுதூரம் வியாபித்ததாகவும் சொல்லுகிறார். யோசித்துப் பார்க்குங்கால், இவ்விருவரும் அனேகமாய் ஒரே காக்ஷியைத் தானிவ்வாறு விவரித்திருக்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. இதுமாத்திரமேயல்ல. தூமகேது சூரியனுக்குச்சமீபத்தில் வரவே, வேகம் மகத்தாயதிகரித்து இதற்குவால்ஒன்று புதிதாய்த்தோன்ற ஆரம்பிக்கிறது. பிறகு ஒருமாதத்திற்குள் இவ்வால் நீண்டு அற்புதமாய்க் காணுவதையும், ஆகாயத்தில் ஜகஜ்ஜோதியான ஒரு பெரிய துடைப்பத்தைத் தொங்கவிட்டாற்போல இருப்பதையுங் காணலாம்.

தூமகேதுக்கள் பஞ்சபூதங்களில் இன்னின்னவை சேர்ந்துண்டாயிருக்கலாமென்று முன்னமே பொதுவாய்க் குறிப்பிட்டோம். மேற்சொல்லியவாறு சூரியனைச் சமீபித்து வருகையில், இந்த ஹாலி தூமகேதுவுக்குப் புதிதாய்

அவ்வளவு அற்புதமான வாலொன்றுண்டாவதற்குக் காரணமென்ன? இதன் தலையில் நக்ஷத்திரம்போல்விளங்கும் தீபமொன்று காண்பதென்ன? இந்தத் தீபத்தைச் சுற்றிலும் பிரகாசங்கொஞ்சங்குறைந்து, அனேகமாய்த் தலைமுதல் வாலின் நுனிவரையிலும் ஒரே மாதிரியாய், சற்று மங்கலாயிருப்பினும், பார்ப்போர் மனதை முற்றிலுங் கவரக்கூடியதுமான ஒரு ஒளியுடன் பிரகாசிப்பதென்னிமித்தம்? இக்கேள்விகளுக்குக் கூடியவரையிலும் சுருக்கமாக விடைகூறுவோம்.

மேலே நாம் சொல்லியபடித் தூமகேதுக்கள் நாம் வசிக்கும் பூமியையும் மற்றகிரகங்களையும் போலக் கெட்டியாய்த் திரண்டு உருண்டு பிண்டமாகவில்லையாதலால், அவைகள் சூரியன் முகமாய் விழுந்து கொண்டிருக்கையில், அவைகளின் உடம்பில் கனமான பாகங்கள் வேகமதிகரிப்பதினால் ஒன்றோடொன்று மோதி விசைகுறைந்து போகவே, வேகமாய்ப்போகும் மற்ற பாகங்களுக்குப் பின் தங்கி விடுகின்றன. இவ்வாறு பின்தங்கிய பாகங்களே வால்போற் காண்கின்றன வென்று சொல்லலாம். வஸ்துக்கள் ஒன்றோடொன்று மோதி அடிபடுவதினால், 'வைத்தியுதம்' என்னும் மின்சாரம் உற்பத்தியாகி, வஸ்துக்களைப் பின்னால் சிதறிப்போகச் செய்வதினாலும், வால் மேலும்மேலும் நீண்டு வருவதற்குக் காரணமாகின்றது.

இதுவே நியாயம்பற்றித் தூமகேதுவின் கனமான பாகங்கள் ஒன்றோடொன்று அடிபட்டு உஷ்ணமுமொளியு முண்டாகுவதால், வேகமிகுதியாகியுள்ள அதன் தலையில் காணும் சுவாலைக்குக் காரணமாகிறது. இவ்விளக்கின் தாபத்தினால், கெட்டிப் பொருள்களெல்லாம் வாயுவாக மாறி அடர்ந்து அக்கினிமயமா யிருக்கிறதாகவுந் தெரியவருகிறது.

தூமகேது அனேக லக்ஷ மைல் வியாபித்துள்ளதாயினும், அது இறுதமாகில் காத்திரம் வெகு குறைவானதேயாம். ஹாலி தூமகேது, சந்திரனைவிடச் சிறியதும், ஆகவே நாம் வசிக்கும் பூமியைவிட எவ்வளவோ மடங்கு சிறியதுமாக இருப்பதாய்ச் சொல்லிவிடலாம். அப்படியாயின் இவ்வளவு சிறிய வஸ்துவானது வெகு விசேஷமாய்ப் பிரகாசிப்பதற்குக் காரணமும் விநோதமாகத் தானிருக்கவேண்டும்.

தூமகேது சந்திரனிலுஞ் சிறிய உருப்பெற்றதாயினும், அனேக லக்ஷமைல் நீளமான வால் வீச்சுடன் ஆகாயத்தில்பறந்து செல்லுவதினால், அதன் சத்துவமானது ஒரே கெட்டிப் பொருளாயிருக்க முடியாதென்றும், தனித்தனியாகச் சிதறி ஒன்றுக்கொன்று பற்பல தூரங்களில் ஓடிச்செல்லும் கற்களாகத் தானிருக்கவேண்டுமென்றும் ஊகிக்கலாம். "ஸ்பெக்டராஸ்கோப்" என்னும் ஒரு கண்ணாடிக் கருவியினால் தூமகேதுவிலிருந்து வரும் ஒளியைப் பரீக்ஷித்துப் பார்த்ததில், அதன் தலையில் ஒளிப்பது சுவயம் ஜோதியென்றும், வாலினுடைய பிரகாசம் கல்கும்பலின்மேல் விழும் சூரிய கிரணத்தின் பிரதிபொளியென்றும் சொல்லிவிடலாம். வால் பிரகாசிப்பது சந்திரன் பிரகாசிப்பதுபோலென்றால் சாதாரணமாய்த் தெரியுமல்லவா?

ஹாலி ஆனவர் இந்தத் தூமகேதுவின் போக்கு வரவைப் பதினேழாம் நூற்றாண்டில் நிர்ணயித்ததுமுதல் நாளதுவரை இது பத்துத் தடவைகளுக்குக் குறைவில்லாமல் விஜயஞ்செய்திருந்தபோதிலும், தூமகேதுக்களின் தன்மையைக் குறித்து நமக்குத் தற்காலத்திற்றெரியுஞ் சங்கதிகள் சொற்பமே. தெரியாத ரகசியங்கள் இன்னும் பலவுண்டு. பெரிய தூம கேதுவென்று சொல்லக்கூடிய ஒன்று கடைசியாய்த் தோன்றியகாலம் வரையிலும், இவைகளைப் பரீக்ஷித்துப் பார்ப்பதற்கு வேண்டிய சாதனங்கள் அனேகமாயிருக்கவில்லை. ஆனால் இப்பொழுது இவ்வித ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு வெகு பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடிகளும், ஸ்பெக்டராஸ்கோப் என்னும் ஒரு கருவியும், 'பொடகிராப்

என்னும் படம் பிடிக்கும் சாதனமுமிருப்பதோடுகூட, தூமகேது ஆகாயத்தில் ஒரு சிறு வஸ்துவாகக்காண ஆரம்பிக்குமுதல் சூரியனைச் சமீபித்துவந்து நாளுக்குநாள் ரூபம் மாறி அதன் அற்புதக் காக்ஷிகளைக்காட்டி, மறுபடியும் ஆகிருதி சிறுத்துப் பழையரூபந்தரித்து மறைந்துபோகும் வரையிலும், பலமாசகாலமாய்ப் பகலிலு மிரவிலும் இடைவிடாது அதையுற்றுப்பார்த்தவண்ணமாய் ரிகார்டுகளை யேற்படுத்திப் பிறகு அந்த ரிகார்டுகளினால் வெளியாகும் விஷயங்களைச் சாவதானமாய் ஆலோசித்தறிந்து கொள்வதும் சாத்தியமாகிவிட்டது,



தூமகேது

ஆதலால், 1910௵ ஏப்பிரல் மாசத்தில் யாரும் நன்றாய்க் காணக்கூடிய இத்தூமகேதுவை அதற்கு முன்னாறு மாதமும் பின்னாறு மாதமுமாக உற்றுப்பார்த்துப் பொதுவாய்த் தூமகேதுக்களின் தன்மையைப் பலவிதத்திலும் பூர்ணமா யறிந்து விடலாமென்று, ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா இக்கண்டங்களில் உழைத்துவரும் ககோளதத்துவ வித்துவான்களிற்பலர் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள். ஆகவே, இதற்குமுந்தி நம்முன்னோர் தற்காலத்திய சாதனங்கள் ஒன்றும் இல்லாமலே, தங்கள் புத்தி நுட்பத்தினால் தூமகேதுக்களின் சுபாவத்தைக் குறித்துத் தெரிந்துகொள்ளஎவ்வளவு சாத்தியமாயிற்றோ, அதைவிட அரிதான அனேக அற்புதங்களை இப்பொழுது விஜயஞ் செய்துகொண்டிருக்கிற ஹாலி தூமகேது தோன்றி மறுபடியும் கிரககோடிகளின் மத்தியில் காணாமற் போய்விடுவதற்குள்ளாக ஆராய்ந்தறியப் போகிறார்களென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால், இவ்விஷயத்தில் சிரத்தையுள்ளவர்கள் இன்னும் ஒருவருஷத்திற்கப்புறம் நமக்கு தூமகேதுக்களைக் குறித்து அதிகமாய் என்னென்ன நூதன சமாசாரங்கள் வெளியாயிற்றென்று நவீனத்திலேற்படும் ரிகார்டுகளினாலும், படிப்பினாலும், கேள்வியினாலும், சாத்தியமானவரையிலும் அறிந்துகொள்ளலாம்.

## உலகஞானம் எவ்வாறு உண்டாகும்

உலக ஞானம் என்பது உலகத்தில் பழகியே வரவேண்டுமல்லாமல், உள்ளே உட்கார்ந்தபடி ஒருநாளும் வரமாட்டாது. புஸ்தகங்களைப் படிப்பதுமட்டும் போதாது; படித்தறிந்தவைகளைப் பரிசோதிக்கப் பிரஜைகளுடன் பழகியும் பார்க்கவேண்டும். இவ்விதமான பழக்கம் "இணக்கமறிந்திணங்கு" என்றபடி வெகு ஜாக்கிரதையாக நடந்துவந்தாலொழிய நமக்கு எளிதில் வரமாட்டாது. சாஸ்திரங்கள் படிப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் மனிதர்களுடன் பழகுவதிலும், நாம் இருக்கவேண்டும். இல்லாவிடின், நாம் நாளுக்குநாள் வயதில் உயர்வோமாகிலும், அறிவில் விருத்தி யடையாமலே இருந்து விடுவோம். வெகு ஜனங்கள் தாடி நரைத்திருப்பார்கள்; ஞானமென்பதில் பத்து வயது பாலகனுக்குக்கூட நிகரில்லாதவர்களாயிருப்பார்கள். உலக ஞானம் நெறிநீங்கித்திரியும் சோம்பேறிகளுடைய சகவாசத்தால் உண்டாகவே மாட்டாது. ஆனால் அவர்களையும் நீ அறிந்திருக்கவேண்டியது அவசியமே. நீ நல்ல சகவாசமே எப்பொழுதும் செய்துகொண்டு இருக்கவேண்டும். நீ பழகும் ஒவ்வொருவருடைய குணாதிசயங்களையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அன்றியும் அவர்களுடைய நற்குணம், துர்க்குணம், தற்புகழ்ச்சி, வீண்பேச்சு முதலியவைகளையும் உற்றுப்பார்க்கவேண்டும். அப்படிச் செய்வதுதான் ஈசுவரன் நமக்குப் புத்தி கொடுத்திருப்பதற்குப் பிரயோஜனம்.

## ஸாக்ரடீஸ்

ஸ்ரீமான்-டீ. எஸ். சுப்பிரமணிய அய்யர்
எம். ஏ., எல். டி.,

(143-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆனல் ஒரு விஷயத்தில் நிரபராதி யென்றாலும், இவருக்கு விரோதிகளேற்பட்டது சகஜம். ஏனெனில், இவர் சிறுவர்களுக்குத் தருமோபதேசம் செய்வதோடுமட்டுமிருந்தாலும், அவர்களுடைய பெற்றோர்கள் மனம்போல அவர்களை நடக்கவொட்டாமல் செய்தால், அப்பெற்றோர்கள் இவருக்கு விரோதிகளாவது இயற்கையல்லவா? உதாரணமாக, ஒருவன் தோல் வியாபாரம் செய்கிறன். ஆனல் அவன் மகனுக்குக் கணிதத்தில் நல்லபுத்தியிருக்கிறது. தகப்பனுக்கு இவனும் தோல்வியாபாரமே செய்யவேண்டுமென்று ஆவல் ஆனல் இவனை ஸாக்ரடீஸ் பரீக்ஷித்துப்பார்த்து, "நீ உன் தகப்பன் பேச்சைக்கேளாதே; கணிதம் கற்று முன்னுக்கு வரவேண்டும்," என்றால், அத்தகப்பன் இவருக்கு விரோதியாவது ஆச்சரியமா? ஸாக்ரடீஸைக் கேட்டால், அவர், "ஐயா, இது வெகு விசித்திரம். உன் மகனுக்குக் காய்ச்சல் வந்தால், வைத்தியன் சொல்லுகிறபடி நீ கேட்க வேண்டுமா, அல்லது உன்னிஷ்டம்போல் நடப்பது நலமா? இப்படி ஒவ்வொரு காரியத்திலும் விஷயந் தெரிந்தவர்களைக் கேட்டு நடப்பது உலக வழக்கமாயிருக்க, வெகு பெரிய விஷயங்களாகிய வித்தை, ஜீவனோபாயம், இவைகளில் விஷயந்தெரிந்த என் போலியர் நல்லது சொல்வதைக் கோணலாகப் பாவித்து வீண் கோபஞ் செய்கிறீர். நான் உன்பிள்ளைக்கு மித்திரனேயொழியச் சத்துருவல்ல. எனக்கு அவனிடத்தில் ஓர் ஸ்வார்த்தமுமில்லை. மேலும் நான் சொல்லுவதை நம்பாவிடின் இவனையே கேள். இவனுக்கு நான் சொல்வது நியாயமாகத் தோன்றுகிறது. நீ இவனை வற்புறுத்தி தோல் வியாபாரம் செய்யச்சொல்வது சரியல்ல, ஒருவன் தன்னிச்சைப்படி நடப்பது தான் நியாயம்; அப்படி நடப்பதற்குத் தடையாயிருப்பது அநியாயம்" என்பார். விவேகிகளான பெற்றோர் இதைச் சரியென்று ஒப்புக்கொண்டாலும், நம்மில் பெரும்பாலார் எக்காலத்திலும் முட்டாள்களாதலால், அனேகருக்கு ஸாக்ரடீஸின் பேரில் வயிற்றெரிச்சலுண்டாகியது ஆச்சரியமல்ல. இது நிற்க, வாலிபர்களை யிவ்வாறு தன் வசப்படுத்திய தல்லாமல், வயது முதிர்ந்து, இவ்வுலக அனுபவங் கூடிக்கீர்த்தி பெற்றவர்களையும், இவர் அடிக்கடி வழிமறித்து, அவர்களுக்குத் தாங்கள் கற்றிருப்பதாகக் கர்வமடைந்திருக்கும் விஷயங்களில் அரிச்சுவடி கூடத் தெரியாதென்று சுற்றியிருப்பவர்கள் கண்டு நகைக்குமாறு எதிர்வாத மென்னும் வலையில் அவர்களைச் சிக்க வைத்துத் திண்டாடவிட்டால், அவர்களில் எத்தனைபெயர் இவர் நோக்கத்தையறிந்து அதற்குள்ள மரியாதை வைப்பார்கள்? ஆகவே யிவர் 79வயது வரையிருந்தது அதிசயமே தவிர,



கிரீஸ்தேசத்து தத்துவஞானி

கடைசியில் தண்டனையடைய நேர்ந்தது அதிசயமல்ல.

தர்க்க மாரம்பித்துக் கொஞ்சகாலங்கழிந்ததும், சொல்லுவதற்கெல்லாம் எதிர்க்கக்ஷி பேசுவதே யிவருக்குச் சுபாவமாயிற்று. கிராமங்களில் வசிப்பது நலமென்று யாராவது சொன்னல், வயல்களிலிருந்தும், மரங்களிலிருந்தும் தான் கற்றுக்கொள்வது ஒன்றுமில்லையென்று சொல்வார். ஜனங்கள் அடர்ந்துள்ள தெருவிலிருந்து கற்றுக்கொள்வது அநேகம் என்று சொல்லிப் பட்டணங்களி லிருப்பதிலேயே அவருக்கு மிக்கப்பிரியம். தெரு

வில் போகிறவன் சித்திர வேலைக்காரனோ, கூலிவேலைக்காரனோ, யாராயிருந்தாலும் சரி, அவனுக்குத் தக்கபடி பேசி, அவனிடமிருந்து ஏதாவது தெரிந்து கொண்டோ, அல்லது, அவனுக்கு ஏதாகிலும் ரகசியம் விளக்கியோ உபகாரம் செய்வார். கவிகளுடன் கவித்துவத்தைப்பற்றிப் பேசுவார். ராஜதந்திர மறிந்தவருக்குத் துரைத்தன முறையைப் பற்றியும் விவரித்துக் கூறுவார். தன் தேக சௌக்கியத்திற்கு வேண்டிய அனுகூலங்களையெல்லாம் வெறுத்துப் பிறகு காலக்கிரமத்தில் அவைகளை அநேகமாய் விலக்கியதால், இவருக்குப் பிறர் கையை யெதிர்பார்க்க அவசியமில்லாமல், தான் மேற்கொண்ட காரியத்தைத் தடையில்லாமற் செய்து வந்தார்.

அவர் தன்னண்டை கற்றுக்கொள்வதற்கு அநேகமாகச் சிறுபிள்ளைகளையே சேர்த்தார். அவர்களிலும் புத்தியுடையவரிடத்தில் அவருக்கு வெகு பிரியம். ஏனெனில், சூக்ஷ்ம புத்தியுள்ள சிறுவர்கள் அதிகமாக மாமூலைக் கவனிக்கமாட்டார்கள். அவர்கள் மனதைச் சீக்கிரத்தில் திருப்பலாம். அவர்களுக்கு நல்ல விஷயங்களில் உற்சாகம் அதிகம். ஆகையால் அவர்களே இவரிடம் படிப்பதற்குத் தக்கவர்கள். எல்லோருடனும் சாமான்னியமாய்ப் பேசுவதுதான் இவர் கற்பிக்கும் முறை. மடைதிறந்தாற்போலச் சரமாரியாய்ப் பொழிவதல்ல.

இப்படிப் பேசுவதற்கு ஒரு விசேஷ காரணமுண்டென்று தோற்றுகிறது. இவர் மிக்க தெய்வபக்தி யுள்ளவர். தெய்வத்தை வணங்குவதில் ஒருபொழுதும் தவறுவதில்லை. ஆனால் இவர் தனக்கு ஏதோ ஒரு தேவதை கைவசமென்று சொல்லிக்கொள்வார். தான் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் தன்னிடம் கனவிலும், மற்ற சமயங்களிலும், அத்தெய்வம் கூறுவதுண்டென்று சொல்லுவார்.

மற்றெல்லோரையும் விட தானே மிகவும் புத்திமானென்று ஆவேசம் சொல்லிய தென்பதை மேலே குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? இப்படியவர் எல்லாருடனும் பேசிவந்ததற்கு இதுவே காரணம். வாதம்செய்வதில் வித்தியாசங்கள் வெளிப்படுகின்றன. இப்படித் தாரதம்மியம் பார்த்து வந்ததில், கடைசியாய் அவருக்கு ஆவேசம் சொன்னது சரியென்று தோன்றிற்று. ஏனென்றால், நாம் மேற்கூறியபடி எல்லோரும் அஞ்ஞானம்நிறைந்தவராயிருந்தும் மற்றவர் தங்களைப் பெரிய ஞானிகளென்று எண்ணியிருக்கத் தான்மட்டுமே தன் அறியாமையை நன்கு அறிந்தவரென்று இவருக்குப் புலப்பட்டது. ஆனால் இவ்விஷயத்தில் இவரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பாவித்தார்கள். சிலர் இவர் உபதேசத்தை அலக்ஷியம் செய்வார்கள். வேறு சிலர் இவர் நிந்தாஸ்துதியைக் குறித்து கோபங்கொள்வார்கள். சிலர் நியாயஸ்தலங்களிலும், கூட்டங்களிலும் இவர் வாதத்தில் ஜயமடைவதைப் பற்றிப் பொறாமைப் படுவார்கள். ஆனால், விவேகிகளோ இவரைச் சிநேகிதரென்றும், உபதேசியென்றும், நாயகரென்றும், கருதித் தங்களுக்குரிய தருமங்களை நன்றாகக் கற்றுக்கொள்வார்கள். இன்னும் சிலர் இவருடைய கொள்கைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு, தமது சந்ததியார் உத்தரோத்தரம் அறியும்படியாக எழுதியிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் 'ப்ளேடோ'வும், அவருடைய சிஷ்யரான 'அரிஸ்டாடில்' என்ற இருவருமே. ஆனாலும், மொத்தத்தில் இவர் யதார்த்தவாதி யாதலால் வெகு ஜனங்களுக்கு விரோதியாய் விட்டார். அதற்குக் காரணங்கள் சில உள்ளன. கனவுப்பைத்தியங் கொண்டவரென்று அவமதித்துவெறுத்தவர் சிலர். வாதாடித்தோல்வியடைந்தவர்கள் சிலர்; இவருடைய பரிகாசத்தினாலும் வஞ்சப் புகழ்ச்சியினாலும் கோபமடைந்தவர்கள் அநேகர். சாமான்னிய

ஜனங்களின் அனுபவத்திற்கு விரோதமாகத் தனக்குமட்டும் ஏதோ தெய்வங் கைவசமாயிருப்பதாகச் சொல்லியதில், தமக்கில்லை யென்ற வயிற்றெரிச்சலினால் விரோதிகளானவர் பெரும்பாலார்.

ஆகையால், இப்படிப் பல ஜனங்களுக்கும் வயிற்றெரிச்சலுண்டாக்கி ஸாக்ரடீஸ்சுமார் 80 வருஷம்வரை காலங்கழித்து, இவருடைய முக்கிய சித்தாந்தங்களெல்லாம் பிரபலமான பிறகு, கடைசியாக இவருடைய விரோதிகள் ஒரு முகமாய்த்திரண்டு, இவர் மேல் சிலகுற்றங்களை ஏற்படுத்தினார்கள். அவைகளாவன. 1. மகா ஜனங்கள் ஒப்புக்கொள்ளும் பழைய தெய்வங்களை நம்பாமல் ஏதோ புதிய தெய்வத்தை வழிபடுவது. 2. அதேனியச் சிறுவர்களுடைய புத்தியைக் கலைப்பது. எப்படி யிவர் சிறுவர்களைக் கெடுத்தார் என்பதை நாம் மேலே விவரித்திருக்கிறோம். இவர் சிஷ்யர்களிற் சிலர் ராஜத்துரோகிகளாகித் தங்கள் துரைத்தனத்தை அன்னியர் கையிலொப்பித்து, அவர்களுக்குத் தாசர்களாய்ப் பணிவிடை செய்தார்களென்று சிலர் புகார் சொன்னார்கள். அல்லாமலும், சிறுவர் தங்கள் தாய் தந்தையர்களுக்குக் கீழ்ப்படியாமல் தான்சொன்னபடியே கேட்கும்படியாகக் கற்றுக்கொடுப்பதாகவும், பக்திவுக்கு விரோதமாகக்கூறியுள்ள கவிகளை மெச்சிப் பேசுவதாகவும், இன்னும் இம்மாதிரியாகப் பல பதர்ப் பேச்சுக்களைப் பிதற்றினார்கள். தவிர, இவர் எல்லா ஜனங்களோடுங் கலந்து அவர்களுக்குத் தன்னிடத்தில் பக்தியும், விசுவாசமும், மரியாதையும் உண்டாகும்படி செய்துவிட்டபடியால், இவர் தேசத்துக்கு விரோதமாய் ஏதாவது செய்துவிடுவாரோ என்ற பயம் சில மூடருக்கு இருந்து போராடியு மிருக்கலாம். கேசு விசாரணைக்கு வந்ததும், அந்நாட்டுச் சம்பிரதாயப்படி ஜனங்களில் திருவுள்ளச்சீட்டு நியமன முறையில், ஐந்நூறு ஜட்ஜிகள் உட்கார்ந்து இவரைச்சமாதானங் கேட்க, இவர் தனக்குக் கனவில் தோன்றுந் தெய்வம் மகா ஜனங்கள் ஒப்புக்கொண்டதே தவிர வேறல்ல வென்றும், தான் ராஜாங்கத்துக்கு எப்பொழுதும் கீழ்ப்படிந்து நடந்து வருவதாகவும், தகப்பனைவிடப் பிள்ளையைப் புத்திசாலியாக்குதல் குற்றமன்றென்றும், தான் தேசீய கவிகளைப்பற்றிப் பேசுதல் தன் தேசாபிமானத்தை நன்றாக எடுத்துக்காட்டுகிற தென்றும் கூறினர். ஆனால், ஜட்ஜிகள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம் கிரீஸ்தேசத்திய அக்காலத்துச் சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். ஸாக்ரடீஸின் சொந்தப்பட்டணமாகிய ஆதென்ஸ் கி. மு. 404 வருஷம்முதல், பகைவராகிய ஸ்பார்ட்டருக்கு அதீனமாகி, அதன்பிறகு கொடுங்கோன் மன்னரான முப்பது பேரால் அரசாளப்பட்டுக் கஷ்டமடைந்த தெல்லாம், ஸாக்ரடீஸின் சிஷ்யர்களாகிய க்ரைடியஸ், ஆல்விபியாடிஸ், என்பவர்களால்தான் என்று நினைத்து, சிஷ்யருடைய குற்றத்திற்குக் குருவே உத்தரவாதியென்று சொல்லி இவரைத் தண்டித்தார்கள். இவர் தேசாபிமான முள்ளவ ரானபடியாலும், தருமத்தை யபேக்ஷித்து உயிரைப் பொருட்டாக்கவே யில்லை யாதலாலும், ஊரைவிட்டு ஓடி உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இஷ்டப்படவில்லை. வேண்டுமானால், இவரப்படிச் சுலபமாகத் தப்பித்துக்கொண்டிருக்கலாம். ஆகையால், துஷ்டபுத்திகளான ஜட்ஜிகளில் பெரும்பாலார் இவர்பேரில் குற்றம் ருசுவாகிறதாகத் தீர்மானித்து மரணதண்டனையும் விதித்தார்கள். அதை யனுசரித்து அக்காலத்திய வழக்கப்படி அரளிவேருக்குச் சமதையான "ஹெம்லாக்" என்னும் செடியின் ரஸத்தை யிவருக்குக் குடிப்பாட்டினார்கள். கடைசிவரை யார் பேரிலும் இவருக்குக்கோபமில்லை. யாரையும் அவர் நொந்துகொள்ளவுமில்லை. தான் மேற்கொண்ட விரதம் தனக்குப்பின் நிறைவேறுமென்கிற மனவுறுதி யவருக்கிருந்த

தினல் அவருக்கு மனம்சிறிதாகிலும் கலங்க வேயில்லை. இஷ்டமித்திரர் மத்தியில் எப்போதும்போலச் சிரித்துத்தமாஷ் பேசிக்கொண்டே விஷத்தைக் குடித்துவிட்டார். இது கி. மு. 399-ம் வருஷத்தில்நடந்தது.

சத்தியத்தைக் கடைசிவரை மனந்தளராமல் பரிபாலித்ததே இந்த மகான் செய்த பெருங்குற்றம். இவருடைய நுண்ணறிவில் தினையளவுங்கூட இவரினத்தார்களுக்கு இல்லாமையால் இவர் செய்த உபகாரத்தையெல்லாம் அபகாரமென்று நினைத்துத் தங்களுடைய அறிவின்மையென்ற துர்த்தேவதைக்கு இவரைப் பலியளித்து விட்டார்கள். ஆயினும், காய்ச்சக்காய்ச்சப் பொன் மேன்மேலும் பிரகாசிப்பதுபோல, சத்தியமென்பது கஷ்டமென்ற உலையில்தான் நன்கு விளங்குகின்றது. ஸாக்ரடீஸ் தம்முடைய கொள்கைகளுக்காக மடிந்தபோதிலும், அவருடைய ஞானமும், புகழும் உலகமுழுதும் பிற்பட்டஎக்காலத்திலும், எத்தேசத்திலும் மேலும் மேலும் பரவி வந்திருக்கின்றன.

இவருடைய முக்கிய சித்தாந்தங்களையும், பேச்சுச் சாதுரியத்தையும், நல்லொழுக்கத்தையும் பின்னொரு சஞ்சிகையில் விளக்குவோம்.

---

## சப்ரேஜிஸ்ட் ஸ்திரீகள்.

ரெடிங் என்னுமிடத்தில் லாய்ட் ஜார்ஜ் என்ற மந்திரி பேசிக்கொண்டிருக்கையில் அவர், நிற்கும் பலகை மேடையின் (Platform) கீழ் இரண்டு சப்ரேஜிஸ்ட்கள் கண்டு பிடிக்கப்பட்டார்கள். வெளியில் வரச சொன்னதற்கு மறுதளித்தபடியால், அவர்களிருவரையும் வெளியே பிடித்திழுக்கும்படி நேர்ந்ததாம். வெளியில் இழுக்கப்பட்ட பிறகு சபையின் எதிரில் இருந்த ஒரு மனிதன் இவர்களில் ஒரு ஸ்திரீயைத் தலைமீது பலமாக அடித்தானாம். இந்தச் செய்கையை அங்கிருந்தவர்கள் ஒப்பவில்லையெனத் தெரிகிறது.

## மேனாட்டாரும், கீழ்நாட்டாரும்

கே. ஏ. துரைசாமி அய்யர் பி.ஏ., எல்.டி.

சுமார் நூறு வருஷங்களாக ஆங்கிலேயர்கள் நம்நாட்டில் முதற் பதவியடைந்து ராச்சியபாரம் வகித்து வருகிறார்கள். அதனால் நமக்கும் அவருக்கும் பரஸ்பரம் அநேக நன்மைகள் உண்டாயிருக்கின்றன என்பதில் சந்தேகம் ஒருவருக்கும் இராது. இத்தன்மைத்தான சம்பந்தம் தெய்வாதீனம் என்றே சொல்லவேண்டும். "கிழக்கு கிழக்குதான், மேற்கு மேற்குதான். இவையிரண்டும் ஒருநாளும் ஒன்று சேரா," என்று ஒரு ஆங்கிலகவி கூறியுள்ளாராயினும், நம்மதம் அதற்கு மாறிடையாதலில், "இத்தகைய சம்பந்தத்தால் பற்பல நன்மைகள் உண்டாயிருக்கின்றன; இன்னும் உண்டாகப்போகின்றன," என்பது நம்கொள்கை. ஆதலின் அதுமூலமாகப் பெருகிவரும் நன்மையாகிய அருவியினின்றும் நாம் எல்லோரும் விடாய் தீர நுகர்ந்து, நமதுராச்சியம் க்ஷேமத்தையடைய வேண்டும் என்பதில் ஆக்கிரகம் வனுத்திருப்பதுபற்றியே பின்வருவனவற்றை எழுதத் தொடங்கியது.

இப்பொழுது ஆரம்பிப்பதாக உத்தேசித்துள்ள விஷயம் மெத்தவும் பெரியதாதலின் அதைச் சில பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றையுங் குறித்துச் சற்றுக்கூறுவோம்.

### 'சரித்திரக்கூற்று'

உலகத்தின்கண் தற்காலத்தில் எம்மாதிரி அநேக ராச்சியங்கள் நாகரீகத்தையடைந்து உன்னததசையில அமர்ந்திருக்கின்றனவோ, அது போல் முற்காலங்களிலும் வேறு அநேக ராச்சியங்கள் செழித்து ஓங்கி உயர்ந்திருந்தன. சரித்திரங்களுக்கு எட்டியமட்டில்,இம்மாதிரியான ஸ்திதி அவற்றுள் ஒன்றின் கணுயினும் ஸ்திரமாய் இருந்திருக்கவில்லையென்றும், எக்காரணங்களால் அதினின்றும் அவைகளுக்கு வீழ்ச்சியுண்டாயிற்றோ, அக்

காரணங்கள் இப்பொழுதாவது பின்னராவது உண்டாகுமேல், அத்தகைய வீழ்ச்சி மற்றவருக்கும் நேரும் என்றும் துணிவதற்கு இடமுண்டு. சில உதாரணங்கள் இதை நன்கு விளக்கும்.

நமது ஹிந்து ராச்சியமானது இமோற்பருவதமுதல் கன்னியாகுமரி வரையில் அளாவி தசரதர் முதலான சூரிய வமிசத்து சக்கிரவர்த்திகளாலும், தருமபுத்திரர் முதலான சந்திர பரம்பரையோராலும், செங்கோல் சற்றேனும் கோணுமல் அரசாக்ஷி செய்யப்பட்டுவந்தது நாம் எல்லோரும் அறிந்த விஷயமே.

அவ்விதமான ஸ்திதி பின்னிட்டு எப்படி நழுவி விட்டதோ, அதுபோலவே இன்னும் மற்றுள்ள ராச்சியங்களும் பலக்குறைவை அடைந்து, இருந்த இடம், பெயர், ஊர், வரலாறு கூட மறந்து போகும்படியாய்விட்டன. அஸ்ஸிரியா என்ன, பாபிலோனியா என்ன, எகிப்து என்ன, இவைகள் சுமார் மூவாயிரம் வருஷங்களுக்குமுன் பிரபலத்தை யடைந்திருக்கவில்லையா? அதன்பின் கிரீக்குத்தேசத்தாருக்கு நற்காலம் வர, அநேக விஷயங்களிலவர்கள் நிபுணராயிருந்து, சுமார் முந்நூறு வருஷகாலம் நிரம்பவும் புஷ்டியடைந்திருந்து, தங்களுடைய நாகரீகம் ஒருக்காலும் நாசத்தை யடையாவண்ணம், அவர்களுடைய கலைகளையும், தத்துவ ஞானத்தையும், சிற்பசாமர்த்தியத்தையும் எக்காலத்தோரும் மெச்சிக்கொண்டாடும்படியாகத் தமது தேசசரித்திரத்தில் நிலைநிறுத்தவில்லையா? அவர்களுக்குப் பின்னர் ரோமாபுரியில் இடாலிதேசத்தவர் ஆதிபத்தியத்தையடைந்து, ருஷியா தவிர தற்காலத்தில் ஐரோப்பா கண்டம் என்று வழங்கும் ராச்சியமாத்திரமல்ல, ஆசியா கண்டத்தின் மேற்குபாகம், ஆபிரிக்கா கண்டத்தின் வடபாகம், இவைகளைத் தம் குடைக்கீழ் தாங்கி, அவர்களில் அநேகம் புத்திமான்கள் சட்டங்களை உண்டாக்க அவைகளை அனுசரித்து நடந்து, சுமார் 600, 700 ஸ்ல நற்பதவியிலிருந்தார்களல்லவா? அவர்களுடைய சட்டமன்றோ இப்பொழுது "ரோமர் சட்டம்" என்று வக்கீல் பரீக்ஷைக்குப் போகிறவர்கள் படிப்பது? அதன்பின் ஐரோப்பாவில் அநேகம் இதர ராச்சியங்கள் அப்போதைக்கப்போது சிறிதுகாலம் பிரபல மடைந்திருந்தன.

கிறிஸ்து பிறந்த ஏழாம் நூற்றுண்டிற்குப் பிற்பாடு மகம்மதியர் அதிகம் பலமுற்றுப் பெரிதான ராச்சியத்தை வகித்து, இந்தியாவிலும் அதற்கு மேற்கேயுள்ள ஆசியா கண்டத்துப் பிரதேசங்களிலும், ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பிரவேசித்து ஒவ்வொரு தேசத்திலும் தங்களுடைய நாகரீகத்தையும் மதத்தையும் ஸ்தாபித்திருந்தார்கள் என்பதற்குச் சாக்ஷியமும் வேண்டுமோ? இக்காலத்திலோ நிரம்பவும் மெலிந்துபோய் சில ராச்சியங்களை மாத்திரம் ஆண்டு வருகிறுர்கள். பரிகாசமாய்த் துருக்கிதேசத்துச் சுலுத்தானைக் "கீழ்நாட்டு வியாதிஸ்தன்" என்று வேறுசில அரசர்கள் வெகுகாலம் வழங்கி வந்தார்கள்.

அமெரிக்காவில் ஐரோப்பியர் பிரவேசித்ததற்கு முன்பாக 'மெக்ஸிகோ,' 'பெரு' என்னும் தேசங்களில் ஜனங்கள் நிரம்பவும் நாகரீகமடைந்து நல்ல ஸ்திதியில் இருந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன.

ஐரோப்பாவில் ஸ்பானிய ராஜாக்கள் ஒருகாலத்தில் நல்ல பதவியில் இருந்து, 'புதிய உலகம்' என்று வழங்குவதான அமெரிக்காகளை ஆண்டு வந்தார்கள். அத்தேசத் தரசனலனுப்பப்பட்ட 'கொலம்பஸ்' அல்லவோ அவற்றைக் கண்டு பிடித்தது?

சுமார் நூறுவருஷத்திற்கு முன்னர்தான் நெப்போலியன் என்னும் ஒரு பிரான்சுச் சக்கிரவர்த்தி ஏறக்குறைய ஐரோப்பா முழுவதையும் கட்டியாள முயன்றுர். அவர் எண்ணம் ஏறக்குறைய முற்றுப்பெற்றது என்றே சொல்ல வேண்டும். நெப்போலியன் என்றுல் அக்கா

லத்தில் யாவருக்கும் சிம்ம சொப்பனமாயிருந்தது. அழுத பிள்ளையும் வாய் மூடும்.

இவ்விதமாய் அநேக ராச்சியங்களுடைய உயர்வையும் தாழ்வையும் நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம்.

இப்பொழுதோ ஐரோப்பாவில் இங்கிலாந்தும் ஜர்மனியும் முதல்மரியாதைக்காரர்களாய், ஒருவருக் கொருவர் பின்வாங்காதிருக்கும் பொருட்டு, யுத்தக்கப்பல் நிர்மாணத்தில் 'நீ முந்தியோ, நான் முந்தியோ' என்று பந்தயம் போட்டுக் கொண்டாற்போல யத்தனித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர ருஷியா, பிரான்ஸ், ஆஸ்திரியா இம்மூன்றும் நல்ல ஸ்திதியில் இருக்கின்றன. அமெரிக்காவில் 'ஐக்கியமாகாணங்கள்' நிரம்பவும் உன்னத பதவியில் இருக்கின்றன. "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி"யைப்போலன்றி, ஆசியா கண்டத்தாராகிய ஜப்பானியர்களும் கை வெகு வாய்வலுத்தவர்களாகிய ருஷியர்களைக் கடலிலும், பூமியிலும் வென்று பிரபலமாகிக்கொண்டு வருகிறார்கள். தங்களுடைய ராச்சிய நிலைமையாலும் கடற்படைச் சாமர்த்தியத்தாலும் அவர்கள் "பவிபிக் சமுத்திர இங்கிலீஷ்காரர்கள்" என்று பெயர்வாங்கி விட்டார்கள்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே"

என்று சொல்வதற்குச் சரியாக நாகரீகங்களும், ராச்சியங்களும் மாறிக்கொண்டே வருகின்றன.

"இந்த விஷயங்களை நாங்கள் அறிந்ததில்லையா? இவைகளைச் சொல்லவா எங்களை இவ்வளவு தூரம் இழுக்கடித்தீர்?" என்று சிலர் கூற இடமுண்டு. அதற்கு நியாயம் ஒருவாறு கூறுமற்போனால் இதுவரை யெழுதியது வீணாய்முடியும். இதுகளால் நாம் அறியவேண்டுவது என்ன? இந்த் ராச்சியங்கள் எக்காரணங்களால் உயர்வையும் மற்றெக்காரணங்களால் தாழ்வையுமடைந்தன, என்று நாம் அறிவோமாகில், அத்தகைய தாழ்வு வராமல் காக்க உதவும். தவிர முன் போகிறவன் குழியில் இடறி விழுந்தால் பின்செல்பவனுக்குத் தீவட்டி பிடித்தாற்போலல்லவா?

இது விஷயங்களை யோசிக்குங்கால் தோன்றுவதென்னவென்றால், "தாளாண்மை தாழத் தாழ்ந்தார்" என்று நிச்சயிக்கலாம். "அடி உதவுகிறாப்போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்," 'தடி எடுத்தவன் தண்டக்காரன்' என்னும் நியாயம்தான் வழங்கிவந்ததாக முதலிற்றோன்றும். பலிஷ்டர்களாய் இருந்தவர்கள் பலவீனர்களை வென்றார்கள் என்று சொல்லலாமாயினும், சற்றே ஆராய்ந்து நோக்குங்கால் ஜயத்திற்குக் காரணம் விடாமுயற்சிதான் என்னும் ரகசியம் வெளியாகிறது. தாம் கைக்கொண்ட காரியத்தில் எக்காலம் வரை தக்க முயற்சியுற்றிருந்தார்களோ, அதுகாறும் ஜயலக்ஷ்மி அவர்கள் பங்கில் இருந்தாள் என்பதற்குச் சந்தேகமில்லை. ராச்சியம் கிடைத்தபின்னும் அநேக காலம்வரை "கருமமே கண்ணாயினா"ராய், மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும் கண் துஞ்சாமலும் பாடுபட்டார்கள். அதனால் கைமேல் பலன் அவர்களுக்குக் கிடைத்தது. அவருக்குப் பிற்பட்டவரோ, பிதுரார்ச்சிதம் வேண்டியமட்டுமிருந்தபடியால், (இக்காலத்துப் பாட்டிமார்கள் போல் அக்காலத்தும் இருந்திருப்பாரன்றோ?), "அடே குழந்தாய், நீ ஏனடா பாடுபடவேணும், அப்பாவும் பாட்டாவும் தேடி வச்சிருக்கிறதைத் தின்று தெரிச்சுண்டிருந்தாப் போறாதா?" என்று சொல்லும் பாட்டிமார்களுடைய வார்த்தைக் கிணங்கியோ, அல்லது அனுபாசமாகச் சுகமனுபவிப்பதை விட்டு, ஏன் வீண் பாடுபடவேண்டுமென்று நினைத்தோ, அல்லது 'பறையனைப்போல் பாடுபட்டால் துரையனைப்போல் சுகப்படலாம்" என்னும் நியாயத்தை மறந்தோ, தாம்

செய்யவேண்டிய கருமங்களில் அசிரத்தையாய் இருந்துவிட்டா ராதலின், காலக்கிரமத்தில் பலம் குறைந்து எதிரிகள் படையெடுத்து வருங்காலத்து அவரை வெல்லச் சக்தியற்று, எளிதில் வெல்லப்பட்டார்கள்.

தவிரவும் "சத்தியமே ஜயிக்கிறது, பொய்யன்று" என்னும் சாசுவதமான தருமத்தை மறந்து, அகம்பாவம் மேலிட்டு, காரியாகாரியங்களைப் பகுத்தறியாமல் அகிருத்தியங்கள் பலவும் செய்யத் துணிந்ததால், பகவான் அவர் பக்கனின்றும் ஜயத்தை நீக்கினார் போலும்.

ஆதலின் இதுகாறும் கூறியதுகொண்டு நாம் அறியவேண்டியது 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' ஆதலால் 'ஊக்கமது கைவிடாம'லும், சத்தியத்தை நம்பியும், அதருமம், அகிருத்தியம் முதலிய விஷப்பூண்டுகள் நந்தவனமாகிய நம்மனத்தில் வேரூன்றாமற்றடுத்து, தெய்வ பக்தியும், விடாமுயற்சியும் செழித்தோங்க நடந்துகொள்வோமேல், நாமும், நம் முறவினர், சுற்றத்தாரும், நமது ராச்சியமும் பகவத் கிருபையால் க்ஷேமத்தை அடையுமென்பது திண்ணம். (இன்னும் வரும்)

---

### சுதேசியமும் நாட்டுக்கோட்டை செட்டியார்களும்

பேசின் ஜில்லா காஞ்சிட்டானில் பண லேவாதேவி செய்யும் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் ஒருங்கே கூடி சுதேசியமல்லாத வஸ்துக்களை உபயோகப்படுத்துகிறதில்லை என்றும் அதற்கு, விரோதமாய் நடப்பவர்கள் ஒப்பந்த நிபந்தனையை நிறைவேற்றக் கட்டுப்பட்டவர்களென்றும், கடையின் ஸ்தானத்திற்கு வரும் ஒவ்வொரு நபர்களும் அதைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றும், சில நாளைக்கு முன் ஒப்பந்தம் செய்துகொண்டு தவறாமல் நடந்து வருவதாய்த் தெரிகிறது. நிற்க தாராவாடி ஜில்லா மீன்லா, அவுப்போ, ஜீக்கோன் இந்த ஊர்களிலிருக்கும் செட்டியார்களும் ஒப்பந்தமின்றி மன உறுதியோடு பிறதேச உப்பு, சீனி, துணி முதலியவைகளை வர்ச்சனம் செய்து சுதேசியத்தைக் கையாடி வருகிறார்களாம். இச்சாதியார்கள் மனதில் சுதேசியம் புகுந்தது நமது தேச க்ஷேமத்துக்கு அறிகுறியாகும்.

## நாம் ஏன் பிழைத்திருக்கிறோம்?

ஸ்ரீமதி-மங்களாம்பிகா பாய்

(ஓர் ஜப்பானிய உபன்னியாசம்)

ஜப்பான் தேசத்தில் ஒரு ஊரில் சோகீசி என்றொரு பெரிய மூடனிருந்தான். உலகத்தின் கண் எவ்வளவோ மூடர்களிருக்கின்றார்கள். இருந்தபோதிலும், நம்மவனோ வென்றால் மூடச்சிகாமணியேதான். சொன்ன காரியத்தை மறப்பதில் பரம நிபுணன். ஒருநாள் அவனுடைய எஜமானியம்மாள் அவனைக் கூப்பிட்டுச் சொன்னாள். "அடே சோகீசி, இன்றையதினம் நமது மூல புருஷனுடைய திதியானபடியால், புரோகிதர் சீக்கிரம் வருவார். ஆதலால் நமது குலதெய்வங்களுக்கு வழக்கப்படி நைவேத்தியம் செய்யவேண்டும். நீ சீக்கிரம் கடைக்குச்சென்று முள்ளங்கி, உருளைக்கிழங்கு, நாய்க்குடை, தாமரைக்கிழங்கு, வெங்காயம் இவையனைத்தையும் வாங்கிக் கொண்டு வா," என்று சொல்லி ஐந்து அணாவைக் கொடுத்தாள். சோகீசி வெகு சந்தோஷத்துடன் இடுப்பைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். அவன் நாயோட்டமாய் ஓடிக்கொண்டிருக்கையில் அடுத்த வீட்டுச் சோமட்சுவைக் கண்டான்.

"அடே, சோகீசி! என்ன ரொம்ப அவசரமாய்ப் போகிறாய்போலிருக்கின்றதே? என்ன வேலையின்பேரில் போகிறாய், எங்குபோகிறாய்?" என்று சோமட்சு கேட்டான்.

"சில சாமான்களை வாங்கிவரும் பொருட்டுக் கடைக்குப் போகிறேன்," என்று சொல்லிச் சோகீசி அவசரமாய்ச் செல்லலானான்.

"என்ன சாமான் வாங்கப்போகிறாய்?"

"என்ன சாமானா? எனக்குத்தெரியாதே," என்று விடை. சோகீசி யளித்தான்,

இவ்வாறாகக் கதையாரம்பித்து ஒரு ஜபானிய உபதேசி சொன்னதாவது.—எஜமானியம்மாள்சொன்ன வேலையை மறந்து தெருவில்

நாயோட்டமா யோடுவது முட்டாள்தனமல்லவா? ஆனாலும் சோகீசியைக்கண்டு எல்லோரும் சிரிக்கலாகாது. ஏனென்றால், உலகத்தில் முக்கியகாரியங்களை மறக்கின்ற சோகீசியைப் போன்ற மனிதர்கள் பலருளர். முக்கிய காரியத்தையன்றி மற்ற விஷயங்களிலோ வென்றால் அவர்களறியாத தொன்றில்லை.

சிருஷ்டியிலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஒவ்வொரு விசேஷ கருமமிருக்குமென்று சொல்லுவார்கள். உதாரணம்:—பசுவும், குதிரையும், எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறன என்று எவனைக்கேட்டாலும் சொல்லுவான். "எல்லோருக்கும் தெரியுமே, மூட்டைகளைச் சுமக்கவும், ஜனங்களுடைய சிரமத்தைக் குறைக்கவும்," என்று

கோழி எதற்காக ஜீவித்திருக்கின்றது? என்றவனைக்கேட்டால், அவன் "பொழுது தெரிய" வென்று சொல்லுவான். நாய் எதற்காக ஜீவித்திருக்கின்றது? "வாயிலைக்காக்க." பூனை எதற்காக? "எலிகளைப்பிடிக்க." ஒவ்வொன்றைப் பற்றியும் இவ்வாறாகவே கேட்டால் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையளிப்பான். அதிருக்கட்டும் நீ எதற்காகப் பிழைத்திருக்கின்றாய்? என்று கேட்போம்.

அவன் தலையைச் சொறிந்துகொண்டு சற்றுநேரம் யோசித்துச் சொல்லுவான். "நானா? என்னதுக்காகவோ! எனக்குத் தெரியாதே, என்னவோ, சோற்றைத் தின்றுவிட்டுப் பிறருடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கவென்று தான் நான் நினைத்திருக்கின்றேன்," என்று ஒரு சமயம் சொல்லுவான்.

இவ்வுலகத்தில் மனிதர் மாத்திரம் யாதொரு காரணமுமின்றி ஜன்மமெடுத்திருப்பதாக நினைப்பது சோகீசியினுடைய முட்டாள் தனத்திற்கொத்ததாகும். இவ்வுலகத்தில் சோற்றின் பொருட்டு எடுக்கும் ஜன்மம் மானிட ஜன்மமன்று. ஜகத்தில் மானிட ஜாதிதான் பிரதானமானது. மானிடன் நாயைப்போன்றவனுமன்று. பூனையைப் போன்றவனுமன்று. காரணமின்றிக் காலத்தைக் கழிப்பதும் அவன் இயற்கையன்று.

நிற்க, இனி நாம் நம் சோகீசியை மறுபடியொருமுறை நாடுவோம். நமது சோகீசி கடைத்தெருவை யடைந்தான். ஆனால் அவன் எதற்காகக் கடைத்தெருவிற்கு வந்தோமென்பதை மறந்துவிட்டான். ஆகையால், கையில் பணத்துடன் அவ்விடத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் பொழுது, ஒரு கடையில் பக்ஷணம் செய்து வைத்திருப்பதைக் கண்டு, உடனே அவற்றை வாங்கித்தின்றான். பிறகு சற்றுநேரம் இங்குமங்கும் திரிந்துகொண்டிருந்து, பிறகோர் சாராயக் கடையில் நுழைந்து சாராயத்தை வாங்கிக் குடித்துவிட்டு, அவ்விடத்தில் கொஞ்சம் பொழுதைக் கழித்தான். கண்டதெல்லாம் வாங்கித்தின்று காசெல்லாம் செலவழிந்த பிறகு, மிக அதிருப்தியுடன் வீட்டைநோக்கிச் செல்லலானான். போகும்பொழுது வழிதோறும், "எஜமானியம்மாள் தனக்கு யதேச்சையாய்ச் செலவழிக்கும்படி காசுகொடுக்கவில்லை. அதனால் விலையுயர்ந்த பக்ஷணங்களை வாங்கித் தின்பதற் கில்லாமற்போயிற்று," என்று முணுமுணுத்துக்கொண்டேபோனான். வீட்டையடைந்ததும் எஜமானி அவனைக் கேட்டதாவது: "இவ்வளவு நேரம் என்ன செய்துக்கொண்டிருந்தாய்? சாமான்களெல்லாம் வாங்கிக்கொண்டு வந்தாயா?" அதைக்கேட்டு நம்ம சோகீசி, தூக்கத்திலிருந்து விழித்தாற்போல் "நானொன்றும் கொண்டுவரவில்லையே," என்றான்.

"கொடுத்த காசை என்ன செய்தாய்?" "காசா? பக்ஷணம் வாங்கிச் செலவழித்தேன். ஆனால், எல்லா பக்ஷணங்களும் வாங்கப்போதவில்லை." இதைக்கேட்டு, எஜமானன், எஜமானி இருவருக்கும் யாதொன்றும் பேசநாவெழாமல் கொஞ்சநேரம் திகைத்தாற்போலிருந்து பிறகு கோபத்துடன் அவனை நோக்கிச் சொன்னார்கள்: "என்னடா! முழிக்கிறாய்?

இந்தமாதிரி செலவழிக்கவா நான் உன்கையில் காசைக் கொடுத்தேன்? உருளைக்கிழங்கு முதலியவற்றைக்கொண்டுவரச்சொன்னால், நீ வயிறு நிறையத் தின்றது போதாமல் இன்னும் பணம் போதவில்லை என்கிறாயா?' உன்னைப்போல் மடையன் யாருமில்லை" என்று வைதார்கள்.

மூடனுக்கு மோக்ஷமில்லை. இவ்வளவு வசவைக்கேட்டுச் சோகீசி திகைத்து இவ்வாறு பேசலானான்: "என்ன? உங்களுக்கு உருளைக்கிழங்கும் மற்ற சாமான்களும் தானே வேண்டும்? அப்படியிருக்கும் பக்ஷத்தில் நான் கடைக்குப்போகும் பொழுதேன் சொல்லவில்லை? சாமான் வேண்டியதாயிருந்தால் அப்பொழுதே சொல்லியிருக்கவேண்டும்!"

சோகீசி மூடசிரோமணியென்று முன்னமே சொல்லி யிருக்கிறேன். இவனைப்போன்ற வேலைக்காரனை வைத்துக் கொள்ளத்தக்க ஒரு எஜமானனும் இவ்வுலகத்தி லகப்படமாட்டான். கடைசியாய்ச் சோகீசியை ஒழிக்க யாதொரு வழியும் காணாமல் அவர்கள் இரண்டு அடியடித்து அவனைத் துரத்திவிட்டார்கள். இக்கதையைக்கேட்டுச் சிரிப்பதில் பிரயோஜனமில்லை. இதுகட்டுக்கதையே யன்றி வேறன்று. கன்பியூஷியஸ் ரிஷி சொல்லுகிறார்: "மூடத்தன்மையைக் கண்டதும், எனக்கு ஆத்தும திருஷ்டி யுண்டாகிறது." நாம் யாவரும் யோசிக்கவேண்டிய தென்னவென்றால், நாமும் சோகீசியின் இனத்தைச் சார்ந்தவர்களோ, அல்லவோ வென்பதைப்பற்றித் தான். நாம் ஜனிக்கும்பொழுது கடவுளிடத்திலிருந்து இந்த ஐந்து இந்திரியங்களையுடைய சரீரத்தைப்பெற்றிருக்கின்றோம். ஐந்து அணுக்களைவிட மேன்மையான பஞ்ச இந்திரியங்களையுடையவர்களா யிருக்கின்றோம். ஜனிக்கும் பொழுதே நமது இருதயத்தில் பஞ்ச குணங்களையும் என்றால், அன்பு, நியாயம், மரியாதை, ஞானம், சத்தியம், இவ்வைந்தையும் பெற்றிருக்கின்றோம்.

ஆதலால் இதனுடைய உண்மையான அர்த்தமென்னவென்றால், ஐந்துவிதக் காய் கிழங்குகளை விலைக்கு வாங்குவதுபோல நாம் ஐந்து கடமைகளையும் தேகப் பயிற்சினா லடையவேண்டும். தாய்தந்தையர்க்கு உட்படுதல், எஜமானனிடத்தில் விசுவாசம், பதிபத்தினியர் அன்புடனிருத்தல், உடன்பிறந்தவர்களுடன் ஒற்றுமை பாராட்டுதல், சகல ஜனங்களிடத்திலும் நேர்மையுடன் நடந்து கொள்ளுதல்.

நம்முடைய மதமும், கடமைகளும் இவ்வாறிருக்க, நாம் இரவும் பகலும் "இது வேண்டும், அதுவேண்டாம். அதுவேண்டும், இது வேண்டாம்," என்றிவ்வாறாகச் சொல்லிக்கொண்டு, தெருவில் விற்கப்படும் பக்ஷணங்களைவாங்கிச் சாப்பிட்டுக் காலத்தைக் கழிக்கிறோம். இப்படிச் செய்பவர் சோகீசியல்லவா? இப்படிக் காரியமின்றித் திரிந்தலைவதற்காக நாம் ஜன்ம மெடுக்கவில்லை.

(ஜப்பானைக் குறித்து டாக்டர்-ஷேரர் எழுதியதிலிருந்து.)

### ஆழமான சமுத்திரம்

சமுத்திரத்தில் 3000-அடி ஆழத்திற்குக் கீழே சூரியவெளிச்சம் நுழைய முடியாது. அந்த ஆழத்திற்குக் கீழ் வசிக்கும் மீன்களுக்கு சூரிய வெளிச்சத்துக்குப் பதிலாக அவைகளின் அவயவங்களிலேயே ஒரு ஜோதி இருக்கிறது. இந்தச் ஜோதியும் சாதாரணமாய் இருட்டொளிற் சமுத்திரத்தில் தூரத்து அலைகளைக் கவனித்துப் பார்த்தால், அவைகளிலிருந்து பளிச்சுப் பளிச்சென்று புறப்படும் வெளிச்சமும் ஒன்றே. மேலே சொல்லிய ஆழத்தில், தண்ணீர் ஓட்டம் கிடையாது; அலையடிப்பதில்லை; காற்றடிப்பதில்லை; சூரியவெப்பமில்லாததால் தாவரவர்க்கம் ஒன்றும் இருக்கமுடியாது. நிலமட்டத்திலுள்ள காற்று ஒவ்வொரு சதுர அங்குலத்தையும் 15-ராத்தல் பாரத்தோடு தாக்குகிறது. சமுத்திரத்தில் 15,300-அடிக்குக் கீழே போய்விட்டால் அங்கே ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் 11-கால் ராத்தல் பாரம் வைத்தாற்போலிருக்கும். ஆழத்திலுள்ள ஜலம் மிகவும் குளிர்ச்சியாயிருக்கும்.

## இறப்பதா, இருப்பதா?

### தேசிய பாஷைகளுக்காவதோர் வாதம்

ஸ்ரீமான்-பி. டி. ஸ்ரீனிவாஸ ஐய்யங்கார்
அவர்கள், எம். ஏ.

[மேற்காணும் மகுடத்துடன் ஷெயார் எழுதிய இங்கிலீஷ் வியாஸமொன்று நமது கைக்கெட்டியது. நாம் 'விஹாரிணியிலும்,' வேறிடங்களிலும் பேசிவருவதை யனுசரித்துப் பார்க்குமிடத்து, இம்மாதிரி வியவகாரங்களெல்லாம் அப்பாஷைகளிலேயே நடத்துவது யுக்தமாகக் காணுவதால், இச்சஞ்சிகையில் ஐயங்காரவர்கள் 'கூற்றை'ச் சுருக்கி யுரைத்துவிட்டு, அதற்கு விசேஷவுரை வேண்டுமிடத்துச் சேர்த்து அடுத்த சஞ்சிகையில் வெளியிடுகிறோம்.]

ஐயங்கார் சுவாமிகளின் வியாஸத்தை நாம் சிரத்தையாகப் படித்துப் பார்த்தோம். அவருடைய ஞானத்திற்கும், யுக்திக்கும், அனுபவத்திற்கும், ஏற்றபடி அநேக அற்புத விஷயங்கள் அதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியவைகள். அவைகளை அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம். தற்காலம் ஒரே ஒரு குறிப்பு மட்டும் ஆரம்பத்தில் அவசியமாகக் காணுவதால் அதை யிங்குச் சொல்லிவிடுகிறோம்.

அதாவது பண்டிதர்களைக் குறித்து ஆங்காங்கு சுவாமிகள் எழுதியிருப்பதும் வியாஸத்தில் சுமார் மூன்றிலொருபங்கு பண்டிதர்களைத் திட்டுவதிலேயே கழிந்திருப்பதாக நமக்குக் காணுகிறது. பழைய வழக்கப்படி படித்துள்ள பண்டிதர்களால் இனி ஆகவேண்டிய காரியத்திற்கு விசேஷ உபகாரமில்லையென்பது நாமெல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டியது தான். ஆனால் அவர்களுக்குள்ளிருக்கும் அவலக்ஷணங்களுக்கெல்லாம் அவர்களையே ஜவாபுதாரிகளாக்குவது அக்கிரமமென்று நமக்குக் காணுகிறது. பாவம், அவர்கள் என்னசெய்வார்கள். "நண்டைப்பார்த்து, எங்கே, சற்றுப் பறந்து போ," என்றால் அதற்குப் பதில் அது என்ன சொல்லும்? "எனக்கு இறக்கை கொடுங்கள். நான் பறக்கிறேன்," என்றுதானே சொல்லும்? அதுபோலவே இவர்களும் பழைய வழியை அனுசரிப்பது பூராவும் அவர் குற்றமல்லவென்றும், பலதலைமுறைகளாகக் கூடி வந்திருக்கும் பாப மூட்டைகளையெல்லாம் இவர்கள் சுமக்கவேண்டி வந்திருக்கிறதென்றும் சுவாமிகளுக்கே நன்றாய்த் தெரியும். அவர்போன்ற புத்திமான்களுக்குக் கல்வி விஷயத்தில் இருந்த சௌகரியங்கள் பண்டிதர்களுக்கும் கிடைக்குமாகில், அவர்களும் பாஷை விஷயமாக வேறு வழியில் பரிசோதனைகளைச்செய்து உலகத்தவர்க்கும் தமக்கும் நன்மை விளைவித்துக் கொள்ளுவார்கள். கல்வி, கல்வியென்று ஏதோ பிரமையினால் அவர்கள் நிகண்டு, இலக்கண முதலியவற்றை உருவேற்றி வருவதைச் சொல்வதா? கற்றபின் பிழைக்க வழியில்லாமல் அவர்கள் தவிப்பதைச் சொல்வதா? முனிஷி உத்தியோகத்திலிருக்கும் சிலருக்குக் கிடைக்கும் சம்பளவைபவத்தைப் புகழ்வதா? இத்தனை அவாந்தரங்களுக்கிடையில் ஏதோ இந்தமட்டில் எழுத்துகளையும் பழங்காவியங்களையும் மறவாமல் வைத்துக்கொண்டிருப்பதற்காக நாம் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதைவிட்டு அவர்களைக்கண்டபடி திட்டுவதில் ஒரு பிரயோஜனமுமில்லையல்லவா? "வினை விளைகாலமாகலின்," வெகு நாளையபாவங்கள் கூடித் தற்காலம் இப்பயனைக் கொடுத்திருக்கின்றன. இவைகள் பரிகாரமாகி, தேசியபாஷைகளுக்கும் நற்காலம் வரவேண்டுமானால், ஐய்யங்கார் சுவாமிகளைப்போன்ற புத்திமான்களும், வித்துவான்களும், ஒழிவு கிடைத்தபோது பண்டிதர்களைத் திட்டிவிட்டுப் போவதுமட்டும் போதாது. தங்களுக்கு விகிதமென்று காணும் இலக்கண நெறிகளைத் தாங்களே இலக்கியப்படுத்திப் பேசியும் எழுதியும் வரவேண்டும். அல்லாமல் அதற்கேற்ற பாடசாலைகளையு மேற்படுத்திப்

பண்டிதர்களுக்குத்தங்கள் மதத்தைப் புகட்டி, மஹாஜனங்களையும் அதையனுசரிக்கும் உபாயம் செய்தால் அவர்களுக்கெல்லாச் சுகிர்தமுமுண்டு. நிற்க.

இனி வியாசத்தில் காணும் சாராம்சங்களையும், அவற்றிற்கு ஆதாரமாக சுவாமிகள் எடுத்துக்காட்டும் நியாயங்களையும் சுருங்கவுரைக்கின்றோம்.

மொத்தத்தில் பேசுமிடத்து, காலக்கிரமத்தில் தேர்ந்த பாஷைகள் ஒவ்வொன்றிலும் இருவகை நடை காணும். அவற்றிற்குப் பண்டிதநடை என்றும், பிராகிருதநடை என்றும் சொல்லலாம். தமிழை உதாரணமாகக்கொண்டால், சிந்தாமணி முதலிய இலக்கியங்களும், தொல்காப்பிய முதலிய இலக்கணங்களும், பண்டிதநடையைத் தெளிவிப்பன. சாமான்னியமாய்ப் பண்டிதர், பாமரர், முதலிய சகலரும் தமக்குள் பேசிக்கொள்ளுங்கால் உபயோகப் படுவது பிராகிருத நடையாம். "நோக்கானபடியே நேக்கு," என்பதுபோன்ற வாக்கியங்கள் பிராகிருதநடையை விளக்குபவை. "காற்றுறழ் கடுப்பிற் கலிமான்றடந் தேர்," போன்றவைப் பண்டித நடைக்குச் சிறப்பாவன. இந்த நடையில் எழுதுவதும், பேசுவதும் யாரேனுஞ் சிலருக்குமட்டும் உபயோகமே தவிர, ஏனையோர்க்குச் சுவபாஷையாகவே காணாது. ஆனால் நமது பண்டிதர்களுக்கு இந்த இரகசியம் தெரிவதில்லை. ஆகவே சுப்பிரமணியக்கடவுள் தமிழை இலக்கண இலக்கியத்துடன் பண்டித நடையாக ஜோடித்துத் தங்கள் கையில் ஒப்புவித்திருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். அம்மட்டே யல்ல. பிராகிருத நடையை இந்தத் தெய்விக நடையின் திரிபு என்றும், அதையம்மாதிரி போலி நடையாகவொட்டாமல் தடுத்து, எல்லோரும் பண்டித நடையிலேயே பேசி எழுதும்படி செய்வது தமக்கு முக்கிய கடமையென்றும் நம்பி, அதற்காக வெகு பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் இவ்வயிரண்டும் மதியீனம்.

ஏனெனில் நமக்குவேண்டிய உணவு பதார்த்தங்களையும், வீடு முதலியவற்றையும், வாகன வகைகளையும், வஸ்திராதிகளையும், ஆதியில் வெகு சாமான்னியதசையிலிருந்து சிறிது சிறிதாக நாம் நயமாக்கி வந்திருப்பது பிரத்தியக்ஷமல்லவா? மரவுரி, உலர்ந்த சருகு முதலியவற்றைப் போர்த்துக்கொண்டு ஒருகாலத்தில் திண்டாடினோம். பிறகு பருத்தியை நூலாக்கி வஸ்திரமாக நெய்து தரித்தோம். தற்காலத்திலோ பருத்தியிலும், பட்டிலும், சரிகையிலும் அற்புதம், அற்புதமாக உடையாக்குகிறோம். இப்படியே மற்ற விஷயங்களிலுமிருக்க, பாஷையொன்றுக்குமட்டும், வேறு நியாயங் கூறுவது புத்திமான்களுக்கு அழகல்ல. ஆதலால் அதிலும் முதன்முதல் பேசியது பலவகைத்தாக இலக்கணமின்றி யிருந்ததென்றும், பிறகு காலக்கிரமத்தில் புத்திமான்களுடைய முயற்சியால் இலக்கண மேற்பட்டதென்றும், அவ்விலக்கணத்திற்கு ஆதாரமாக முந்தியே இலக்கியங்க ளேற்பட்டதல்லாமல், இலக்கணமேற்பட்ட பின் அதன் விதிகளையனுசரித்துக் கைகால்களுக்கு விலங்கிட்டுக்கொண்டு, பின்னிட்டுவந்த கல்விமான்கள் பண்டித நடையைப் பூர்த்தி செய்தார்களென்றும், சொல்லுதல்தான் சரியாக நடந்ததை விவரிப்பதற்கும் உலகத்தில் எந்தப் பாஷையைப் பரீக்ஷித்தாலும் இவ்வுண்மை வெளியாகும். ஆதலால் விவேகிகள் அனைவரும் ஜனங்கள் தங்களுக்கு உலகவியாபாரத்தில் பிரதி நிமிஷமும் உபயோகப்படும் பாஷையைக் 'கொச்சை' யென்றும், ஏதோ சில சந்தர்ப்பங்களில் மட்டும் சிரமப்பட்டு உபயோகித்து, சாமான்னிய ரொருவருக்கும் அர்த்தம் விளங்காததும், வழக்கத்தில் ஒருக்காலும் பிரயோஜனப்படாததுமான போலிநடையைத் தெய்விகமென்று கொண்டாடுவதும் உலகத்தில் நடக்கும் அற்புதங்களிலெல்லாம் அற்புதமாம்.

நாம் பேசுவதைக் கொச்சையென்று யார் சொல்லுவது?

‘இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பல்,’ என்று இலக்கண நூலாசிரியரே கூறியிருக்கிறா ரல்லவா? அதிற்காணும் ‘இலக்கியம்’ என்பதற்குக்கற்றறிமூடருங் கற்றுச்குட்டிகளுமாகிய சிலர் அவரவர் மனோதருமம்போல் திரட்டி வைத்திருக்கும் ஐந்தாறு காவியங்களும், அவற்றுட்காணும் யமகமுதலிய கழைக்கூத்துகளுந்தான், என யார் பொருள்கொள்வது? ஓ விவேகிகளே, இதெல்லாம் வெறும் பேச்சென்றறிக. “ஒவ்வொரு காலத்திலும் மகாஜனங்களுக்குள் சாமான்னியமாய் நடைபெறும்பேச்சே இலக்கியம்.” ஆதலால், ‘எடுக்கச்சே, போகச்சே, வரச்சே,” என்பனப் போன்றவை பண்டித இலக்கணத்திற்கு ஒவ்வாவிட்டாலும், தற்காலத்தில் எங்கும் வழங்கிவருவது கொண்டு அவற்றைச் சரியென்றே நாம் கொள்ளவேண்டும். “ட்ராம்வண்டிகள் இங்கு நிற்கப்படும்” “நான் ஒரு புஸ்தகத்தை உடைத்தாயிருக்கிறேன்,” என்பனவைகள் இலக்கண சம்மதமாகக் கண்டாலும், அவைகள் மஹாஜனங்களுக்குள் வழங்குவன வல்லவாதலால், தள்ளிவிடவேண்டும்.

பண்டிதருக் கிஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு பாஷைக்கு ஜீவகளையிருப்பதற்கு அடையாளமாவது அதில் விடாமலாகி வரும் மாறுதல்களேயாம். தமிழுக்கு இன்னும் ஜீவனிருப்பதாகச் சொல்வதற் கடையாளம் இது. பண்டிதர்களுடைய பதர்ப்பேச்சுகளைக் கவனியாமல் சாமான்னிய ஜனங்கள் தங்களுடைய அவசரத்துக்கேற்ற பதங்களைப் பலதிக்கிலுமிருந்து சேர்த்துக்கொண்டு, மேற்குறித்தபடி யிலக்கணத்தையும் லக்ஷியஞ் செய்யாமலிருப்பதாம். உதாரணமாக “இரட்டை” யென்று பொருள் கொள்ளும் இங்கிலீஷ் ‘ட்யூப்ளிகேட்’ என்பதை ரயிலில் வேலைசெய்யும் கூலியாட்கள் ‘துப்பட்டிக்காட்டு’ வண்டியென்கிறார்களே தவிர, இரட்டைவண்டி யென்பதில்லை. கோர்ட்டுகளிலும், ஷாப்புகளிலும், வேறு பல விஷயங்களிலும், இவ்வாறு பதங்களும் வாக்கியங்களும் வந்துகொண்டிருக்கின்றன. இதுதான் சரியாக நடக்கவேண்டிய காரியம்.

பண்டிதர்கள் முற்றும் உதவா நடை கரைக்காமலிருக்க வேண்டுமானால், பண்டித நடையும் சாமான்னிய நடையும் பரஸ்பர முதவவேண்டும். சாமான்னிய நடையை மறந்து ஜனங்களுக்கர்த்தமாகாமல் கழைக்கூத்துகள் ஆடுமளவிற்குப் பாஷையின் யோக்கியதை குறையும். போவதற்கொன்றுமில்லாமற்போகப் போகத்தான் பதர்ப்பேச்சு வளரும். ஆதலாற்றான் சென்ற ஆயிரவருஷங்களாகத் தமிழிலாகியிருக்கும் நூல்கள், தமிழ் நாட்டையாவது அந்த நாட்டாருடைய நடையுடை, சுக துக்கங்கள் முதலியனவற்றையாவது விளக்கிக் காட்டும் நன்னூல்களாவதில்லை. அனுபவமென்பதைச் சிறிதும் காணாக்கற்றறிமூடரியற்றிய நூல்களுக்கும் மஹா ஜனங்களுக்கும் சம்பந்தஞ் சிறிதுமின்றிப் போய்விட்டது விசித்திரமன்று. இங்கிலீஷில் ஷேக்ஸ்பீயர் நாடக முதலியவற்றினின்றும் சாமான்னிய நடையில் பதங்களுந், தொடர்களும், வசனங்களும் ஏராளமாய் விரவிவருவதுபோலச் சிந்தாமணி, கம்பராமாயண முதலிய நூற்களிலிருந்து சாமான்னியர் எத்தனையோ பெயர் பதவாக்கியங்களை விரவி உபயோகித்துப் பேசியோ எழுதியோ வருகிறார்கள்? வெகு அபூர்வமென்றால், குற்றம் யாருடையது?

யோசிக்குமிடத்து நடைபெறும் பாஷையொவ்வொன்றிலும் மூன்றுவித மாறுதல்கள் உண்டாகிக்கொண்டே வருகின்றன. முதலாவது ஒலி விஷயம். ஒலிமாறுவதினால் எழுத்துக்களும் மாறி ‘மரூஉ’ என்று இலக்கணத்தவர் தூஷியமாகக்கொள்ளும் வருக்கம் அதிகரிக்கிறது. இம்மரூஉ மொழிகளையும், வழக்குகளையும் தமது கல்விக்கும் பதவிக்கும் ஏலாதனவெனக்கொண்டு பண்டிதர் உயரப் பற

ந்ததினிமித்தமே யவர் 'கூற்று' யாருக்கு முத வாதாகிவிட்டது.

இரண்டாவது திசைச்சொற்களைக் குறித்தது. இக்கிலீஷ் படித்த சிலர் எங்குச் சேர்ந்து பேசியபோதிலும் நாலு வாக்கிய மாகுமுன் இங்கிலீஷ்பதங்களில் அனேகத்தை விரவியே பேசி வருகிறார்கள். இதுதான் புத்திசாலித்தனம். இதுதான் சகஜம். ஏனெனில் இங்கிலீஷ் பதங்களால் அவர் குறிப்பு எவ்வளவு தெளிவாய் விளங்குமோ, அப்படித்தமிழ் முதலியவற்றால் விளங்குவதானல், அவர் அப்படிச் செய்யமுயலாரன்றே? என்றாலும், அவர்கள் எழுத ஆரம்பித்தால், பழைய பதிவு வந்துவிடுகிறது. பேசுவதுபோலவே இங்கிலீஷ் கலந்தெழுதினல் ஏதாகிலும் பாபம் வந்துவிடுமோவென்று பயந்து கொள்ளுகிறார்போலும்! இங்கிலீஷ் அகராதியைப்பாருங்கள். அதுபூதாகாரமாயிருப்பதற்குக் காரணமென்ன? பலதிக்கிலுமிருந்து சொற்களைவிடாமல் கைவசமாக்கிக் கொள்வதேயல்லவா? திராவிடநாட்டில் சம்ஸ்கிருதப்பதங்களும், இந்துஸ்தானி முதலிய பாஷைகளிலிருந்து வந்தபதங்களும் சாதாரணமாக வழங்கிவருவது பிரத்தியக்ஷம். 'தயார்,' 'பெட்டி,' 'பைசா,' முதலியன. அப்படியிருக்க இங்கிலீஷ் பதங்களுக்கு மட்டும் என்ன யோக்கியதை குறைந்து நாம் அவைகளைப் புறம்பாக்குவது? சம்ஸ்கிருத பதங்கள் நமக்குள் வந்துறைவதற்குள்ள நியாயங்க ளெல்லாம் இங்கிலீஷ் பதங்களுக்கும் பொருந்தும். ஏனெனில் அவை யிரண்டும் ஒரே வமிசம்; அண்ணன் தம்பி பெற்ற குழந்தைகளேயாம். ஆதலால் சாமான்னியப் பேச்சிலாவது, கலைவகையிலாவது, திராவிடநாட்டில் பதங்களில்லாமலோ, இருப்பவைகளுக்கு நமது குறிப்பை விளக்கத்தக்க சக்தி குறைந்தோ காணுந்தோறும் இங்கிலீஷ் பதங்களைத் தாராளமாய் உபயோகித்து அப்பாஷைகளை முன்னுக்கொண்டு வர யத்தனிப்பதே விவேகிகளுக்கு லக்ஷணம். அதைவிட்டுக் 'கரி அமிலவாயு,' 'சமகோர்கோட்டுருவம்,' முதலிய விவேகமற்ற உமித்தொடர்களைக் கட்டிக்கொண்டு அழுவது பெரிய முட்டாள்தனம். இங்கிலீஷ்காரர்களுக்குள்ளும் லேசான பதங்களை விட்டுப் "படாடோபத்திற்காக"ப் பெரும் பதங்களைத் தேடும் துர்வழக்கமுண்டு. என்றாலும் இந்தியாவிலுள்ள முழு மோசம் எங்குமில்லை. ஆதலால் இவ்விஷயத்தில் நாம் செய்யவேண்டியது இது. புதிதாக வருங் கலைகளுக்குப் பரிபாஷைகள் வேண்டியிருந்தால் சிறிதுங் கூசாமல், அவைகளையெல்லாம் இங்கிலீஷிலிருந்து உள்ளபடி வரவழைத்துக் கைவசமாக்கிக்கொள்வதுதான். 'ரயில்,' 'இஞ்சின்,' 'பைசிக்கில்,' 'மோட்டார்,' என்னும் பதங்களை அப்படியே உபயோகிப்பது நலமா, அல்லது, 'தூமசகடம்,' 'துவிசக்கிரம்' முதலிய பதங்களைச் சிருஷ்டித்து உபயோகிப்பது நலமா, என்று விவேகிகளைக் கேட்கவேண்டுவதில்லை.

மூன்றாவது இலக்கணமுறையிலுண்டாகும் மாறுதல்களாம். 'நான் புதைக்கப்பட்டேன்,' 'வீடு கட்டப்பட்டது,' 'என்னல் வாழப்பட்டது,' முதலிய வழக்குகள் திராவிட நாட்டிற்கு ஆனவைகளேயல்ல. ஆதலால் இவற்றையொழிக்கவேண்டும். சந்திகளை வேண்டுமட்டுஞ் சேர்த்துப் பெருந்தொடர்களாக்குவது சாமான்னியப் பேச்சில் காணுவதில்லை. ஆதலால் அவைகளையும் தள்ளவேண்டும். வாக்கியங்களை முடிக்காமல் ஒவ்வொரு கதைக்கு ஒரே வாக்கியமாக ஜோடிப்பதில் யாருக்குப் பிரயோஜனமென்பது விளங்குவதில்லை. ஆதலாலித்தியாதி விபரீதங்களை யொழித்து மஹாஜனங்களுக்கு உபயோகமாகும்படி பேசியும் எழிதியும் வரவேண்டுவதே இனி ஆகவேண்டிய காரியம். இது நிறைவேண்டுமானல் விவேகிகள் கவனிக்கவேண்டிய விதிகள் இவை:

1. சாமான்னிய ஜனங்கள் கலந்து பேசும் பொழுது, (பதங்களை அவசரத்தினல் மழுக்

காமல்) நிதானித்துப் பேசும் நடைக்கும், எழுதும் நடைக்கும் இப்பொழுது காணும் பேதங்கள் கூடியமட்டில் இல்லாமலே பார்க்கவேண்டும்.

2. (ஆணையிடுதல், சபதங்கூறுதல் முதலியவற்றிற்காணும் இடக்கர் மொழிகளை நீக்கி,) கல்வி, ஒழுக்கம், குலம் முதலியவற்றிற் பெரியோர் தத்தங் காரியங்களாக வேண்டிய இடத்துப் பேசும் நடை (இலக்கண விதிகளுக்கிணங்காமற் போனாலும்) சரியானதே. அம்மட்டேயல்ல, அந்த நடையில்தான் ஜீவகளையிருப்பது. ஆதலால் காவியாதிகளிலுபயோகப்படவேண்டிய நடையும் அதுவேயாம்.

3. வடமொழிக் கிளைகளிலிருந்து (சம்ஸ்கிருதமாகிலும் சரி, நடைபெறும் பிராகிருதங்களாகிலும் சரி,) முந்தியே திராவிடநாட்டில் குடியேறிக் கலந்திருக்கும் அவசிய பதங்களொழிய, அனுவசியமாய் வந்திருக்கும் பெரும் பதங்களையும் தற்காலம் வந்துகொண்டிருக்கும் அனுமார்வால்போன்ற தொடர்களையும் போக்கடிக்கவேண்டும்.

4. சுலபமானதும், உரைவேண்டாததும், வெறும்யுக்தியினல் ஜோடிக்கப்படாததுமான தேசீயபதங்கள் ஏலாதவிடத்தெல்லாம், அங்கிலேய பரிபாஷைகளைத் தாராளமாக வுபயோகித்துப் பழக்கவேண்டும்.

5. நாம் அங்கிலேயர் பள்ளிக்கூடங்களில் படித்து, அங்கிலேய காவியாதிரஸங்களை நுகர்ந்து, அவற்றிலுள்ள அதிசூட்சுமமான ரஸவிசேஷங்களை இங்கிலீஷ் தெரியாத நம்மவர்களுக்குப் புகட்டவேண்டி வந்திருப்பதில், இங்கிலீஷ்பதங்களே அவற்றை நன்கு விளக்குமாகில் அப்பதங்களையும் தாராளமாய் உபயோகித்து நமதாக்கிக்கொள்ளவேண்டும்.

6. எழுத்து நடையில், (இலக்கணத்திற் காணவிட்டாலும்) வேரூன்றிய சந்திப்புதுமைகளை யுபயோகித்து வரவேண்டும்.

7. வாசிக்கும்போது நிறுத்த வேண்டிய இடங்களைக் காட்டுங்குறிகளே சுகமாய்ப் படிப்பதற்கு முதற்கருவியாவன. ஆதலால், அவைகளை நேராயுபயோகித்து, படிப்புக்கு மிருத்தியுவாக ஏற்பட்டிருக்கும் சந்திப்பீடையைக் கட்டோடே விட்டுவிடவேண்டும்.

ஆகவே, இவ்விதிகளை யனுசரித்து வந்தால் தேசியபாஷைகள் இனிப் பல்லாண்டு செழித்து வாழலாம். இவைகளை நிராகரித்துப் பழைய வழியிலேயே போய்க்கொண்டிருந்தால், அவைகள் நாசமாய்த்தான் போகவேண்டும்.

இதுவரை ஐய்யங்கார் சுவாமிகளுடைய கருத்தைச் சுருக்கி யுரைத்தோம். மற்றது மேலை மாசத்தில் காணும்.

---

## பிணத்தைப் பிழைக்க வைப்பது

சில வருஷங்களுக்கு முன் அமெரிக்காக்கண்டத்தில் ஒரு பெரிய வைத்தியர் ஜலத்தில் மூழ்கி இறந்துபோனவர்களை இறந்துபோன ஒருமணி நேரத்துக்குள் உடம்பு முழுவதையும் உப்பைப் போட்டு மூடிவிட்டால் உயிர் வந்துவிடுமென்று சொன்னர். ஈயையும் இன்னும் சில ஜெந்துக்களையும் அடித்துக் கொன்று மறுபடி உப்பைத் தடவி உயிர்ப்பித்திருக்கிறார்களாம். ஆனல் இந்தமாதிரி செய்து இறந்துபோன மனிதனை உயிர்ப்பித்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது நியூயார்க் பட்டணத்தில் லூசி ரோபிஞேவிட்ச் என்னும் ஒரு வைத்திய ஸ்திரீ மின்சாரக் கருவியொன்று கண்டுபிடித்திருக்கிருளாம். இதைக் கொண்டு செத்துப்போனவைகளை உயிர்ப்பிக்கலாமென்று சொல்லுகிருளாம். போன நவம்பர்மீ 19வ எடிசனுடைய வஸ்து சோதனை சாலையில் பல வைத்தியர்களும் சாஸ்திரிகளும் கூடினர்கள். அப்பொழுது ஒரு முயலை மின்சாரத்தைவிட்டுக் கொன்ருர்கள். இந்த முயல் செத்துப்போய்விட்டது என்று அங்கு உள்ளவர்களெல்லாம் சொன்னபின்பு, மேலே சொல்லிய வைத்தியஸ்திரீ தன்னுடைய கருவியை முயலின் ரத்தாசயத்தின் மேலும் முதுகெலும்பின் அடியின்மேலும் வைத்து மின்சாரத்தைச் செலுத்தினளாம். மூன்று நிமிஷத்தால் அந்தமுயல் மூச்சுவிட ஆரம்பித்ததாம். அரைமணிக்குள் எல்லாரும் கூடிப் பார்த்துக்கொண்டிருந்த அறையில் நடக்கவும் செய்தனளாம். இந்த விதமாகச் செய்தால் இறந்த மனுஷர்களையும் பிழைக்கச் செய்யலாமென்று சொல்லுகிருளாம்.

# விறகுவெட்டியும் வித்வசபையும்

ஜே. எஸ். மாசிலாமணிப் பண்டிதர்

சிறப்புப்பாயிரம்

(கட்டளைக் கலித்துறை)

வீடக மாப்புவி மேனரர் வாழப்பூ மேவியவன்
ஆடக மாப்பதந் தாழ்ந்தன் றருங்கலை யார்ந்தகம்பர்
காடக மாப்பெறு வேடன் கவிக்குரை காட்டியதை
நாடக மாத்தமி ழானல மாக நடாத்துவனே.

## அவையடக்கம்

(கொச்சகக் கலிப்பா)

கம்பர்முதல் வல்லோர் கவிபாடல் கண்டுமுன்னாள்
கொம்பருறு சென்னிக் குன்றவனுந் தன்கவியால்
அம்பரிசு மார்புகழு மாங்கடைய வெண்ணலொக்
இம்பரியா ணிந்நூ லியற்றியது காணீரே. [கும்

(நாடகபாத்திரங்கள்)

குலோத்துங்க சோழராஜன்
சிங்கன் என்ற விறகுவெட்டி
அமிர்தகவிராயர் என்ற இயற்றமிழ்ப் புலவர்
கவிராஜ பாவலர் என்ற இசைத்தமிழ்ப் புலவர்
நடராஜ நாவலர் என்ற நாடகத் தமிழ்ப்புலவர்
கம்பர்
ஒட்டக்கூத்தர்
புகழேந்தி
ஔவையார்
வேறுபல புலவர்கள், மந்திரி, சிங்கன் மனைவி, வேடன், சேவகர் முதலியோர்.

கதைநிகழ்விடம்—உறையூரும் அதன் சுற்றுப்புறமும்.

கதை நிகழ்காலம்—சுமார் 1000-வருஷங்களுக்கு முன்.

### சூத்திரதார்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழிச் செல்வர்காள்! உங்கள் அனைவர்க்கும் எனது வந்தனம்.

ஈங்கு நடிக்கப் பெறுவது மகாகவியாகிய கம்பரது சரித்திரத்தின் ஒரு பகுதி, சமஸ்கிருத பாஷைக்குக் காளிதாச மகாகவியும், கிரேக்குப் பாஷைக்கு ஹோமர் என்றபாவலரும், ஆங்கில பாஷைக்குஷேக்ஸ்பீயர் என்றநாடகாசிரியரும், மில்ட்டன் என்ற காவியாசிரியரும்போல, என்றும் அழியாப்புகழுடம்புபெற்று, தமிழ்பாஷைக்குச் சிரோரத்னம் என்னலாம் படியான ராமாயணத்தின் கிரந்த கர்த்தாவும், கவிச்சக்கிரவர்த்தியென சிறப்புப்பெயரெய்தியவரும், கல்வியிற் பெரியவர் கம்பர் என இலங்கணங்களிலும் உதாரணம் எடுத்தோதப் பெற்றவருமான இம் மகானுபாவ புலவர் சிகாமணி செழித்தோங்கியநாடு வடக்கே சோழதேசம், காலம் சாலிவாகன சகாப்த்தம் ஒன்பதாம் நூற்றாண்டு, என்றால், இற்றைக்கு ஏறக்குறைய 1000-வருஷங்களுக்கு முன்னாகும்.

இனி, ஈண்டு நடத்தப்பெறும் கதாசாரமாவது சோழராஜதானியாகிய உறையூருக்கருகே ஒருசிறு கிராமவாசியான சிங்கன் என்ற விறகுவெட்டியின் மனைவி, சோழராஜாவின்மேல் கவிபாடிப் பரிசுபெற்றுவந்து சுகமே வாழ்வார் பலபுலவர்களைக் கண்ணுற்று ஏக்கமுற்றவளாக, தன்புருஷனைநோக்கி, நீயும் கவிபாடக்கற்றுக் கொண்டுவந்து, அரசன்மேல் பாட்டுப்பாடிப் பரிசுபெற்றுவந்தால், நமது தரித்திரம் ஒழியும் என்ன, அம்முழுமகனும்,

காரிகை கற்றுக் கவிபா டுவதிலும்
பேரிகை கொட்டிப் பிழைத்தல் நன்றே.

என்பதை அறியாமல், கவிபாடல் சுளுவென நினைத்துக் காட்டுக்குச் சென்றானாக, வழியில் சிறுவர் விளையாடல், காகங்கத்தல், குயில்கூவல், முதலாகத்தான் கண்டன கேட்டன யாவற்றையும் ஒன்றாக அடுக்கிக்கொண்டு, அதையே பாட்டென நினைத்து காட்டினுட் புக்கானாக, ஆங்கு அவனது நண்பனான ஒருவேடன் அவனைக்கண்டு "எங்குச்செல்கிறாய்" என், சிங்கன், "நான் கவிபாடக் கற்றுக்கொள்ள வந்தேன், நீயும் ஏதாவது சொல்லித்தா" என, அவன் "எனக்கென்ன தெரியும், ஏதோ கன்னாப் பின்னா என்ற படி" என, விறகு வெட்டி

அதையும் பாட்டென நினைத்து முன்னுள்ளதோடு கூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்து மனைவியிடம் பாட, அவள் சற்றே புத்திசாலியாகையால், அவசியம் இருக்கவேண்டிய அரசன் பெயர் அதில் இல்லையென்று கண்டு, அதையுஞ் சேர்த்து, அவனை அவ்விடம் நின்றனுப்பினளாக, அவ்விறகுவெட்டிச் சிங்கனும் சற்றேனும் அச்சமில்லாமல், மந்திரி சகிதமாய்க் குலோத்துங்க சோழமகாராஜாவின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய புலவர்களெல்லாம் கூடிய உறையூர் வித்வசபா மண்டபம் புகுந்து தான் பாடியுள்ள கவியை மடமடவென்றுபாட, அரசன் நகைத்தும், மந்திரி திகைத்தும், பாவலர் கோபித்தும் இருப்ப, கம்பர் எழுந்து, "இவர் ஒரு மகா வித்வான், இவரை இகழாதீர், இவரது கவிக்கு அர்த்தம் சொன்மின்" என அவனிலும் இவரே பெரியபைத்தியக்காரர் என்று பாவலர் எல்லாம் பகடிபண்ண, கம்பர் அவன் பாட்டிற்குப் பதவுரை, பொழிப்பு, பதசாரம் இலக்கணக்குறிப்பு, மேற்கோள் முதலிய யாவுங்காட்டிச் சமர்த்தித்தார். அகமகிழ்ந்த அரசன் கம்பரை மெச்சி விறகுவெட்டிக்கும் சகல மரியாதையுஞ் செய்து அனுப்பினன். பின்னர் கம்பர் சகவாசத்தால் அவ்விறகுவெட்டிச் சிங்கனும் தமிழில் மகா பண்டிதனாகி, கவிச்சிங்கப் புலவர் என்னும் சிறப்புப்பெயரோடு இனிது வாழ்ந்திருந்தான் என்பது.

இச்சரிதம் கம்பரது தாற்பரிய மகாஞான சாமர்த்தியத்தைத் தெரிவிப்பதோடு தமிழின் அருமையையும், பண்டை நாட்களில் அது பரிபாலிக்கப்பட்டு வந்த விதத்தையும் ஒருவாறு காட்டும்.

இதனைக்கண்ணுறும் பெரியீர், நீர் பிரித்துப் பாலுண்ணும் அன்னம்போல், இதன்கண் உளதாகக்கூடிய குறைகளைப் பாராட்டாது, குணத்தையே கொள்வீர்களாக. என்னை,

நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவுக்கு முண்டு,

என்பது ஆன்றோர் வாக்காதலின்—வந்தனம்.

## முதலாங்காட்சி

இடம்—விறகுவெட்டியின் வீடு.
காலம்—பிற்பகல்.

[விறகுவெட்டிச் சிங்கனும் அவன் மனைவியும் வெவ்வேறு பக்கங்களினின்று வருகின்றார்கள்.]

சிங்கன் மனைவி.—என்ன இப்போதுதானா வருகிறாய்? [இதுவும் மேலிரண்டு காட்சிகளும் வாசிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும் வண்ணம் கூடியவரை இலக்கண நடையிலே எழுதப்பட்டுளதேனும், நடிக்கப்பெறும்போது, நாட்டுப்புறத்துக்கு ஏற்றபடியே நடிக்கப்படல் வேண்டும்.]

சிங்கன்.—ஆம் ஆம், என்ன பண்ணுகிறது? விறகு விற்கிறதென்றால் என்ன, அத்தனை லேசா, விறகோ விறகு, விறகோ விறகு என்று எத்தனை தரமோ கத்திக்கத்திக் கூவினாலும், ஏனென்று கேட்பார் எவரும் இல்லை. அரைப் பணத்துக்குத் தருகிறையா. அரையரைக் கால் பணம் வைச்சுக்கொள்கிறையா. முக்கால் பணத்துக்கு வருமா என்று கேட்கிறார்கள். கடைசியாய்ப் படாத கஷ்டமெல்லாம் பட்டுக் கெஞ்சாத கெஞ்செல்லாம் கெஞ்சி ஒரு பணத்துக்கு விற்றுவந்தேன்.

மனைவி.—அதென்ன முடிச்சு?

சிங்கன்.—அதுதான் நீ சொன்னாயே, ஒரு துட்டுக்கு உப்புப்புளி வெங்காயம், அரைத் துட்டுக்குச் சருகு போயலை பாக்கு இதுகள் வாங்கிக்கொண்டு, அப்படியே கம்மாளத்தெருவுக்குப் போய், அன்றைக்குச் சண்முகனாசாரியிடம் துவையக் கொடுத்திருந்த கோடாலியையும் வாங்கிக்கொண்டு வருகிறேன். அந்தப் படுபாவி இந்தக் கோடாலியைத் துவைகிறதுக்கு ஒரே சாதனையாய்ச் சாதிச்சு நாலரைத் துட்டு வாங்கியே போட்டான். பாக்கி ஒன்பது சல்லியும் இதோ கொண்டுவந்திருக்கிறேன். அப்பா என்ன வெய்யில்! என்ன கஷ்டம்! இந்தக் கஷ்டப்பட்டும் கையில் காசு நின்ற பாட்டைக் காணோம்.

மனைவி.—என்னுங்காணும் வீட்டுக்காரரே, எத்தனை நாட் சொன்னாலும் கேட்கவேமாட்டேன் என்கிறாயே. இப்படியிருந்தால் நம் தரித்திரம் என்றைக்குத்தான் தொலைகிறது. எப்படித்தான் தொலைகிறது. என்றைக்குத்தான் நாமும் நாலாம் பேரோடு அஞ்சாம்பேராய் முன்னுக்கு வருகிறது. எதிர்த்தவீட்டு இருஞ்சடையனைப் பாரு. அடுத்தவீட்டு ஆதியப்பனைப் பாரு. பக்கத்துத்தெரு பழனியாண்டியைப்பாரு. அவர்கள் சொத்துச்சுதந்தரங்களென்ன, வீடு வாசலென்ன, ஆடுமாடு கன்று காலிகளென்ன, நிலங்கரை காணி பூமி தோட்டம் துரவுகளென்ன, அவர்கள் பெண்டாட்டி பிள்ளைகள் இருக்கிற மாதிரியைப் பாரு. அவர்கள் சேலைத்துணிகளென்ன, நகை நட்டுகளென்ன, அவர்களெல்லாம் இப்படியிருக்க நம்மைப் பாரு. அட, இருக்கத்தான் ஒரு நல்ல வீடு வாசலுண்டா? அல்லது கட்டிக்கொள்ளத்தான் ஒரு நல்ல துணிமணியுண்டா? அல்லது காதிலே கழுத்திலே, ஏதாவது நகை நட்டுப் பொட்டுப் பொருளுண்டா? இந்த மாதிரி எத்தனை நாளைக்குத்தான் காலம் தள்ளுகிறது?

சிங்கன்.—அதற்கு என்னை என்னடி பண்ணச் சொல்லுகிறாய்? அதைச் சொல்லேன்.

மனைவி.—அதுதான் நான் ஆதிமுதல் சொல்லிக்கொண்டே வருகிறேன். எங்கேயாவது போய், எப்படியாவது, கவிபாடக் கற்றுக் கொண்டு வந்து ராஜாமேலே பாட்டுக்கட்டி, அவரிடம்போய் அடிக்கடி இனம் வாங்கிக் கொண்டு வந்தால் நம் தரித்திரம் தொலைந்து போம். பரமாயி புருஷனைப் பாரு. சும்மா சும்மா ராஜாவிடம் போகிறது. பாட்டுப் பாடுகிறது. பரிசு வாங்குகிறது. இதுதான் வேலை. அவளிருக்கிற மாதிரியையும்பாரு. நாம் இருக்கிற மாதிரியையும் பாரு. சரி. என்பாடு இப்படி இருக்கட்டும். உன் பாட்டைத்தான் பாரேன். கால்வயிறு கஞ்சியைக் கரைச்சுக் குடிச்சுவிட்டு, கால் கடுக்கக் காட்டுக்கு நடந்து கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் மேட்டிலும் சுற்றித்திரிஞ்சு கை கடுக்கக் கோடாலி பிடிச்சு வெட்டி, தோள் கடுக்கச் சுமந்துகொண்டு வந்து தெருத்தெருவாய் அலைஞ்சு திரிஞ்சு வித்துக்கித்துப் பார்த்தாலும், அரைவயிற்றுக் கஞ்சிகூட ஆகவில்லை. எண்டாப்பா! இத்தனைபாடு. எங்கேயாவது போகிறது. பாட்டுக் கட்டப்படிக்கிறது, ராஜா கிட்டப்போகிறது, பாடுகிறது. கொடுக்குங் கொடையை வாங்கிக்கொண்டு வருகிறது. தீர்ந்தது எல்லாம். இதைச்செய்யென்றால் ஒன்றையுங் காணோம்.

சிங்கன்.—செய்யலாம் செய்யலாம்.

மனைவி.—என்றைக்கு.

சிங்கன்.—என்றைக்காவது ஒரு நாளைக்கு,

மனைவி.—சரித்தான். உனக்கு இதுதான் தெரியும். இப்போப் போகிறேன், அப்போப் போகிறேன், இந்தா போகிறேன், அந்தாபோகிறேன், என்கிறது. நெருக்கிக் கேட்டால் நாளைக்குப்போகிறேன் என்கிறது, நாளைக்கு, நாளைக்கு, நாளைக்கு, அந்த நாளைக்கு; என்றைக்குத்தான் வருமோ? இங்கேபாரு, இதெல்லாம் இனிமுடியாது, நான் ஒரே தீர்மானம் செய்தே போட்டேன். இதோ ஒரு நொடிக்குள்ளே கட்டிச் சோறு கட்டி விடுகிறேன். நீ அவசியம் புறப்பட்டுப் போய்க் கவிபாடக் கற்றுக்கொண்டு வரவேண்டியது.

சிங்கன்.—நிசந்தானா?

மனைவி.—நிசந்தான்.

சிங்கன்.—கட்டாயமா?

மனைவி.—கட்டாயமாய்.

சிங்கன்.—இல்லா விட்டால்?

மனைவி.—இல்லாவிட்டால் வீட்டுக்குள்ளேயேவரக்கூடாது. பார்த்துக்கொள், அடைத்த கதவையும் திறக்கமாட்டேன். போட்ட தாழ்ப்பாளையும் எடுக்கமாட்டேன்.

சிங்கன்.—அப்படியா?

மனைவி.—அப்படித்தான். நீ வேணுமென்றால் பாரேன்.

சிங்கன்.—அப்படியென்ன, பாட்டுப்பாடுகிறது ஒருமலையா? எப்பேர்ப்பட்ட பெரிய மரங்களை யெல்லாம் வெட்டிப்போடுகிறேன். எவ்வளவு கனத்த பாரத்தையெல்லாம் தூக்கிவிடுகிறேன். கவிபாடுகிறது ஒருகஷ்டமா? ஏதோ எடுத்தேறிப்போக வேணுமே என்கிறது தான் கொஞ்சம் மலைச்சேன். சரி, நீ கட்டிச் சோற்றைக்கட்டு, நான் புறப்படுகிறேன்.

மனைவி.—சரி, சரி. இதல்லோ ஆண்பிள்ளைக்கழகு.

## இரண்டாம் காட்சி

இடம்—காடு.

காலம்—மதியம்.

[விறகுவெட்டிச் சிங்கனும் அவன் நண்பனான வேடனொருவனும் சந்திக்கின்றார்கள்.]

ராமன்.—எண்டா சிங்கா?

சிங்கன்.—என்னடா ராமா?

ராமன்.—எங்கடாப்பா போகிறை கட்டிச் சோறுங்கையுமாய்? வெகு தூரமோ?

சிங்கன்.—இல்லை. இப்படிக் கொஞ்சம் வந்தேன்.

ராமன்.—ஜோலி?

சிங்கன்.—கவிபாடக் கற்றுக்கொள்ள.

ராமன்.—அடடா கவிபாடக்கற்றுக்கொள்ளவா வந்தை. ரெம்பநேர்த்தி. ஏது அந்தத் துறையிலே இறங்கிவிட்டாய்?

சிங்கன்.—ஏதோ மனசு அப்படிப்போச்சு. அந்தவழியிலே தானே நாமும் போகணும்.

ராமன்.—அடடா! புத்திசாலி, ஏதாவது கவிகிவி கட்டியிருக்கிறயா?

சிங்கன்.—ஆகா கட்டியிருக்கிறேன்.

ராமன்.—யார் கற்றுக்கொடுத்தது?

சிங்கன்.—இதென்ன இப்படிக் கேட்கிறாய். அறிவாளிக்குக் குருவென்னத்துக்கு? நானே தான் கட்டினேன். இதெல்லாம் என்ன எனக்கொரு துரும்புதானே.

ராமன்.—உன் சாமர்த்தியம் வருமா. எப்படிக் கட்டினாய், என்றுதான் சொல்லேன்.

சிங்கன்.—வீட்டிலிருந்து காட்டுக்கு வந்தேன். வருகிற வழியில் சின்னப்பிள்ளைகள் பொம்மை வைத்து விளையாடிக்கொண்டு மண்ணுண்ணி மாப்பிள்ளையே என்று சொல்லக் கேட்டு அதை ஞாபகம் பண்ணிக்கொண்டேன். அப்புறம் போனேன். ஒரு ஆலமரத்தடியிலே பிள்ளையார் இருந்தார். உடனே ஆலமர நாயகனே என்றேன். அப்புறம் அந்தப் பிள்ளையார் கோவிலிலே ஒரு பெருச்சாளி ஓடக்கண்டு உங்களப்பன் கோவிற் பெருச்சாளி என்றேன். அப்புறம் காலையிலே காக்காய் காவென்று கத்தக்கேட்டுக் காவிறையே என்றேன். அப்புறம் சோலையிலே குயில் கூவென்று கூவக்கேட்டுக் கூவிறையே என்றேன். தீர்ந்தது பாட்டு.

ராமன்.—அடே இதுவும் நல்ல மாதிரிதான். எங்கே பாட்டை முழுதும் படி பார்ப்போம்.

சிங்கன்.—[நாட்டுப்புற ராகத்தில் பாடுகின்றான்.]

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்கள் அப்பன் கோவிற் பெருச்சாளி
காவி றையே கூவி றையே.

பாட்டு எப்படி இருக்கிறது.

ராமன்.—ரெம்ப நேர்த்தி; ரெம்ப நேர்த்தி.

சிங்கன்.—அடே ராமா நீயுங் கொஞ்சஞ் சொல்லித்தாவேன்.

ராமன்.—எனக்கென்னடா தெரியும் சிங்கா?

சிங்கன்.—ஏதோ தெரிஞ்சதை.

ராமன்.—என்னவோ கன்னாப் பின்னா மன்னாத்தென்னா என்று படியேன்.

சிங்கன்.—அப்படியே படிக்கிறேன். என்ன அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டியது தானே. என்னடா சொல்கிறை ராமா? இவ்வளவு போதும். இதற்குமேலே பாடினால் பாட்டும் நீளமாய்ப்போகும். கேட்கிறவர்களுக்குப் புளிச்சுப்போகுமல்லோ.

ராமன்.—வாஸ்தவம், வாஸ்தவம், அப்புறம் சிங்கா நீ என்ன இந்தப்புறம் போகிறையோ,

நான் அந்தப்புறம் போகிறேன், போய் வரட்டுமா.

சிங்கன்.—நீ அந்தப்புறம் போகிறாயாக்கும். சரி போய்விட்டுவா. எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம். [வேடன் போய்விடுகின்றான்.]

எல்லாம் தொட்டால் தீர்ந்தது.

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்கள் அப்பன் கோவிற் பெருச்சாளி
காவிறையே கூவிறையே
கன்னப் பின்ன மன்னத் தென்ன.

## மூன்றாங்காட்சி

இடம்.—விறகுவெட்டியின் வீடு.

காலம்.—காலை.

[விறகுவெட்டியின் மனைவி வருகின்றாள்.]

சிங்-மனைவி.—திங்கள் ஒன்று, செவ்வாய்ரெண்டு, புதன் மூன்று. மூன்று நாளாகியும் போன மனுஷன் வரக்காணோமே. அன்ன நடை நடக்கப்போய்த் தன்னடையும் போய்விட்டது போலவும், உருட்டிக் கொட்டப் போய் உள்ள தாளமும் போய்விட்டதுபோலவும், ஏதோ வீட்டிலிருந்தாலும் விறகுவெட்டியாவது வயிற்றுப்பாடு சரியாய்போகும். இப்போ அதுவும் போச்சு. பிள்ளை வரத்துக்குப் போய்ப் புருஷனை இழந்தாள்என்ற பழமொழி போல, போன மனுஷனுக்குத்தான் என்னமோ ஏதோவென்று மனம் துள்ளித் துடிக்குதே. காடோ செடியோ, மேடோ பள்ளமோ, ஆறோ குளமோ, புலியோ சிங்கமோ, பாம்போ பல்லியோ, பேயோ பிசாசோ, ஐயையோ எத்தனைதான் இழவு காட்டிலே இருக்கிறது. பாவம் சும்மா வீட்டிலிருந்த மனுஷனை நானல்லவோ வலியப் போகச்சொன்னேன். மனமெல்லாம் பதறுதே. [சற்று தூரத்தே வருகின்ற சிங்கனைப் பார்க்கிறாள்]

ஓகோ அவருக்கும் வயசு நூறுதான். இன்னும் காணோமே என்று சொல்லி வாய் மூடுவதுக்கு முன்னே வந்துவிட்டார். ஏதோ முகத்தைப் பார்க்கும்போதே பாட்டுக்கட்டிக் கொண்டு வருகிறாற்போல்தான் தெரிகிறது.

[சிங்கன் வருகின்றான்]

வா வா வீட்டுக்காரரே! சாமி தயவாலே சேமமாய் வந்தையே. அதுவே போதும். உன்னைப் பார்க்கும்போதே போன காரியமும் பழந்தான்போல இருக்கிறது. எங்கே! பாட்டுக் கட்டிக்கொண்டு வந்தையோ?

சிங்கன்.—இதென்ன நீ கூட இப்படிக் கேட்கிறாய்?

மனைவி.—என், என்?

சிங்கன்.—இதென்ன இதற்கென்று கட்டிச் சோறு கட்டிக்கொண்டு கவிபாடக் கற்றுக் கொள்ளக் காட்டுக்குப் போகிறது. வெறுங் கையை வீசிக்கொண்டு திரும்பி வருகிறதா? என்னை யாரென்று நினைத்தாய்?

மனைவி.—ஏதோ தெரியாமல் கேட்டுவிட்டேன். கோபித்துக்கொள்ளாதே. கட்டின பாட்டும் நல்லதுதான் போல இருக்கிறது. எப்படிக் கற்றுக்கொண்டாய்?

சிங்கன்.—வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

மனைவி.—இல்லை, தெரியாமல்தான் கேட்கிறேன்.

சிங்கன்.—அறிவாளிக்குக் குருவென்னத்துக்கு என்று பழமொழி கேட்டதில்லையோ? நானேதான் பாடினேன். கடைசியிலேமட்டும் நச்சம்பட்டி ராமன் கொஞ்சம் சேர்த்துக் கொடுத்தான்.

மனைவி.—எங்கே, கட்டிய கவியைப்பாடேன் பார்ப்போம்.

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவிறையே கூவிறையே
கன்னப் பின்ன மன்னத் தென்ன.

மனைவி.—என்னாங்காணும் வீட்டுக்காரரே, பாட்டு ரெம்ப நேர்த்தியாய்த் தானிருக்கிறது. ஆனால், இதென்ன பரம்பரை ஆண்டியோ பஞ்சத்துக்காண்டியோ, என்று பழமொழி சொன்

ளுற்போல, பேரையுங்காணோம் ஊரையுங் காணோம்.

சிங்கன்.—அதென்ன அப்படிச்சொல்கிறை?

மனைவி.—யார்மேலே பாட்டுப் பாடுகிறு யோ அவர்களுடைய ஊரு பேரு, பட்டம் கிட்டம், ஏதாவது வைச்சுப் பாடினல்தானே கேட்கிறவர்களுக்குப் பிரியமாயிருக்கும்.

சிங்கன்.—அதற்கு நீதான் ஒரு யோசனை சொல்லேன்.

மனைவி.—யோசனை யென்ன, ராஜாபேரைச் சேர்த்துக் கொள்ளவேண்டியதுதான்.

சிங்கன்.—எப்படி ?

மனைவி.—எப்படி! குலோத்துங்க சோழ மகா ராஜாவே என்று தான்.

சிங்கன்.—ஆகா நல்லமாதிரி.

மனைவி.—எங்கே எல்லாவற்றையும் சேர்த்துப் பாடு பார்ப்போம்.

(பாடுகின்றான்)

மண்ணுண்ணி மாப்பிள்ளையே ஆலமர நாயகனே
உங்க ளப்பன் கோவிற் பெருச்சாளி
காவி றையே கூவி றையே
கன்னுப் பின்னு மன்னுத் தென்னு
குலோத்துங்க சோழ மகா ராஜாவே
எப்படியிருக்கிறது?

மனைவி.—ஆகா வெகு நேர்த்தி; வெகு நேர்த்தி.

சிங்கன்.—அவ்வளவுதானே.

மனைவி.—அவ்வளவுதான், நெடுநெடு என்று ராஜாவிடம் போகவேண்டியது. இதை மடமடவென்று பாடவேண்டியது. கொடுக்கிற கொடையை வாங்கிக்கொண்டு சரசரவென்று வரவேண்டியது.

சிங்கன்.—இவ்வளவுதானே, கொஞ்சங் கஞ்சித்தண்ணீர் ஏதாவது கொடு. குடிச்சுவிட்டுப் போகிறேன்.

மனைவி.—அப்புறம் என்ன, மறந்திட்டு வந்துவிடுவையோ ?

சிங்கன்.—என்ன!

மனைவி.—ராஜா கொடுக்கிறதை வாங்கிக் கொண்டு சும்மா வந்துவிடாதே. நான் சொல்லுகிறபடி செய்யவேணும்.

சிங்கன்.—என்ன செய்யவேணும் ?

மனைவி.—என்ன, இனம் வாங்கினவுடனே நேரே ஜவுளிக் கடைக்குப்போய், நல்ல சேலையாய் இருபுறத்திலும் ஒரு சாண் அகலத்திலே கெண்டைபோட்டு நல்ல மினுக்காயிருக்கிற சேலையிலே எனக்கொரு சேலையெடுத்துக் கொள். உனக்கு நல்லசாயவேஷ்டி சரிகை உருமால், எடுத்துக்கொள். அப்புறம் பூவு சந்தனம், வெற்றிலை பாக்கு, பழம் பலகாரம், இதுகளெல்லாம் ஒரு கூடை நிறைய வாங்கிக்கொண்டு, போனல்போகுதென்று அரைரூபாய்க்கு ஒரு மணிகட்டின குதிரை வண்டி வைச்சுக் கொண்டு, பார்க்கிறவர்களெல்லாம் இதென்ன இதென்னவென்று சொல்லும்படி ஜலஜலஜலஜலவென்று வீட்டிலே வந்து இறங்கவேண்டியது. அப்படிச் செய்வீராங்காணும் வீட்டுக்காரரே.

சிங்கன்.—தடையென்ன, அப்படியே செய்கிறேன்.

மனைவி.—ஆகா இதுவல்லோ சாமர்த்தியம். சரி, வா, ஏதாவது தண்ணீர் கஞ்சி தருகிறேன். இன்றைக் கோடாகிலும் நமது தரித்திரம் ஒழியட்டும்.

---

பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரப் பத்திரிகைகள்.—பிழைக்கும் வழி, விவேகபோதினி, சக்ரவர்த்தினி, வித்தியாபானு, பிரபஞ்சம், ஹிதகாரிணி, விவேகசிந்தாமணி.

மாதம் இருமுறை பதிப்புகள்.—இந்து சாதனம், உதயதாரகை.

வாரப் பதிப்புகள்.—திராவிட தீபம், நீலலோசினி, தேசாபிமானி, லோகானுகூலன், இந்தியா, சூரியோதயம், லோகோபகாரி, யூனைடெட் இந்தியா, சந்திரிகை, பாண்டியன், நகர்கோவில் டைம்ஸ், திராவிடாபிமானி, சிலாங்கூர் வித்யாபாஸ்கரன்.

வாரம் இருமுறைப்பதிப்புகள்.—மைசூர் டைம்ஸ்.

# புஸ்தக விமர்சனம்

**ஸ்ரீ மஹாபாரத வினுவிடை.**—இரண்டாம்பாகம் ஏ. எஸ், கஸ்தூரி ரங்கய்யர், பி. ஏ. எல். டி. ஜெனரல் சப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர்.

இப்புத்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய உடைமைக்காரருக்கு வந்தனம். ஸ்ரீமான்-கஸ்தூரி ரங்கய்யவர்கள் ஸ்ரீ மஹாபாரதக் கதையைச் சுமார் 400 பக்கங்களடங்கிய இரண்டு புஸ்தகங்களில் சுருக்கியுரைத்தது வெகு அற்புதமான காரியம். தமிழ் நடை தெளிவாகவும் ருசிகரமாகவும் இருக்கிறது. அச்சு, காகிதம் முதலியவைவெல்லாம் வெகு சிலாக்கியமே. ஆனுல் ஒரு விஷயத்தில் மட்டும் நமக்கும் அய்யரவர்களுக்கும் அபிப்பிராய பேதம் இருக்கிறது. வினுவிடையாகச் சோபிக்கக்கூடிய விஷயங்கள் சில; கதையாகவே சோபிக்கக்கூடிய விஷயங்கள் சில; உதாரணமாக ஸ்ரீபகவத்கீதை வினுவிடையாகத்தான் சோபிக்கக்கூடியது. 'காண்டவ தகனம்' கதையாகத்தான் சோபிக்கும். ஆதலால் ஐயரவர்கள் இனி எதாகிலும் புராணங்கள், இதிஹாஸங்கள் இவைகளைப் பாலர்களுக்காக இதே நடையில் எழுதுவதாயிருந்தால், இங்கிலீஷில் ஏ. ஜே. சர்ச்சு துரை கிரீக்கு புராணங்களை எழுதியிருக்கும் மாதிரி எழுதித் தமக்கும் படிப்போருக்கும் பூரண சுகம் விளைவித்துக் கொள்வாராக.

ஐவன் ஹோ ஸாரஸங்கிரகன்.—எஸ். பஞ்சாபகேசு சர்மா, பி ஏ. யும், வி. ராஜகோபால அய்யங்காரும்.

இச்சிறு புஸ்தகத்தைப் பார்வைக்காக அனுப்பிய உடமைக்காரருக்கு வந்தனம். இங்கிலீஷ் வாசிப்பவர்களில் ஸ்காட்டு நாவல்களைப் படித்து ஆனந்தமடையாதவர்கள் கிடையாது. ஆதலால், அந்தக் கதைகளைத் திராவிட ஜனங்களும் படித்துச் சுகப்படவேண்டி நடத்தும் பிரயத்னத்தை நாம் சரியென்றே அங்கீகரிக்கிறோம். ஆனுல், ஸ்காட்டு துரை எழுதிய நாவல்களில் பல ஐரோப்பியப் பூர்வ சரிதங்களையும், தேசாசாரங்களையும் முக்கியமாகக் கொண்டனவாதலால், ஐரோப்பிய சரித்திரந் தெரியாதவர்களுக்கு, விசேஷ ருசியுண்டாவது சிரமசாத்தியம். அதையாவது ஒருவாறு சரிப்படுத்திக்கொண்டு போகலாமானுலும், பழைய பெயர்கள் அநேகம் இங்கிலீஷில் படிப்பவர்களுக்கே சிரமத்தை விளைவிப்பன. "பிரையன் டிப்பாகில் பர்ட்டு" என்பதைத் தேரில்வைத்திழுக்கலாம். ஆதலால், இம்மாதிரி உபத்திரவங்கள் இல்லாமல் கதைகளைச்சொல்ல இஷ்டர்கள் பிரயத்தனப்படுவார்களாகில் அது நமக்கும் சந்தோஷமே. ஐவன் ஹோவைவிட 'டாலிஸ்மான்' போன்ற ஆசிய சம்பந்தப்பட்ட நாவல்களை அதிகமாகச் சுருக்காமல் தகுந்த சித்திரவிளக்கங்களோடு எழுதியும், இந்தியா சம்பந்தமாய் அப்போதப்போது பிரசுரமாகிவரும் நாவல்களை மொழிபெயர்த்தும் வருவது வெகு உபகாரமாயிருக்குமென்று நம்புகிறோம்.

வாசக விஷயத்தில் நாம். இப்புத்தகத்தை வெகுதூரம் சிலாகிக்கிறோம். அச்சு, கடுதாசி விஷயங்களில் நாம் சொல்லவேண்டியதொன்றுமில்லை. அநேக அத்தியாயங்கள் சாமான்னியமாய் யாரும் படித்து சந்தோஷிக்கத் தக்கதுதான். விலை சரசம்.

***

## பாங்கிப்பூரில் மிஸஸ் அன்னிபெஸண்ட்

சில தினமுன் அன்னி பெஸண்ட் அம்மை பாங்கிப்பூரில் மிஸ்டர் சயித்ஹஸான் இமாமின் அக்கிராசனத்தின் கீழ் மதபேதமும் ஜாதிபேதமும் கூடாவென்றும், சகல ஜனங்களும் ஒரே மதத்தை யனுஷ்டிக்க வேண்டுமென்றும், பிரமஞானம் ஜாதிமதபேதங்களை ஒழிக்கத் தலையெடுத்திருக்கும் சமயம் ஆகுமென்றும், பிரமஞான சமயம் சகல ஜனங்களுக்கும் சகோதர பாவத்தையே கற்பிக்கிறதென்றும், அச்சமயக்கொள்கைகளை வற்புறுத்திப் பேசியதுமன்றிப் பிரமஞான சமயத்தார் சுதேசியத்தையும் காங்கிரெஸ் மகாசபையையும் இந்தியதொழில் அபிவிருத்தியையும் முற்படுத்துவதில் முன்னுக்கு வந்து அக்கறை காட்டி யிருக்கிறார்களென்றும் சொன்னதுமன்றிக் காசி ஸெண்டிரல் ஹிந்து காலேஜில் கலியாணமான பிள்ளைகளைச் சேர்ப்பதில்லையென்று ஏற்பாடு நடைபெறுவதுபோல இந்நாட்டில் பள்ளிக்கூடம் வைத்து நடத்தும் பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் கலியாணமான பிள்ளைகளைச்சேர்க்கிறதில்லையென வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னுர். கடைசியாக இந்தியத் திருத்தங்களை அமுலுக்குக்கொண்டுவந்ததற்காக ராஜப்பிரதிநிதி லார்ட் மிண்டோவுக்கு நன்றி செலுத்திவிட்டுப் பள்ளிக்கூடச்சிறுவர்கள் அராஜக உணர்ச்சிக்கு இடங்கொடுத்தலாகிய தீயவழியிலிருந்து விலகியிருக்கவேண்டுமென்று சொல்லி முடித்தார்.

## சமாசாரக் குறிப்புகள்

வாஸுதேவ பட்டாசாரியரென்னும் பங்காளக் குமாரரை அங்கிலேயத் தருணியொருவள் சுயம்வரமாகக் கல்யாணஞ் செய்து கொண்டதாகவும், பிறகு தன்னுடைய ஸ்திரீ தனத்திலிருந்து பணங் கொடுத்து அமெரிக்காவுக் கனுப்பியதில், தோல் பதமிடும் தொழிற் கற்றுவருவதற்காக அவர் போயிருப்பதாகவும், இந்த விவரங்களையெல்லாம் கண்டு மாமனாருக்கு அந்தப் பெண் ஒரு கடுதாசி யெழுதி அவருக்கு மனவருத்த முண்டாகாம லிருப்பதற்காகக் கல்யாணத்திற்கு முந்தி, தான் ஹிந்துவாகிவிட்டதாகத் தெரிவித்ததாயும், கல்கத்தாரால் ஒரு வதந்தி.

***

பங்காள ஆசார விமாசன சங்கத்தவர் சோடா நாகப்பூரில் தீண்டாத வர்க்கத்தவரை உத்தாரஞ் செய்வதற்காகச் சில பெயர்களைத் தயார் செய்து அனுப்பியிருக்கிறார்களாம். அதற்குச் சகாயமாக ஸ்ரீமான்-கோகலே அவர்கள் "இந்தியா சேவகர்களில்" ஒருவரை அனுப்பிக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்களாம்.

***

அமெரிக்காவில் ஸான் பிரான்ஸிஸ் கோவில் ஒரு இந்துதேவாலயம் நிர்மாணமாகிச் சென்ற 1908-ம் ௵ ஏப்ரல் மாசத்தில் ஸ்ரீராம கிருஷ்ண வர்க்கத்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கட்டடம் தாஜ்மஹால் போன்று, ஹிந்து, மகம்மதீய, கிறிஸ்தவ கோயில்களின் சிற்பலக்ஷணங்களெல்லாம் பொருந்திப் பார்க்க வெகு சேர்த்தியாகவிருக்கிறதென்றும், அதில் தெய்வத்தை வழிபடுபவர்கள் எல்லோரும் அமெரிக்கரென்றும் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

***

மன்னார்குடியில் வெகு காலமாகத் தழைத்து வந்திருக்கும் பிண்டிலே காலேஜில் படிக்கும் பிள்ளைகளில் இரண்டொருவரைப் பெற்றோர்களுக்குத் தாக்கவில்லாமல் கிறிஸ்து மதத்திற்குச் சேர்க்கப் பிரயத்தனம் நடந்ததாகவும், அதனால் ஜனங்களுக்கு ஆக்கிரகம் வலுத்து, மிஷன் கோவிலுக்கு நெருப்பு வைத்ததாகவும், பிறகு ஜனங்களுக்குள் குழப்பம் அதிகரிப்பது கண்டு, வெகு நாளாக பிரின்சுபாலாயிருக்கும் டேவி துரை தக்க முயற்சியெடுத்துப் பிள்ளைகளை வாப்சு செய்துவிட்டதாகவும் சமாசாரம். நமது ஜனங்களுக்கு மதம் ஆசாரம் முதலிய விஷயங்களில் வாஸ்தவத்தில் பற்றிருக்குமாகில் அங்கிலேய தேசத்தில் பெற்றோர்கள் எவ்வாறு நடக்கிறார்களோ அதையனுசரித்து நடப்பதுதான் உத்தம பக்ஷம் அதாவது, கிறிஸ்தவர்களுக்குள் அனேக சில்லரைக் கக்ஷிகளிருப்பதில் ஒவ்வொரு கக்ஷியாரும் தமக்கென்று பாடசாலைகளேற்படுத்திக்கொண்டு, எந்த நியாயத்தை முன்னிட்டாகிலும், வேறு கக்ஷியவருடைய பாடசாலைகளுக்குத் தம்மக்களையனுப்பாமல் இருப்பதாம். நம்மவர்களுக்கு, அதிலும் பிராம்மணருக்கோ வென்றால், தம் மக்கள் மதப்பற்று, ஆசாரப்பற்றைக் கைவிடார்களென்கிற நம்பிக்கை பூரணமாக விருக்கிறது. திடீரென்று யாராகிலும் ஓர் பையன் இம்மாதிரிப் போனானென்றால், அப்பொழுது இரண்டு நாளைக்குக் கூத்தாடுவதை விட வேறு உபாயம் தோன்றுவதில்லை. யார்பேரில் தோஷமென்று நாம் சொல்லவும் வேண்டுமா?

***

சென்ற லாஹோர் காங்கிரஸில் நடந்த நடவடிக்கைகளில் நிரம்பவும் வியக்கத் தக்கது தென்னாப்பிரிக்காவில் நம்மவர்கள் படும் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகப் பணம் சேர்த்ததாம். ஸ்ரீமான்-பாபு ஸுரேந்திரநாத பானர்ஜி யவர்கள் இவ்விஷயமாய்ப் பேசியானதும், காங்கிரஸ் மண்டபத்தில் எங்கே பார்த்தாலும், ஆரவாரமும், நான் முந்தி நீ முந்தியென்கிற போட்டியும் அதிகரித்ததாகவும், அவரவர்கள் கையிலிருந்தது பணமோ, நோட்டோ, நகையோ, பட்டு முதலிய விலைபெற்ற வஸ்திரமோ, இன்னதென்றில்லாமல் பணமாகக்கூடிய ஒவ்வொன்றையும் முன் பின் யோசிக்காமல் உண்டிகைக் கலசத்தில் போட்டுவிட்டார்களென்றும், வெகு சீக்கிரத்தில் ரூ 18000 வசூலாய் விட்டதென்றுங் கேட்டுச் சந்தோஷிக்கிறோம். நம்மவர்களுக்கு இவ்விதமாக ஆவேசம் வருவது வெகு அபூர்வமாதலால், இத்தருணத்தில் அவ்வாறு ஆவேசமூட்டிய ஸ்ரீமான்-ஸுரேந்திர நாதருக்கு நாம் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறோம். இம்மாதிரியே அவர் தீர்க்க ஜீவியாயிருந்து ஸத்காரியங்களில் நமது ஜனங்களுக்கு விடாமல் உற்சாகம் வரச் செய்து வருவாரென்று நம்புகிறோம்.

'ஹிந்து' 14-ம் தேதிய பதிப்பில் திவான்பஹதூர் ஸ்ரீமான்-ரகுநாதராயரவர்கள் எழுதுகிறார்: "நமது கிராமங்கள் பழையபடி செழித்தால் தான் நமக்கு க்ஷேமம். அவைகளுக்குப் பெருமை குறைந்தால், நாம் துரைத்தனத்தையெவ்வளவு தூரம் திருத்தினாலும் பலனற்றுதான் போகும். பஞ்சாயத்து முதலிய கிராம லக்ஷணங்கள் பெருமை குன்றினால் அதற்குத் தாசில்தார்கள்தான் காரணம். இவர்கள் இதுவரை செய்துவந்தபடி குற்றங்கூறுவதொன்றையே விரதமாக வைத்துக்கொண்டால் கிராமங்கள் பாழாகத்தான் போகும். அதையொழித்துக் குணங்கள் செழிக்குமாறு நடந்தால், எல்லோருக்கும் க்ஷேமம். அப்படி நடப்பவர்களுக்கே பதவியுயர்வது நியாயம்." இதற்குச் சந்தேகமேயில்லை. கோ ஆபரேடிவ் ரிஜிஸ்திராரைப் பார்த்து ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் உத்தியோக முறை கற்றுக்கொள்ளவேண்டும்.

## பெண் கல்வி

குவாலியர் ராச்சியத்தில் பெண்களுக்குள் கல்வி அதிகரிப்பதற்காக 'கன்னியா தர்மவர்த்தினி,' 'ஸ்திரீ சிக்ஷகப்பிரசாரிணி,' யென்று இரண்டு சங்கங்கள் உழைத்துவருவதில், சமீபகாலத்தில் அவைகள் மூலமாகவும், சர்க்கார் மூலமாகவும் நடந்துவரும் இரண்டொரு காரியங்களை யெல்லோரும் கவனிக்க வேண்டும். முதலாவது, பள்ளிக்கூடத்தில் உழைத்து வரும் உபாத்திமார் தங்கள் பத்தினிகளுக்குக் கல்விகற்பித்துப் பெண்கள் பாடசாலை யேற்படுத்தி அவைகளில் அவர்களை அமர்த்துவது. அப்படிச்செய்பவருக்குச் சர்க்கார்கிராண்டு ஏராளமாகக் கிடைக்கும். இரண்டாவது, ஏதோ ஒரு தரத்திற்குக் குறையாமல் படிப்பேறிய பெண்குழந்தைகளுக்குக் கல்யாணத்திற்கு 'உதவிதனம்' கொடுப்பது. இது 'குவாலியர்' ஒழிய வேறு எவ்விடத்திலுங் காணாத அதிசயம், நமது தேசிய அரசர், அவர்களுடைய ராணிமார். இவர்களுக்குத்தான் இம்மாதிரியுபாயங்கள் சாத்தியமாகும்.

⁂

பார்லிமெண்டு எலக்ஷன் விஷயமாய் நாம் எழுதியபின், 'இந்தியன் மிரர்' என்னும் நமது நண்பர் எழுதியிருப்பதைப் பார்த்தோம். இந்தியாவில் எல்லா மதஸ்தரும் ஒருங்கு சேர்ந்து அவரவர் கோவில்களில் சம்பிரதாயப்படி பூஜைகள் செய்து லிபரல் கக்ஷியார் மறுபடி அதிகாரம் வகிக்கவேண்டுமென்று கடவுளை வணங்குவது அவசியமென்றும், அப்படியில்லாமல், எதிர்க்கக்ஷியார் அதிகாரத்திற்கு வந்தால் அதனால் நமக்கு அனர்த்தம் விளையுமென்றும், இந்த இஷ்டருடைய அபிப்பிராயம்.

⁂

இதுவரை நடந்திருப்பதில் நமக்கு வேண்டியவர்களில் ஸர்ஹென்ரி காட்டன் துரை விலகநேரிட்டது நாம் வெகுதூரம் விசாரப்படவேண்டியதே. எவ்வளவு கஷ்டநிஷ்டூரங்களையும் சகித்து, எதிர்க்கக்ஷியோர் திட்டுவதைச் சிறிதும் மதியாமல், தமது வமிச தருமத்தை யனுசரித்து இந்தியாவின் க்ஷேமத்தையே நாடி நாளதுவரை இவர் உழைத்து வருவதில், பார்லிமெண்டில் இவர் இல்லாமற்போனது நமக்குக் குறைவுதான். இப்படியானதற்கு இவர் தேகஸ்திதி அனுகூலமில்லாமற்போனதே காரணமென்று காணுகிறது.

## இலவசப் படிப்பு

பிரைமெரி படிப்பை இலவசப் படிப்பாக்கிவிடவேண்டுமென்று எல்லா இடங்களிலும் வெகுகாலமாக முயற்சி செய்யப்படுகிறது. பரோடாவில் முதலில் ஏற்பாடாயிற்று. இப்போது லாகூர் முனிசிப்பாலிட்டியாரும் ஒரு வருஷத்துக்குச் செய்து பார்ப்போமென்று முன் வந்திருக்கிறார்கள்.

## அன்னிபெசண்டின் ஸர்வகலாசாலை

மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்களுக்குத் தாம் ஸ்தாபிக்க விரும்பும் ஸர்வகலாசாலையின் விண்ணப்பம் ஒன்று அனுப்பியிருக்கிறார். அந்த ஸர்வகலாசாலையின் முக்கிய நோக்கம் பின்வருமாறு—மதமும் சன்மார்க்கமும் கற்பித்துக் கொடுப்பது; அறிவின் அளவைக் குறிக்கும் அடையாளமாக மாத்திரமில்லாமல் யோக்யதையுடைய மனிதர்களை யுண்டுபண்ணுவது, இந்தியா தேசத்து தத்துவம், சரித்திரம், பாஷா ஞானம், விவசாயம், கைத்தொழில், பின்னும் தேவையாயிருக்கிற இந்தியத் தொழில்களுக்கு ஆவசியகமான சாஸ்திரஞானம், பின்னும் ஸமூக விருத்திக்கு முக்கியப்பட்ட விஷயங்கள் எல்லாம் கவனிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கமிட்டியில் டிரஸ்டிகளாயிருப்பவர் யாவரும் இந்தியர்கள்தான்.

# VIDYA VIHARINI

## AN ILLUSTRATED TAMIL MONTHLY

Edited by, C. N. KRISHNASAWMY AIYAR, M.A., L.T.,

Devoted to Literary, Scientific and Industrial subjects furnishing plenty of light reading matter in addition to useful notes and jottings of practical value.

**SOME PRESS OPINIONS**

*The United India*:—The Magazine supplies a real want among the Tamil—speaking people. The articles are written in a vigorous style and there is a freshness and up-to-dateness about them. Even those English knowing Tamilians who look down upon Tamil Journals and books as beneath "dignity" may profitably peruse the new monthly.

*The Madras Mail*:—Judging from the Standard which the publishers have set before themselves, the Vidya Viharini is likely to prove a good medium for the Education of the Tamil public.

*The Hindu*:—This is a very useful and neatly got up illustrated Tamil Monthly. The Vidya Viharini, we are sure, will become popular.

**ANNUAL SUBSCRIPTION INCLUSIVE OF POSTAGE Rs. 5 only**

**Ganesh & co., Publishers, Madras.**

# வித்யா விஹாரிணி

## ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம். ஏ., எல். டி., பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 5.

## சில பத்திரிகைகளின் அபிப்பிராயம்

இந்துசாதனம்.—

வித்யா விஹாரிணி.—இது கோயம்புத்தூர் ஸ்ரீமத்-கிருஷ்ணசாமி ஐயரவர்களால் சென்னையில் பிரசுரிக்கப்படும் ஓர் சிறந்தமாதாந்தரப்பத்திரிகை. ஒவ்வொரு சஞ்சியையும் 40-பக்கங்கள் கொண்டன. இதில் சொற்சுவை, பொருட்சுவை பொருந்திய அநேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

சுதேசமித்திரன்.—

தமிழ்ப் பாஷை விருத்திபடைவதற்கும், தமிழ் மக்கள் நலம் பெறுவதற்கும் இப்பத்திரிகை ஓர்சிறந்த சாதனமாக இருக்கிறது என்பதிற் சிறிதும் ஐயமில்லை. தமிழ் அறிந்தார் ஒவ்வொருவர் கையிலும் இந்தப் பத்திரிகை இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

லோகோபகாரி.—

இது ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகையென்பதிலையமில்லை.. நம்மவர் ஒவ்வொருவரும் பார்க்கத் தகுந்ததே.

லோகானுகூலன்.—

இதில், அநேகவிஷயங்கள் அடங்கியுள்ளன. விஷயங்களும் மிக்க அரியபெரிய விஷயங்களாகவே யிருக்கின்றன. இம்மாதிரி திருவுருவப் படங்களுடன் தமிழ்ப்பத்திரிகை இக்காலத்திற்முன் நடந்து வருகின்றதெனச் சொல்லலாம்.

நாகைநீலலோசனி.—

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி யிதன் முதற்சஞ்சிகையாலேயே உலகத்துக்குப் பெரும்பயன் விளைக்கும் என்பது நன்கு தெரிகிறது.

திராவிடாபிமானி.—

இதில் பலவரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. அநேக கல்விமான்களால் எழுதப்பட்டுள்ள அரிய வியாஸங்கள் காணப்படுகின்றன. தமிழ் பாஷை விருத்தியடைவதற்கு இப்பத்திரிகை ஓர் சிறந்த சாதனமாகும்.

**கணேஷ் கம்பெனி, தம்புசெட்டி தெருவு, சென்னை.**



நிஜாம் பஹதூர் அவர்கள், ஜி. ஸி. எஸ், ஐ.